கிலாஃபத் சிறப்பிதழ்

☛ இரண்டாவது இறைவல்லமையான கிலாஃபத் நிரந்தரமானது

☛ கிலாஃபத்தின் அருள்கள்

மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | May & June 2024 | Vol. 3 - Issue No. 6 & 7
Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 94868 58311

## 1908 மே 27-ஆம் நாளில் நிறைவேறிய மகத்தான முன்னறிவிப்பு



இரண்டாவது வல்லமை வெளிப்பட்ட இடத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவு அடையாளம்

1908 மே 27-ஆம் நாள் 'நுபுவ்வத்தின் அடிச்சுவட்டில் கிலாஃபத் மலரும்' என்ற ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாழ்த்துக்குரிய சொற்கள் நிறைவேறிய நாள் ஆகும். அன்றைய தினம் ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீன் (ரலி) அவர்கள் முதலாவது கலீஃபத்துல் மஸீஹாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இந்த நாளில்தான் அஹ்மதிய்யா கிலாஃபத் நிலைநாட்டப்பட்டது.



# திருக்குர்ஆன்

وَعَدَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ وَعَمِلُوا
الصّٰلِحٰتِ لَيَسْتَخْلِفَنَّهُمْ فِى الْاَرْضِ كَمَا
اسْتَخْلَفَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ ۖ وَلَيُمَكِّنَنَّ
لَهُمْ دِيْنَهُمُ الَّذِى ارْتَضٰى لَهُمْ
وَلَيُبَدِّلَنَّهُمْ مِّنْۢ بَعْدِ خَوْفِهِمْ اَمْنًا ۗ
يَعْبُدُوْنَنِىْ لَا يُشْرِكُوْنَ بِىْ شَيْـًٔا ۗ وَمَنْ
كَفَرَ بَعْدَ ذٰلِكَ فَاُولٰٓئِكَ هُمُ الْفٰسِقُوْنَ

மேலும் அல்லாஹ் உங்களுள் நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவர்களை, அவர்களின் முன்னோர்களை கலீஃபாவாக (தலைவராக) ஆக்கியது போன்று இப்பூமியில் கலீஃபாவாக ஆக்குவதாகவும், அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களின் மார்க்கத்தை அவர்களுக்கு உறுதிப்படுத்துவதாகவும், அவன் அவர்களுக்கு அவர்களது அச்சத்தின் நிலைக்குப் பிறகு (அதை) அமைதியின் நிலையாக மாற்றுவதாகவும் அவர்களிடம் வாக்குறுதி அளித்துள்ளான். அவர்கள் என்னை வணங்குவார்கள். எதனையும் எனக்கு இணையாக்க மாட்டார்கள். இதன் பின்னரும் நிராகரிப்பவர்கள் கட்டுப்படாதவர்களாவர். (24:56)



# ஹதீஸ்

تكون النبوة فيكم ما شاء الله أن تكون،
ثم يرفعها الله إذا شاء أن يرفعها، ثم تكون
خلافة على منهاج النبوة فتكون ما شاء الله أن تكون،
ثم يرفعها الله إذا شاء أن يرفعها، ثم تكون ملكًا
عاضًا فيكون ما شاء الله أن يكون، ثم يرفعها إذا شاء الله
أن يرفعها، ثم تكون ملكًا جبرية فتكون ما شاء الله أن تكون،
ثم يرفعها الله شاء أن يرفعها، ثم تكون خلافة
على منهاج النبوة، ثم سكت

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் ஹுஸைஃபா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

"அல்லாஹ் நாடும் வரை உங்களிடத்தில் இந்த நுபுவ்வத் இருக்கும். பிறகு அல்லாஹ் அதை எடுத்துக் கொள்வான். பிறகு நுபுவ்வத் வழியிலான கிலாஃபத் உருவாகும். அல்லாஹ் நாடும் வரை அது இருக்கும். பிறகு அல்லாஹ் அதையும் எடுத்துக் கொள்வான். பிறகு கொடுங்கோல் ஆட்சி இருக்கும். அல்லாஹ் நாடும் வரை அது இருக்கும். பிறகு அல்லாஹ் அதையும் எடுத்துக் கொள்வான். பிறகு பலவந்தமான ஆட்சி ஏற்படும். அல்லாஹ் நாடும் வரை அது இருக்கும். பிறகு அல்லாஹ் அதையும் எடுத்துக் கொள்வான். பின்னர் நுபுவ்வத் வழியிலான கிலாஃபத் இருக்கும்." பிறகு அன்னார் மௌனமாகி விட்டார்கள்.

(முஸ்னது அஹ்மது பின் ஹன்பல் தொகுதி 5 பக்கம் 404)

# இரண்டாவது இறைவல்லமையான கிலாஃபத் நிரந்தரமானது!

## ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்கள்

“அன்பிற்குரியவர்களே! ஆரம்பத்தில் இருந்தே அல்லாஹ்வின் நடைமுறை இதுதான். அவன் எதிரிகளின் இரண்டு பொய்யான மகிழ்ச்சிகளை அழித்துக் காட்டுவதற்காக இரண்டு வல்லமைகளைக் காட்டுகின்றான். எனவே, இப்போது இறைவன் தனது பழமையான அந்த நடைமுறையை விட்டு விடுவது சாத்தியமில்லை. எனவே நான் உங்களுக்கு எடுத்துக் கூறியிருக்கின்ற விஷயங்களில் வருத்தப்படாதீர்கள். உங்கள் உள்ளம் கவலை அடைய வேண்டாம். ஏனெனில் அந்த இரண்டாவது வல்லமையைக் காண்பதும் உங்களுக்கு அவசியம் ஆகும். மேலும் அது வருவது உங்களுக்கு சிறந்ததாகும். ஏனெனில் அது நிரந்தரமானதாகும். அதன் தொடர் மறுமை வரை அறுந்து விடாது. மேலும் நான் செல்லாத வரை அந்த இரண்டாவது வல்லமை வர முடியாது. ஆனால் நான் சென்றுவிட்டால் இறைவன் உங்களுக்காக அந்த இரண்டாவது வல்லமையை அனுப்புவான். அது எப்பொழுதும் உங்களுடன் இருக்கும். இறைவனின் வாக்குறுதி பராஹீனே அஹ்மதிய்யாவில் குறிப்பிடப்பட்டு உள்ளது. மேலும் அந்த வாக்குறுதி என்னைப் பற்றியதல்ல. மாறாக உங்களைப் பற்றியதாகும். நான் உம்மைப் பின்பற்றும் உமது ஜமாஅத்தை மறுமை வரை மற்றவர்களின் மீது மேலோங்கச் செய்வேன் என இறைவன் கூறினான்.



எனவே என்னைப் பிரியும் நாள் உங்களுக்கு வர வேண்டியது அவசியமான -தாகும். அதற்குப் பிறகு நிரந்தரமான வாக்குறுதிக்கான அந்த நாள் வரும். நமது இறைவன் வாக்குறுதிகளில் உண்மை -யானஇறைவனும் நன்றியுள்ளவனும் உண்மையான இறைவனுமாவான். அவன் வாக்குறுதி அளித்த எல்லாவற்றையும் உங்களுக்குக் காட்டுவான். இந்த நாட்கள் உலகத்தின் கடைசி நாட்களாகும். பல துன்பங்கள் இறங்கும் காலமாகும். ஆனாலும் இறைவன் தெரிவித்திருக்கின்ற செய்திகள் அனைத்தும் நிறைவேறும்படி இந்த உலகம் நிலை -பெற்றிருக்கும்.

நான் இறைவனிடமிருந்து ஒரு வல்லமையாக வெளிப்பட்டுள்ளேன. நான் இறைவனின் வல்லமையின் தோற்றம் ஆவேன். மேலும் எனக்குப் பிறகு இன்னும் சிலர் தோன்றுவார்கள். அவர்கள் இறைவனின் இரண்டாவது வல்லமையின் தோற்றமாக இருப்பார்கள். எனவே நீங்கள் இறைவனுடைய இரண்டாவது வல்லமையை எதிர்பார்த்தவாறு ஒன்று சேர்ந்திருந்து துஆ செய்து கொண்டிருங்கள். ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு நல்லவர்களின் ஜமாஅத்தும் ஒன்றுகூடி துஆவில் ஈடுபட்டிருக்க வேண்டும். அதன் மூலம் இரண்டாவது வல்லமை விண்ணிலிருந்து இறங்கி உங்கள் இறைவன் எப்படிப்பட்ட வல்லமை மிக்க இறைவன் என்பதை உங்களுக்கு காட்டட்டும்.”

(அல் வஸிய்யத் (உயில்) பக்கம் 10-11)

“அல்லாஹ் உங்களுள் நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவர்களை அவர்களின் முன்னோர்களை கலீஃபாவாக ஆக்கியது போன்று பூமியில் கலீஃபாவாக ஆக்குவதாக வாக்குறுதியளித்துள்ளான். (24:56) என்பது பொதுப்படையானது என்பதை சிலர் மறுத்தவாறு மின்கும் (உங்களுள்) என்றால் சஹாபிகளையே குறிக்கும். கிலாஃபத்தே ராஷிதா அவர்களின் காலத்திற்குள்ளேயே முடிந்து விட்டது. பிறகு மறுமை வரை இஸ்லாத்தில் இந்த கிலாஃபத்தின் பெயரும் அடையாளமும் கூட எஞ்சி இருக்காது. அதாவது, அந்த கிலாஃபத் கனவுகளைப் போன்று வெறும் 30 ஆண்டுகளைக் கொண்ட காலகட்டமாகவே இருந்தது. பிறகு இஸ்லாம் மீட்பில்லாத துர்பாக்கியத்தில் நிரந்தரமாக வீழ்ந்து விட்டது எனக் கூறுகிறார்கள். ஆனால் ஒரு நல்ல உள்ளம் கொண்ட மனிதனுக்கு இப்படி ஒரு கருத்து இருக்க முடியுமா? என நான் கேட்கிறேன். அதாவது, ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களைப் பற்றி அவர்களுடைய ஷரீஅத்தின் அருட்கள் மற்றும் கிலாஃபத்தே ராஷிதாவின் காலகட்டம் தொடர்ந்து 1400 ஆண்டுகள் இருந்தன என நம்பிக்கை கொண்டு, ஆனால் அஃப்ஸலுர் ருஸுல் (இறைத் தூதர்களில் சிறப்பானவர்) என்றும் கைருல் அன்பியா (நபிமார்களில் தலைசிறந்தவர்) என்றும் அழைக்கப்படுபவரும் எவருடைய ஷரீஅத் மறுமை வரை நீடித்திருக்கிறதோ அவருடைய அருட்கள் அவருடைய காலம் வரையே இருந்தது எனவும் அதிக காலம் வரை அதன் அருள்களின் முன்மாதிரிகள் அவரின் ஆன்மீக கலீஃபாக்களின் மூலமாக வெளிப்பட வேண்டும் என இறைவன் விரும்பவில்லை எனவும் எப்படி நம்பிக்கை கொள்வது? இந்த மாதிரியான விஷயங்களைக் கேட்டு நமது உடல் நடுங்கி விடுகிறது.” (ஷஹாதத்துல் குர்ஆன் பக்கம் 34)

“ஒருவர் இந்த வசனங்களை நிதானமாகவும் கவனமாவும் பார்த்தால் இறைவன் இந்த உம்மத்திற்கு நிரந்தர கிலாஃபத்திற்கான தெளிவான வாக்குறுதி தருகிறான் என்பதை அவரால் புரிந்து கொள்ள முடியாது என நான் எப்படி கூற முடியும்? கிலாஃபத் நிரந்தரமானதில்லை என்றால் மூஸாவின் ஷரீஅத்தைக் கொண்ட கலீஃபாக்களுள் ஒப்பிட்டுக் கூறியதில் என்ன அர்த்தம் இருக்க முடியும்?”

(ஷஹாதத்துல் குர்ஆன் பக்கம் 57)

(தமிழில்: A. நாஸிர் அஹ்மது)

# ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி)

ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்குப் பின் இஸ்லாமிய சமுதாயத்திற்கு தலைமையேற்று வழிநடத்திய முதல் கலீ.்.பா ஆவார்கள். எம்பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் பற்றி பின்வருமாறு கூறியதாக நாம் காண்கிறோம்.

அபூபக்ர் (ரலி) அவர்களை நேசிப்பதும் அன்னாருக்கு நன்றி பாராட்டுவதும் என்னுடைய சமுதாயத்தின் ஒவ்வொருவர் மீதும் கடமையாகும். அவர்கள் அஸ் ஸித்தீக் என்று அழைக்கப்பட்டார்கள். அதன் பொருள் என்றென்றும் உண்மையில் நிலைத்து நிற்பவர் என்பதாகும். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியதாக நாம் பின்வருமாறு காண்கிறோம்:

ஒருமுறை பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஆகியோரோடு உஹது மலையின் மீது ஏறினார்கள். அப்போது அவர்கள் "உஹது மலையே! நீ உறுதியாக நிலைகொள்வாயாக! ஏனென்றால் ஒரு நபி, ஓர் உண்மையாளர் (ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக்), இரண்டு உயிர் தியாகிகள் (ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) ஆகிய ஷஹீதுகள்) உன் மீது இருக்கின்றனர் என்று கூறினார்கள்." (புகாரி)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு பல்வேறு பட்டப்பெயர்கள் வழங்கப் பெற்றாலும் அவற்றிலெல்லாம் தலைசிறந்நது 'அஸ் ஸாஹிப்' (தோழர்) என்பதாகும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் ஸவ்ர் குகையில் மறைந்திருந்த போது எல்லாம் வல்ல இறைவன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் அச்சத்தைப் போக்கும் விதமாக ஆறுதல் அளிக்கும் வகையில், 'வருந்தாதீர்! நிச்சயமாக அல்லாஹ் நம்மோடு இருக்கிறான்' என்று அவர் தமது தோழரிடம் கூறிய நேரத்தில் (9:40) என்ற திருமறை வசனத்தை அருளினான்.

இறைவனிடமிருந்து 'தோழர்' என்ற பட்டத்தைப் பெற்றதும், காத்தமுன் நபிய்யீன் அவர்களோடு இணைத்துக் கூறப்பட்டதும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் உயரிய அந்தஸ்தை எடுத்துக் காட்டுகின்றன. ஒரு நொடி கூட தாமதிக்காமல் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதும், காத்முன் நபிய்யீன் (ஸல்) அவர்களின் கரங்களில் உடனடியாகப் பைஅத் செய்ததும் அவர்களின் உயரிய தன்மையை எடுத்துக் காட்டுகின்றன.

அவர்கள் கிலா.்.பத் பதவி ஏற்றதும் முதலில் எடுத்த அரசியல் நடவடிக்கை முஸ்லிம் அரசாட்சியைப் பாதுகாப்பதற்காக மூர்க்கமான ரோமப் பேரரசிற்கு எதிராக ஹஸ்ரத் உஸாமா பின் ஸைத் (ரலி) அவர்களின் தலைமையில் ஒரு படையை சிரியாவிற்கு அனுப்பியதாகும். நபித் தோழர்களுள் பலர் அந்த படையெடுப்பிற்கு எதிராக கருத்து தெரிவித்தனர். அப்போது மதீனாவில் நிலவிய குழப்பமான சூழ்நிலையில் ஒரு பெரும் படையை மதீனாவிற்கு வெளியே அனுப்புவது நன்மை பயப்பதாக இருக்காது என்பது நபித்தோழர்களின் கருத்தாக இருந்தது. ஆனாலும் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் கடைசி ஆணை அதுவாக இருந்ததால் அதை நிறைவேற்றியே தீருவேன் என்பதில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கன் உறுதியாக இருந்தார்கள். இந்தப் படையெடுப்பின் முடிவில் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் வெற்றியோடு திரும்பினார்கள்.

அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலா.்.பத்தின் ஆரம்பத்தில் முஸ்லிம் சமுதாயத்தில் பல குழப்பங்கள் தோன்றின. இந்த குழப்பக்காரர்களை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. பொய்யாக தன்னை நபி என்று வாதித்தவர்கள்.
2. இஸ்லாத்தைப் பின்பற்ற நினைத்தும் தமது சர்வாதிகார தலைவர்களால் தடுக்கப்பட்டவர்கள்.
3. இஸ்லாமிய உம்மத்தில் ஓர் அங்கமாக இருப்போம். ஆனால் நிர்ணயிக்கப்பட்ட விதத்தில் ஸக்காத் கொடுக்க மாட்டோம் என்று கூறியவர்கள்.
4. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்ய வேண்டும் என்ற உண்மையை ஒப்புக் கொள்ளாத -வர்கள்.

மேலே கூறிய நால்வகையான குழப்பங்களை அடக்குவதற்காகச் செய்யப்பட்ட போர்கள் வரலாற்றில் 'அல் ரித்தா' போர்கள் என்று அழைக்கப்படுகின்றன.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலா.்.பத் காலத்தில் ஏற்பட்ட ஒரு பெரும் சோதனை தன்னை நபி என்று வாதிட்ட முஸைலமா என்ற பொய்யனின் படையெடுப்பாகும். முஸைலமா ஒரு இலட்சம் படைவீரர்களோடு மதீனா மீது படையெடுத்தான். அந்தப் படையை எதிர்கொள்ள கலீ.்.பா அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் பின் வலீத் தலைமையில் 13000 பேர் கொண்ட ஒரு படையை அனுப்பி வைத்தார்கள். இந்தப் போர் யமாமா போர் என்று வரலாற்றில் அழைக்கப்படுகிறது. முஸ்லிம்கள் வீரத்தோடும் தீரத்தோடும் போரிட்டாலும் பல முக்கியமான போர்ச்சூழலில் தோல்வியைச் சந்திக்க நேரிட்டது. எனவே காலித் பின் வலீத் அவர்கள் புதிய போர் யுக்தி பற்றி சிந்திக்கலானார்கள். அதன்படி புதிய முஸ்லிம்களை விட திருக்குர்ஆனை கற்ற ஹா.்.பிஸ்மார்கள் ஜிஹாதின் உண்மைப் பொருளை நன்கு உணர்ந்திருப்பார்கள் என்பதால் அவர்களைக் கொண்டு ஒரு படையை அமைத்து அந்தப் படை முன்னணியில் நின்று முஸைலமாவின் படையை எதிர்த்துப் போரிட முடிவு செய்யப்பட்டது. 3000 ஹா.்.பிஸகளைக் கொண்ட ஒரு படை வீரத்தோடும் தீரத்தோடும் போரிட்டு ஒரு இலட்சம் பேர் கொண்ட

முஸைலமாவின் படையைத் தோற்கடித்தது. இந்தப் போரில் முஸைலமா வஹ்ஷி இப்னு ஹர்ப் அவர்களால் கொல்லப்பட்டான். இந்தப் படையெடுப்பின் விளைவாக படையில் கலந்து கொண்ட 3000 ஹா∴பிஸ்களில் 500 ஹா∴பிஸ்கள் ஷஹீதானார்கள். இது போன்ற பயெடுப்புகளால் குர்ஆனை முற்றிலுமாக மனனம் செய்த ஹா∴பிஸ்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே போவதைக் கண்ட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் திருக்குர்ஆனை நூல் வடிவில் முழுமையாக தொகுக்க வேண்டியதன் அவசியத்தை கலீ∴பாவுக்கு எடுத்து கூறினார்கள். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்களே செய்யாத ஒரு காரியத்தை தாம் செய்வதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) முதலில் தயங்கினார்கள். பலரும் வற்புறுத்தியதன் காரணத்தால் இறுதியில் ஒப்புக் கொண்டார்கள். அந்த மாபெரும் பொறுப்பை ஸைத் பின் ஸாபித் (ரலி) அவர்களிடம் ஒப்டைத்தார்கள். இதைப் பற்றிக் குறிப்பிடும்போது ஹஸ்ரத் ஸைத் இப்னு ஸாபித் (ரலி) அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்:

“இறைவன் மீது ஆணையாக! மலைகளை நகர்த்தும் பொறுப்பை அவர்கள் என் மீது சுமத்தி இருந்தாலும் அது இதை விடக் கடினமாக இருந்திருக்காது. ஏனெனில் அவர்கள் திருக்குர்அனைத் தொகுக்கும் பொறுப்பை என் மீது சுமத்தி இருந்தார்கள்.” (அஸ்ஸுயூத்தி பக்கம் 70)

பல்வேறு எழுது பொருட்களில் எழுதப்பட்டிருந்த திருக்குர்ஆனின் வசனங்களை ஒன்று திரட்டும் புனிதமான பணியில் ஸைத் (ரலி) அவர்கள் ஈடுபட்டார்கள். திருக்குர்ஆனின் வசனங்களைத் தொகுக்கும் இம்மாபெரும் பணி ஒரு மிகப் பெரிய சாதனையாகும். இன்று, முஸ்லிம்கள் இறைவேதத்தை கற்பதற்கு வசதியாக அதனை ஒரே நூலாக்கிய மாபெரும் அருளுக்குரிய செயலை இறைவன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மூலமாக நிறைவேற்றினான்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் இறுதிக் காலத்தில் அவர்களின் உடல்நிலை மோசமாகத் தொடங்கியதும் அவர்கள் தமக்குப் பின் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களையே கலீ∴பா பதவிக்குப் பொருத்தமானவர்கள் என்ற முடிவுக்கு வந்தார்கள். நபித் தோழர்களில் பெரும்பாலார்கள் அந்த முடிவை ஏற்றுக் கொள்பவர்களாக இருந்தார்கள்.

அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் வீட்டில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இருக்கும் பொழுது அவர்களின் இவ்வுலக வாழ்வு முடிவுக்கு வந்தது. அப்பொழுது அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் அன்னார் இஸ்லாமிய பொதுநிதியான பைத்துல் மாலிலிருந்து தம்முடைய ஊதியமாகப் பெற்ற சிறு ஊதியத்தைத் திருப்பிக் கொடுக்கும் விதத்தில் அவர்களுடைய தோட்டத்தை பொதுநிதியில் ஒப்படைத்து விடும்படி கேட்டுக் கொண்டார்கள்.

அவர்கள் தமது 63-வது வயதில் இவ்வுலக வாழ்வை விட்டுப் பிரிந்தார்கள். அவர்களின் எஜமானரும் வழிகாட்டியு -மான பெருமானார் (ஸல்) அவர்களின் உடல் அடக்கப்பட்ட இடத்தில் அவர்களுக்குப் பக்கத்தில் நல்லடக்கம் செய்யப் -பட்டார்கள்.

இமாம் மஹ்தியும் வாக்களிக்கப்பட்ட மஸீஹுமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

அபூபக்ர், உமர், உஸ்மான், அலி (ரலியல்லாஹு அன்ஹும்) ஆகியோரின் பண்பையும் குணத்தையம் கொண்டொழுகாத வரை எவரும் உண்மையான முஸ்லிமாக ஆக முடியாது. அவர்கள் இந்த உலகை நேசிக்கவில்லை. தங்களை முற்றாக இறைப் பணிக்காக அர்ப்பணித்தார்கள். (லெக்ஸர் லூதியானா பக்கம் 64)

(தொகுப்பு: அபூ அப்துல்லாஹ்)

# சுவர்க்கத்தில் நடைபெற்ற திருமணம்!

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின் -றார்கள்:

“ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலா∴பத் காலத்தில் ஒருமுறை மழை பொழியவில்லை. மக்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்தனர். வானம் மழை பொழியவில்லை. பூமியில் விளைச்சல் இல்லை. மக்கள் கடும் இன்னல்களுக்கு ஆளாகியுள்ளனர் என்று கூறினர். அதற்கு நீங்கள் செல்லுங்கள். பொறுமையைக் கைக்கொள்ளுங்கள். மாலைக்குள் அல்லாஹ் உங்கள் கஷ்டங்களை நீக்கி விடுவான் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) கூறினார்கள். இதனிடையே ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடைய 100 ஒட்டகங்களைக் கொண்ட வணிகக் குழு கோதுமை மற்றும் உணவுப் பொருட்களை ஏற்றிக் கொண்டு மதீனா வந்தடைந்தது. இந்தச் செய்தியைக் கேட்டு மக்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் வீட்டு வாசலுக்குச் சென்றனர். மேலும் கதவைத் தட்டினர். நீங்கள் எதற்காக வந்துள்ளீர்கள் என்று ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், மக்களிடம் கேட்டார்கள். அதற்கு வறட்சிக் காலம் ஏற்பட்டுள்ளது. வானம் மழை பொழியவில்லை. பூமியில் விளைச்சல் இல்லை. மக்கள் பெரும் இன்னல்களுக்கு ஆளாகியுள்ளனர் என்பதை தாங்கள் அறிவீர்களா என்று மக்கள் கேட்டனர். தங்களிடம் உணவு, தானியம் இருப்பதாக நாங்கள் அறிகின்றோம். உங்களிடமிருந்து அதனை பெற்றுக் கொள்ள நாங்கள் வந்துள்ளோம். தாங்கள் அதனை எங்களிடம் விற்று விடுங்கள். நாங்கள் அதனை ஏழை எளியவருக்கு கொண்டு சேர்ப்போம் என்று கூறினர். அதற்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மிகவும் நல்லது. உள்ளே வாருங்கள். பொருட்களை வாங்கிக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். வியாபாரிகள் அன்னாரின் வீட்டிற்குள்

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்...)

# ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள்

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பின் கிபி 634-ஆம் ஆண்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் இரண்டாவது கலீ∴பாவாகத் தேர்ந்தெடுக்கப்-பட்டார்கள். இஸ்லாத்தின் உயரிய பதவியான கலீ∴பா பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இயல்பில் இருந்த ஆவேசம் அமைதியாகவும் அன்பாகவும் மாறியது. அவர்கள் பதவிக் காலத்தின் ஆரம்பத்தில் நிகழ்த்திய சொற்பொழிவொன்றில் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

“ஆட்சியை நடத்துவதில் நீங்கள் என்னுடைய தோழர்கள் ஆவீர்கள். உங்களின் சீரிய ஆலோசனையின் மூலம் எனக்கு உதவி செய்யுங்கள். இறைவனும் அவனுடைய தூதரும் காட்டிய பாதையில் நான் சென்றால் என்னைப் பின்பற்றுங்கள். அவற்றிலிருந்து நான் விலகி நடந்தால் சுட்டிக் காட்டுங்கள். உங்கள் ஆலோசனைகள் மூலமும் அறிவுரைகள் மூலமும் என்னைப் பலப்படுத்துங்கள்.” (ஹெல்மின்ஸ்கி பக்கம் 406)

கலீ∴பாவாக இருந்த போதிலும் ஆடம்பரங்கள் எதுவுமின்றி மிக எளிய வாழ்க்கையை மேற்கொண்டார்கள். அவர்களின் ஆடைகள் எளிமையாக இருந்தன. உணவும் எளிமையாகவே இருந்தது. அவர்களிடம் இருந்த ஒரு சட்டையும் ஒட்டுப் போடப்பட்டிருந்தது. தம்முடைய குடிமக்களைப் போலவே ஈச்ச மர ஓலைகளால் வேயப்பட்ட படுக்கையிலேயே படுத்தார்கள். கலீ∴பா உமர் (ரலி) அவர்கள் இரவு நேரங்களில் மாறுவேடத்தில் நகர்வலம் வருவது வழக்கம். அதன் மூலம் ஏழை மக்களின் பாதுகாப்பையும் கஷ்டங்களையும் தெரிந்து கொள்வது அவர்களின் முயற்சியாக இருந்தது.

ஒருமுறை அவர்கள் நகர்வலம் வரும் பொழுது ஒரு பெண்மணி அடுப்பில் பானையை வைத்து எதையோ கிளறிக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். அந்தப் பெண்மணியைச் சுற்றி அவரின் குழந்தைகள் பரிதவிப்போடு காணப்பட்டார்கள். நெருங்கிச் சென்று கவனிக்கும் பொழுது அந்தப் பெண்மணி உணவுக்காகத் தவிக்கும் தம் குழந்தைகளைச் சமாதானப்படுத்துவதற்காக வெறும் பானையை அடுப்பில் ஏற்றி உணவு சமைப்பது போல் பாவனை செய்து கொண்டிருப்பதைத் தெரிந்து கொண்டார்கள். அந்தக் குழந்தைகள் சாப்பிட்டு இரண்டு நாட்கள் ஆகியிருந்தன. இதைக் கண்ட கலீ∴பா உமர் (ரலி) அவர்களின் கண்களில் நீர் பெருகியது. உடனடியாக அரசு கருவூலத்திற்குச் சென்று அவர்களுக்கான உணவுப் பொருட்களை எடுத்து வந்தார்கள். அப்போது கருவூல ஊழியர் ஒருவர் அந்தப் பொருட்களை தான் தூக்கி வர முன் வந்தார். அதற்கு கலீ∴பா ‘நாளை மறுமையில் எனது சுமையை நான்தான் சுமக்க வேண்டும்’ எனறு கூறி தாமே அந்தப் பொருட்களை தூக்கிச் சென்றார்கள். அந்தப் பெண்மணியிடம் உணவுப் பொருட்களைக் கொடுத்து விட்டு இனிமேல் தவறாமல் அரசுக் கருவூலத்திலிருந்து வீட்டிற்குத் தேவையான பொருட்களைப் பெற்றுக் கொள்ளும் படி கூறினார்கள். தமக்கு இவ்வளவு உதவி செய்யும் அந்த மனிதர் யார் என இந்தப் பெண்மணிக்குத் தெரியவில்லை. மிகவும் மகிழ்ச்சி அடைந்தவராக அந்தப் பெண்மணி அல்லாஹ், உமரின் இடத்தில் உங்களை கலீ∴பாவாக ஆக்குவானாக! என்று வாழ்த்தினார்.

அதைக் கேட்டதும் உமர் (ரலி) அவர்கள் அழத் தொடங்கினார்கள். ஒரு வார்த்தை கூட பேசாமல் அந்த இடத்தை விட்டு அகன்றார்கள். உமர் (ரலி) அவர்கள் மக்கள் மீது கொண்டிருந்த கருணைக்கு இது ஓர் எடுத்துக்காட்டுதான்.

இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வாழ்ந்த முஸ்லிம் அல்லாதவர் மீதும் அன்பும் கருணையும் காட்டினார்கள். ஒருமுறை அவர்கள் சிரியா நாட்டில் இருந்த பொழுது ஒரு பெரிய வயதானவர் தெருவில் பிச்சை எடுப்பதைக் கண்டார்கள். அவர் ஒரு யூதர் என்று தெரிந்து கொண்டார்கள். அவர்கள் மிகுந்த துயரமடைந்தார்கள். சிரியாவின் ஆளுனரிடம் அந்தப் பெரியவரைக் கவனித்துக் கொள்வது அவரது கடமை என்று அறிவுறுத்தினார்கள். தம்முடைய குடிமக்களின் உணர்வுகளைப் பேணுவதில் மிகுந்த கவனம் செலுத்தினார்கள்.



ஜெருசலேம் வசமாதல்:

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் பத்து ஆண்டு கால கிலா∴பத் ஆட்சியில் பல மறக்க முடியாத நிகழ்வுகள் நடந்தன. அவற்றுள் ஒன்று கி.பி 637-ல் ஜெருஸலேம் அவர்களின் வசமான நிகழ்ச்சியாகும். முஸ்லிம்கள் தங்கள் நன்னடத்தையால் ஜெருஸலேம் மக்களைக் கவர்ந்திருந்த நேரத்தில் ரோமானியப் படைகளின் கட்டாயத்தால் கிறித்தவ பகுதிகளை விட்டு அவர்கள் வெளியேற வேண்டியதிருந்தது. அம்மக்களைத் தொடர்ந்து தங்களால் பாதுகாக்க முடியாததால் தாங்கள் அவர்களிடமிருந்து வசூலித்த ஜிஸ்யா வரியைத் திருப்பிக் கொடுத்தனர். முஸ்லிம்களின் நேர்மையைக் கண்டு ஜெருஸலேம் மக்கள் மிகவும் கவரப்பட்டார்கள். அதன் காரணமாக இறுதியில் முஸ்லிம்கள் ஜெருஸலேமைக் கைப்பற்ற வந்த பொழுது அவர்களுக்கு

அதில் எந்த வருத்தமும் இருக்கவில்லை. நீண்ட முற்றுகைக்குப் பின் கலீ∴பா உமர் (ரலி) அவர்களே நேரில் அந்த நகரத்திற்கு வந்தார்கள். ஒரே ஒரு பணியாளோடும் ஓர் ஒட்டகத்தோடும் மதீனாவிலிருந்து புறப்பட்டார்கள். ஒருவர் மாற்றி ஒருவர் முறை வைத்து ஒட்டகத்தின் மீது பயணம் செய்து வந்தார்கள். உமர் (ரலி) அவர்கள் எளிய முறையில் தம் பணியாளரை ஒட்டகத்தின் மீது அமர்த்தி அந்த ஒட்டகத்தை வழிநடத்திக் கொண்டு நடந்து வருவதை ஜெருஸலேம் நகர மக்கள் கண்டார்கள். இந்தக் காட்சியைக் கண்ட மக்கள் எதிர்ப்பேதுமின்றி இஸ்லாமியப் பேரரசின் கீழ் வந்தார்கள். அவர்களோடு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் செய்து கொண்ட சமாதான ஒப்பந்தத்தின் வாசகங்கள் இவை தாம்.

“அல்லாஹ்வின் அடியாரும் நல்லடியார்களின் தலைவருமான உமர் எழுதுவதாவது, ஜெருஸலேம் நகர மக்களின் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு வழங்கப்படுகிறது. அவர்களுடைய தேவாலயங்களுக்கும் சிலுவைகளுக்கும் பாதுகாப்பு வழங்கப்படுகிறது. அவர்களுடைய வழிபாட்டுத்தலங்கள் பாதுகாப்பாக இருக்கும். அவை கைப்பற்றப்படவும் மாட்டாது. இடிக்கப்படவும் மாட்டாது. மக்கள் தங்கள் மார்க்கத்தைப் பின்பற்றும் சுதந்திரம்




பெறுகின்றனர். அவர்களுக்கு எந்தத் தொந்தரவும் கொடுக்கப்பட மாட்டாது.” (துபரி பாகம் 12 பக்கம் 191)

கிறித்தவ மதகுரு ஸோ∴ப்ரோனியஸ் அந்நகரச் சாவியை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் வழங்கினார். பிறகு கலீ∴பா அவர்கள் அல் அக்ஸா பள்ளிவாசல் இருக்கும் இடத்தில் தொழுகையை தலைமையேற்று நடத்தினார்கள். ஆனால் அவர்கள் தொழுகை நடத்திய இடம் கிறித்தவ தேவாலயத்திலிருந்து தூரத்தில் இருக்கும்படி பார்த்துக் கொண்டார்கள். ஏனென்றால் முஸ்லிம்கள் பின்னாளில் உரிமைக் கொண்டாடக் கூடாதே என்ற நல்ல நோக்கத்தில் அவ்வாறு செய்தார்கள். 3000 பேர் தொழக்க கூடிய மரத்தாலான எளிய பள்ளிவாசல் அவர்களுடைய தலைமையில் கட்டப்பட்டது. பிறகு அது அல் அக்ஸா பள்ளிவாசலாக விரிவுபடுத்தப்பட்டது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கிறித்தவர்களோடு உமரிய்யா உடன்படிக்கை செய்து கொண்டார்கள். அதன்படி முஸ்லிம் ஆட்சியின் கீழ் உடன்படிக்கை செய்து கொண்ட கிறித்தவர்களின் அந்தஸ்தும் உரிமைகளும் பாதுகாக்கப்பட உறுதி செய்யப்பட்டது.

அவர்கள் தலைமையேற்று ஆட்சி செய்த விதம் பல முஸ்லிமல்லாத மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. முஸ்லிமல்லாத மக்களுக்கு அவர்கள் வழங்கிய உரிமைகள் அவர்களை இஸ்லாத்தின்பால் ஈர்த்தது. உமர் (ரலி) அவர்களின் கிலா∴பத்தில் இஸ்லாம் எல்லா திசைகளிலும் பரவியது. பாரசீகம், முழு வட ஆப்பிரிக்கா, ஆசியாமைனர் ஆகிய பகுதிகளில் இஸ்லாம் பரவியது. அரேபியர்கள் தாம் வெற்றிக் கொண்ட மக்களின் நாட்டைக் கைப்பற்றவோ, அவர்கள் மீது இஸ்லாமிய சட்ட திட்டங்களைத் திணிக்கவோ செய்யாததால் அப்பகுதி மக்கள் அவர்களோடு செய்யப்பட்ட அமைதி ஒப்பந்தங்களை நம்பிக்கையோடு ஏற்றுக் கொண்டனர். அவர்களிடமிருந்து வரியைப் பெற்றுக் கொண்டு சாலை அமைத்தல், கால்வாய் வெட்டுதல், பாலம் கட்டுதல், அடிமைகளை விடுவித்தல், சமுதாயத்தில் அடித்தட்டில் இருந்த ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் போன்ற கடமைகளை நிறைவேற்றினார்கள். இஸ்லாமிய பேரரசின் பிற பகுதிகளுக்கு புதிய வாணிப வழித்தடங்கள் அமைக்கப்பட்டன. ஆறுகளுக்கு கரை அமைக்கப்பட்டது. நீர்ப்பாசனப் பாதைகள் அமைக்கப் பெற்றன. முஸ்லிம்கள் புதிய தோட்டத்தை அமைத்தனர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் புதிய பேரரசின் முன்னோடியாகத் திகழ்ந்தார்கள். குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும் அதிகரிப்பதிலும் அவர்கள் கவனமாக இருந்தார்கள். எவரும் அவர் அரேபியராக இருந்தாலும், அரேபியர் அல்லாதவராக இருந்தாலும் முஸ்லிம்களால் எந்த இழப்பையும் சந்திக்கவில்லை. இஸ்லாத்தின் மீது எந்தக் குறையும் சொல்ல முடியாதிருந்தது.

### சாதனைகள்:

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் தான் கலீ∴பா ‘அமீருல் மு∴மினீன்’ (நன்னம்பிக்கையாளரின் தலைவர்) என்ற பெயரால் அழைக்கப்பட்டார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலா∴பத் காலத்தில் தான் ஹிஜ்ரி கமரி எனப்படும் சந்திர ஆண்டுக் கணக்கில் கணிக்கப்பட்ட ஹிஜ்ரி ஆண்டுக் கணக்கு பெருமானார் (ஸல்) அவர்கள் மக்காவை விட்டு இடம் பெயர்ந்து சென்று மதீனாவுக்குச் சென்றதை அடிப்படையாகக் கொண்டு த
ீர்மானிக்கப்பட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாமிய மார்க்கச் சட்டமான ஷரீஅத் சட்டத்தை வரையறுத்து எழுதச் செய்தார்கள். திருக்குர்ஆனின் கட்டளைகளின் படியும் பெருமானார் (ஸல்) அவர்களின் நடைமுறையின்படியும் ஒரு சீரான நல்ல விளைவை ஏற்படுத்தக் கூடிய விரைவான நீதியை மக்களுக்கு வழங்க வேண்டும் என விரும்பினார்கள். மக்களுக்காக நீதிமன்றங்களை ஏற்படுத்தினார்கள். நீதிபதிகளைத் தேர்ந்தெடுப்பதில் மிகுந்த கவனத்தோடு செயல்பட்டார்கள். அறிவு, நேர்மை, கண்ணியம் மிக்கவர்களையும், சார்பு நிலையை மேற்கொள்ளாதவர்களையும் நீதிபதிகளாக நியமித்தார்கள்.

மக்காவிலும் மதீனாவிலும் இருந்த இரு பள்ளிவாசல்களையும் புதுப்பித்து விரிவுபடுத்திக் கட்டுவது தமது கடமை எனக் கருதினார்கள். இருந்த போதிலும் பள்ளிவாசல்கள் எளிமையாக இருக்க வேண்டும் என்று கருதினார்கள். கலீஃபாவுக்கு ஆலோசனை வழங்குவதற்காக மஜ்லிஸே ஷுரா என்னும் ஆலோசனை சபையை அமைத்தார்கள். இஸ்லாமியப் பேரரசு ஆற்றலிலும் செல்வத்திலும் முன்னேறிய போது அவர்கள் தங்கள் கவனத்தைக் கல்வியின் பக்கம் திருப்பினார்கள். தம்முடைய பேரரசுக்குட்பட்ட பகுதிகளில் கல்விக் கூடங்களையும் பள்ளிவாசல்களையம் நிர்மாணித்தார்கள்.

தம்முடைய ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு மார்க்கக் கல்வி கற்பிப்பதற்காக நபித் தோழர்களை பல்வேறு பகுதிகளுக்கும் அனுப்பி வைத்தார்கள். இஸ்லாத்தின் தூதுச் செய்தியைப் பரப்புவதற்காகவும் தூதுவர்களை சிரியா, ஜெருஸலேம், எகிப்து, லிபியா, ஈராக் போன்ற நாடுகளுக்கு அனுப்பினார்கள். மத்திய கிழக்கு நாடுகள், பாரசீகம், வட ஆப்பிரிக்கா, ஆசியாமைனர் வரையிலும் இஸ்லாம் பரவியது.

மறைவு: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மரணம் அகாலமாக நிகழ்ந்தது. அவர்கள் மக்களுக்கு தலைமை தாங்கி நண்பகல் தொழுகையை நடத்திக் கொண்டிருந்தபோது அவர்கள் மீது வெறுப்புக் கொண்டிருந்த பாரசீகத்தைச் சேர்ந்த முஸ்லிமல்லாத அபூலுஃலு என்ற வழிகேடன் அவர்களைக் குத்தி விட்டான். தமது மரணப்படுக்கையில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமக்கு அடுத்த கலீஃபாவைத் தேர்ந்தெடுப்பதற்கான ஆலோசனைக் கமிட்டியைக் கூட்டுமாறு ஆணையிட்டார்கள்.

அவர்கள் கூறினார்கள்: “எனக்குப் பின்னால் பதவிக்கு வருபவருக்கு நான் என் விருப்பத்தைத் தெரிவிக்கிறேன். அவர் நமக்கும் நன்னம்பிக்கைக்கும் இடமளித்த இந்த நகரத்தின் மீது அன்போடு நடந்து கொள்வாராக! அவர்களின் நற்பண்புகளை அங்கீகரிப்பார்களாக! அவர்களுடைய தவறுகளை இலேசாக எடுத்துக் கொள்வார்களாக! அரேபியக் கோத்திரங்களை நல்ல முறையில் நடத்துமாறு கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் அவர்கள்தாம் இஸ்லாத்தின் பலம் ஆவார்கள்.” (ஹெல்மின்ஸ்கி பக்கம் 410)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தாம் தாக்கப்பட்ட இரண்டு நாட்களுக்குப் பின் கி.பி 644-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தமது 64-வது வயதில் காலமானார்கள். (The Review of Religions, 2007 நவம்பர் இதழில் வெளிவந்த கட்டுரையைத் தழுவி எழுதப்பட்டது)

(தொகுப்பு: S.S.H. முஹம்மது லெப்பை)

## பயிற்சி பெற்ற வல்லுனர்களுக்கும் சாத்தியமற்றதை அல்லாஹ் கிலாஃபத் மூலமாக சாத்தியமாக்குகிறான்!

**மிர்ஸா நூருத்தீன் அஹ்மது - ஸ்வீடன்**

வல்லமை மிக்க அல்லாஹ்வின் அற்புதமான படைப்புகளில் ஒன்று கண் ஆகும். கண் எத்தகைய மென்மையான உறுப்பு எனில் அதற்கு சிகிச்சை அளிப்பதற்கும் அதில் வேலை செய்வதற்கும் தேவையான நுண் திறன் மிகவும் அசாதாரணமானது. அதுவன்றி கண் நோய்களுக்கு சிகிச்சையளிப்பது சாத்தியமற்றதே ஆகும். சாத்தியமற்ற ஒன்றை நான் கண்டது இறைவனின் அற்புதமே ஆகும்.

ஸ்வீடனில் எனக்கு ஓட்டுநர் உரிமம் பெறுவதற்காக நான் 2020-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முயற்சித்தேன். அதற்காக நான் கட்டாய கண் பரிசோதனை செய்ய வேண்டியதிருந்தது. இந்த பரிசோனைக்குப் பிறகு எனது இடது கண்ணில் குறைபாடு இருப்பதையும், அதனால் ஏற்பட்ட இடது கண்ணின் பலவீனத்தை வலது கண் ஈடுசெய்கிறது என்பதையும் கண்டுபிடித்தேன்.

இது எனது அன்றாட வாழ்வில் எந்த சிரமத்தையும் தரவில்லை. எனவே இவ்விஷயத்தை நான் புறக்கணித்து விட்டு நான் வழக்கம் போல் என் வாழ்வைத் தொடரலானேன்.

அக்டோபர் மாதம் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களை இலண்டனில் சந்திக்கும் அருளுக்குரிய வாய்ப்பினைப் பெற்றேன். அந்த நேரத்தில் எனது பார்வை குறைபாடு பற்றிய எந்த சிந்தனையும் என்னிடம் இல்லை. ஆனால் சந்திப்பிற்காக ஹுஸுர் அவர்களின் அலுவலகத்தில் அமர்ந்தபோது மிகவும் விசித்திரமான விஷயம் நிகழ்ந்தது. சந்திப்பின்போது ஹுஸுர் அவர்கள் என்னைப் பார்த்து சுயமாகவே இவ்வாறு கூறினார்கள்: ‘உங்களது இடது கண்ணில் குறைபாடு உள்ளது. எனவே அதனால் சரியாக Focus பண்ண முடியவில்லை.’

நான் திகைப்புடன் அமர்ந்திருந்தேன். எனது இடது கண்ணின் குறைபாட்டை ஹுஸுர் அவர்கள் எப்படி இவ்வளவு துல்லியமாக கண்டறிந்தார்கள் என்று எனக்குப் புரியவில்லை. அப்போது ஹுஸுர் அவர்கள் எனது கண்ணுக்கு தகுந்த சிகிச்சையளிக்குமாறு அறிவுறுத்தினார்கள்.

நான் ஸ்வீடன் திரும்பியதும் உடனடியாக ஒரு கண் மருத்துவரைச் சந்திக்கத் திட்டமிட்டேன். ஹுஸுர் அவர்கள் கூறிய அதே கருத்தையே மருத்துவரும் கூறினார். எனக்கு கண்ணாடியும் பரிந்துரைத்தார். இந்த நிபுணருடன் அமர்ந்திருந்த போது ஹுஸுர் அவர்களைச் சந்தித்ததில் இருந்து என்னிடம் சுமையாகவே இருந்த ஒரு கேள்வியைக் கேட்க வேண்டும் என்ற ஆவல் எனக்கு ஏற்பட்டது.

எந்தவொரு இயந்திரமோ அல்லது கருவியோ இல்லாமல் ஒரு சாதாரண பார்வையின் மூலமாக இந்தக் குறைபாட்டை எவராவது கண்டுபிடிக்க சாத்தியக்கூறு உள்ளதா என அவரிடம் கேட்டேன். அதற்கு தன்னைப் போன்ற ஒரு வல்லுனரால் கூட அவ்வாறு செய்வது சாத்தியமற்றது என்று அந்த ஒளியியல் நிபுணர் பதிலளித்தார். இந்தப் பதில் என்னை திகைக்க வைத்தது. கலீஃபாவின் மூலம் இறைவன் சாத்தியமற்றதை சாத்தியமாக்கி விடுகிறான் என்பது எவ்வளவு ஆச்சரியமானது!

(ரிவியூ ஆஃப் ரிலிஜியன்ஸ், செப்டம்பர் 2021)

# ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள்

ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் மறைவிற்குப் பின், ஹஸ்ரத் உஸ்மான் கனி இப்னு அ.்.ப்பான் (ரலி) மூன்றாவது கலீ.்.பாவாகத் தேர்வு செய்யப்பட்டார்கள்.

மக்காவிலுள்ள பிரசித்தி பெற்ற உமையா குடும்பத்தில் பிறந்த அவர்கள் இஸ்லாத்தைத் தழுவுவதற்கு முன்பாகவே தன்னடக்கமுள்ள பெரும் செல்வந்தரான வணிகராக இருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மறைவுக்குப் பின் அவர்களைத் தொடர்ந்து ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) கலீ.்.பாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

வெளித்தோற்றத்தில் அன்னார் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை ஒத்திருந்ததாக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது மகளும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் மனைவியுமாகிய உம்மு குல்ஸுமிடம் இவ்வாறு கூறினார்கள்:

“உமது கணவர் எல்லாரையும் விட உமது பாட்டனார் இப்ராஹீம் அவர்களையும், உமது தகப்பனார் முஹம்மது (ஸல்) அவர்களையும் ஒத்து காணப்படுகிறார்.” (ஹிஸ்டரி ஆ.்.ப் கலீ.்.பாஸ், சுயூத்தி பக்கம் 161)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் கதீஜா (ரலி), ஹஸ்ரத் ஸைது (ரலி) ஆகியோரைத் தொடர்ந்து உதுமான் (ரலி) இஸ்லாத்தைத் தழுவிய நான்காவது நபராவார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் ஏழைகளுக்காக இரங்கும் இரக்கக்குணமும், பொதுநலன் கருதும் தன்மையும், தேவையுடையவர்களுக்கு உதவி புரியும் மனப்பான்மையும் மிகுந்து காணப்பட்டது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களால் சுவர்க்கத்திற்கு உத்தரவாதம் வழங்கப்பட்ட 10 நபர்களில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களும் ஒருவராவார்கள்.

## கிலா.்.பத்:

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நல்லடக்கத்திற்குப் பின் மூத்த நபித்தோழர்களைக் கொண்ட குழு மதீனாவில் கூடி ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை மூன்றாவது கலீ.்.பாவாகத் தேர்ந்தெடுத்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களால் நியமிக்கப்பட்ட கிலா.்.பத் கமிட்டியின் ஆறு உறுப்பினர்களில் ஒருவரான அப்துல்லாஹ் பின் அ.்.ப் (ரலி) மற்ற கிலா.்.பத் கமிட்டி உறுப்பினர்களைத் தனிமையில் சந்தித்து தகுதியுடைய கலீ.்.பாவைத் தேர்ந்தெடுக்க முடிவு செய்தார்கள். இந்நிகழ்ச்சி முழுவதும் இரகசியமாக வைக்கப்பட்டது. உஸ்மான் (ரலி) அவர்களை தனிமையில் சந்தித்து ‘நான் இப்போது பைஅத் உடன்படிக்கை பெறவில்லை எனில் நீங்கள் யாரிடம் பெறுமாறு சுட்டிக் காட்டுவீர்கள்?’ எனக் கேட்டார்.

உஸ்மான் (ரலி) பதில் கூறினார்கள்: இதே கேள்வியை அலி (ரலி) அவர்களிடம் கேட்டதற்கு, அலி (ரலி) பதில் கூறினார்கள்: ‘உஸ்மான்’. கமிட்டியின் இன்னொரு உறுப்பினரான ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்களிடம் இக்கேள்வியைக் கேட்க அவர் கூறினார்: ‘அலி அல்லது உஸ்மான்’.

மற்றொரு உறுப்பினர் சஅதிடம் ‘சஅதே! நானோ நீங்களோ இந்தப் பதவியை விரும்பவில்லை. எனவே யார் பெயரைக் குறிப்பிடுவீர்கள் எனக் கேட்க அவர் ‘உதுமான்’ எனக் கூறினார். (ஹிஸ்டரி ஆ.்.ப் கலீ.்.பஸ், சுயூத்தி பக்கம் 165)

இவ்வகையில் அப்துர் ரஹ்மான் இப்னு அ.்.ப் (ரலி) பலதரப்பட்ட மக்களிடமிருந்தும் கருத்துக்களைப் பெற்று உஸ்மான் (ரலி) அவர்களுக்கு நிகராக அப்பதவிக்கு யாரும் இல்லை என அறிவித்தார்கள். அவர் உஸ்மான் (ரலி) அவர்களின் கரங்களைப் பற்றியவாறு அல்லாஹ்வின் அவனது தூதரின் முந்தைய இரண்டு கலீ.்.பாக்களின் சுன்னத்தின்படி உஸ்மான் (ரலி) அவர்களை மூன்றாவது கலீ.்.பாவாக ஏற்று அவர்களிடம் நாங்கள் பைஅத் உடன்படிக்கை எடுக்கின்றோம் எனக் கூறினார். (ஹிஸ்டரி ஆ.்.ப் கலீ.்.பாஸ், சுயூத்தி பக்கம் 165)

## சாதனைகள்:

உஸ்மான் (ரலி) அவர்கள் 12 ஆண்டு காலம் கலீ.்.பாவாக இருந்தார்கள். அதில் முதல் 6 ஆண்டு காலம் அமைதி, முன்னேற்றம் மற்றும் எழுச்சியின் காலகட்டமாக இருந்தது. இஸ்லாமிய படை பல பகுதிகளை வென்றது.

முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகமாயிற்று. ஒற்றுமை இருந்தது. வெற்றிகளின் விளைவாக முஸ்லிம்களிடத்தில் நம்பிக்கை வலுப்பெற்றது. முஸ்லிம் படையின் மிகப்பெரும் வெற்றிகள், முதலில் அலெக்ஸாண்டிரியாவையும், கெய்ரோவையும், சைப்ரஸ், லிபியா, ஆர்மேனியா மற்றும் ஈரானின் ஒரு பெரும் பகுதியையும் கைப்பற்றி ஆப்கானிஸ்தானை தமது ஆட்சியில் கொண்டு வந்தது மட்டுமல்லாமல் இந்தியத் துணைக் கண்டத்தின் ‘சிந்து’ மாகாணம் இஸ்லாத்தின் கீழ் வந்தது. (இஸ்லாம், கேரன் ஆம்ஸ்ட்ராங் பக்கம் 28)

அன்னாரின் மாபெரும் சாதனை யாதெனில் அவர்கள் புத்தக வடிவில் திருக்குர்ஆனை பாதுகாக்க முற்பட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் தொகுக்கப்பட்ட அமைப்பிலேயே திருக்குர்ஆன் நூல் வடிவில் 7 பிரதிகள் தயார் செய்யப்பட்டு உலகின் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பப்பட்டது. உஸ்மான் (ரலி) அவர்களால் ஒன்றிணைக்கப்பட்ட திருமறையே இன்று பலகோடி முஸ்லிம்களால் கையாளப்படுகின்றது.

## அமைதியின்மை:

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் இரண்டாவது 6 வருட ஆட்சியின் போது கலவரங்களும் குழப்பங்களும்

தலைதூக்கின. கிலா∴பத்தின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கை -களுக்கு எதிர்ப்பு தெரிவித்து வதந்திகளை நம்பி உள்நாட்டில் அமைதியற்ற சூழல் உருவானது. புதிதாக இஸ்லாத்தில் இணைந்தவர்களிடம் போதிய சகிப்புத் தன்மை இல்லாததால், சரியான இஸ்லாத்தின் அறிவுரைகளைப் பேணி நடக்காததால் இப்படிப்பட்ட தவறான பிரச்சாரத்திற்கு அவர்களை சந்தர்ப்பவாதிகள் பயன்படுத்திக் கொண்டனர். கூ∴பா, எகிப்து மாகாணங்களில் நியமிக்கப்பட்டிருந்த ஆளுனர்களுக்கு எதிராக பொய்குற்றச் சாடட்டுகள் புனையப்பட்டன.

முஸ்லிம் உம்மத்தில் வளர்ந்து வரும் வேற்றுமையைக் களைய எல்லா ஆளுனர்களையும் மதீனாவில் கூடுமாறு கலீ∴பா உத்தரவு பிறப்பித்தார்கள். மேலும் குறுநில ஆளுனர்களையும் அனுபவமிக்க பெரியோர்களையும் அழைத்தார்கள். கிளர்ச்சியை அடக்குவதற் -காக இராணுவ அடக்குமுறை செய்யலாம் என்ற ஆலோசனைகளை கலீ∴பா அவர்கள் நிராகரித்து விட்டார்கள். முஆவியா கலீ∴பாவின் இருப்பிடமும் தலைநகரமும் மதீனாவிலிருந்து டமாஸ்கஸுக்கு மாற்றப்பட வேண்டும் என்றார். உஸ்மான் (ரலி) அவர்கள் இதனையும் ஏற்கவில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இல்லத்தை விட்டு நான் பிரியமாட்டேன் எனக் கூறிவிட்டார்கள்.

அதே வேளையில் கலகக்காரர்கள் மதீனாவுக்கு தம் குற்றச்சாட்டுகளைக் கொண்டு வந்தனர். அவர்கள் வந்த போது கலீ∴பா இரு மூத்த சஹாபிகளை அனுப்பி அவர்களின் குற்றச்சாட்டை விசாரிக்கும்படி கூறினார்கள்.

அவர்கள் இருவரும் கூறினர்: கிளர்ச்சியாளர்களை எவ்வகையிலும் சாந்தப்படுத்த இயலாது. எதுவரை என்றால் கலீ∴பா பதவியைத் துறக்க வேண்டும் அல்லது அவரை அவர்கள் கொலை செய்யத் தயாராக உள்ளனர் என்றனர்.

கிளர்சியாளர்கள் கலீ∴பாவின் மீது ஆறு குற்றச்சாட்டுகளை எழுப்பினர். அவற்றிற்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மிக அழகிய முறையில் தகுந்த காரண காரியங்களுடன் எந்த ஒரு நேர்மையான மனிதனும் எவ்வித தப்பெண்ணமும் கொள்ளாத அளவில் தாம் நேர்மையான முஸ்லிம்களின் கலீ∴பா என்பதை நிரூபிக்கும் வண்ணம் பதில் உரைத்தார்கள்.

## போலியான கடிதம்:

கலகக்காரர்கள் மதீனா வந்தபோது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை அவர்களோடு பேசுவதற்காக அனுப்பினார்கள். கலகக்காரர்கள் சில உயர் அதிகாரிகள் நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வைத்தனர். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் எகிப்திய கவர்னரை மாற்றினார்கள். திருப்தி கொண்ட கிளர்ச்சியாளர்கள் மதீனாவை விட்டு புறப்பட்டுச் சென்றனர். சில நாட்களில் மீண்டும் திரும்பி வந்தனர். கலீ∴பாவின் வீட்டைச் சுற்றி வளைத்தனர். கலீ∴பா (ரலி) அவர்கள் உங்கள் வேண்டுகோள் ஏற்கப்பட்ட நிலையில் ஏன் மீண்டும் இங்கு வந்தீர்கள் எனக் கேட்டார்கள்.

அவர்கள் ஓர் அடிமையைப் பிடித்ததாகவும் அவர் கலீ∴பாவால் அனுப்பப்பட்டதாகவும், அவரிடம் கவர்னருக்கு எழுதப்பட்ட கடிதத்தில் இந்த கிளர்ச்சியாளர்களை கொன்று விடும்படி எழுதப்பட்டிருந்ததாகவும் கூறி கலீ∴பாவின் மீது ஒரு பொய்க் குற்றச்சாட்டைப் புனைந்தார்கள். மேலும் வழக்கு எப்படியும் ஆகட்டும். நாங்கள் கலீ∴பாவை கொலை செய்யப் போகிறோம் எனக் கூறினர்.

## இஸ்லாமிய வரலாற்றின் மிக இருண்ட நாட்கள்:

கலீ∴பா முஸ்லிம்கள் வாழ்ந்த இடங்களுக்கெல்லாம் கடிதம் அனுப்பி உதவிக்காக அழைத்தார்கள். எகிப்து, சிரியா, கூ∴பா பஸ்ரா ஆகிய இடங்களிலிருந்து கூட்டம் கூட்டமாக வந்தனர். ஆனால் குறித்த நேரத்தில் வர முடியாததால் கலீ∴பாவின் உயிரை காப்பாற்ற முடியவில்லை.




கலகக்காரர்கள் கலீ∴பாவை பதவி துறக்குமாறு கூறினர். இதனைக் குறித்து ஹஸ்ரத் நபி ஸல் அவர்கள் இவ்வாறு முன்னறிவித்தார்கள்:

குழப்பம் (∴பித்னா) உருவாகும். உஸ்மானைச் சுட்டிக் காட்டி இவர் தவறான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு கொல்லப்படுவார்.

## மற்றொரு சந்தர்ப்பத்தில் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

‘உஸ்மானே! அல்லாஹ் உமக்கு நல்ல ஆடையை அணிவிப்பான். ஆதனால் நயவஞ்சகர்கள் இதனை களைய விரும்பினால் நீர் என்னை சந்திக்கும் வரை அதனை அகற்றிவிட வேண்டாம் எனக் கூறினார்கள்.

இதனால் கலீ∴பா பதவியைத் துறக்கும்படி கூறப்பட்டபோது ‘அல்லாஹ் எனக்கு அணிவித்த மேலான ஆடையை நானாக களைய மாட்டேன்’ என்று கூறினார்கள். (ஹிஸ்ட்ரி ஆ∴ப் இஸ்லாம், அக்பர் ஷா பக்கம் 415)

அப்போது கிளர்ச்சியாளர்கள் தம் திட்டத்தை நிறைவேற்றத் துணிந்தனர். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் மகன்கள் முன் பக்கமாக வீட்டைக் காவல் செய்து கொண்டிருந்த நிலையில் இந்த கலகக்காரர்கள் பின்புறமாக தாக்கி உள்ளே நுழைந்தனர். திருக்குர்ஆன் ஓதிக் கொண்டிருந்த ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை ஷஹீதாக்கினர்

நபி (ஸல்) அவர்கள் மூன்று முறை இவ்வாறு திரும்பத் திரும்ப கூறியிருந்தார்கள்: ‘அல்லாஹ்வே! நான் உஸ்மானிடம்

திருப்தி அடைந்தது போல நீயும் அவரிடம் திருப்தி கொள்வாயாக!' (ஹிஸ்ட்ரி ஆ.்.ப் இஸ்லாம், அக்பர் ஷா பக்கம் 424)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மதீனத்து பள்ளிவாசலை தமது சொந்த செலவில் விரிவுபடுத்தினார்கள். இவர்களின் காலத்தில் தொழுகைக்காக வரும் மக்களின் எண்ணிக்கை மிக அதிகமாயிற்று. எந்த அளவுக்கு என்றால் அவர்களால் பாங்கின் சப்தத்தைக் கேட்க முடியவில்லை. அப்போது ஜும்ஆ தொழுகையில் 2வது பாங்கு கொடுப்பதை நடைமுறைப்படுத்தினார்கள். அதைப் போன்று பெருநாள் தொழுகைக்குப்பின் குத்பா கொடுப்பது முதன் முதலாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

உண்மையில் இவர்களின் வாழ்க்கை அருள் நிறைந்ததாக இருந்தும் மிகவும் வேதனை தரக்கூடியதாக உள்ளது. எந்த அருட்கொடையின் வாசலும் அவர்களுக்கு மூடப்பட்டதில்லை. பெரும் செல்வம் வழங்கப்பட்டது. அனைத்து அழகும் அன்னாரிடம் இருந்தது. வலிமை மிக்க வம்சத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். மாநபி (ஸல்) அவர்களின் தனிப்பட்ட அன்பு அவரிடம் இருந்தது. மாநபியின் இரு மகள்கள் அவர்களுக்கு மணமுடித்துக் கொடுக்கப்பட்டனர்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மிகவும் பணிவுக் குணம் உடையவர் இறையச்சமுடையவர். படித்தவர். பண்பாளி. ஆனால் அவர்கள் கலீ.்.பாவாக ஆன பிறகு அவர்களுக்கு கொடுக்கப்படாத துன்பங்கள் இல்லை. மக்கள் அவர்களிடம் நேரடியாக கேள்வி கேட்டார்கள். ஆனால் அவர்களது பதில்களை உதாசீனப்படுத்தினர். அவர்களது ஆணவம் உண்மையை ஏற்றுக் கொள்ள மறுத்தது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைப் பற்றிய பொய்க் குற்றச்சாட்டுகளை தமது அறியாமையின் காரணமாக மக்கள் நம்பினர். எனவே, முஸ்லிம்கள் பெரும் நஷ்டத்திற்குரியவர்களாக ஆக்கப்பட்டனர். இஸ்லாத்தின் ஒற்றுமை அதற்குப் பின்னர் கேள்விக்குறியாக ஆகிவிட்டது. அதற்கேற்பட்ட அச்சுறுத்தல் ஈடுசெய்யப்பட முடியாத ஒன்றாக ஆகிவிட்டது. (TheReview of Religions, 2007 டிசம்பர் இதழில் வெளிவந்த கட்டுரையைத் தழுவி எழுதப்பட்டது)

**(தொகுப்பு: J. சய்யிது அன்வர்)**

*(5-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

சென்றனர். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் வீட்டில் தானியங்கள் இருப்பதைக் கண்டனர். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அந்த வியாபாரிகளிடம் இவ்வாறு கூறினார்கள். 'நான் இந்தத் தானியங்களை சிரியாவிலிருந்து விலைக்கு வாங்கியுள்ளேன். நான் வாங்கிய விலையிலிருந்து நீங்கள் எவ்வளவு இலாபம் தருவீர்கள்?' என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் '10-க்கு 12 தருகிறோம்' என்றார்கள். (அதாவது அதன் விலை 10 திர்ஹம் என்றால் நாங்கள் 12 திர்ஹம் தருகிறோம் என்றார்கள்.) ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் 'எனக்கு இதை விட அதிகமாக கிடைக்கும்' என்று கூறினார்கள். அதற்கு அந்த வியாபாரிகள் '10-க்கு 15 தருகிறோம்' என்றார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் 'எனக்கு இதையும் விட அதிகமாக கிடைத்து விடும்' என்று கூறினார்கள். அதற்கு வியாபாரிகள் 'அபுஅம்ர் அவர்களே! மதீனாவில் எங்களைத் தவிர வேறு வியாபாரிகள் இல்லை. உங்களுக்கு யார் இதை விட அதிகம் தருவார்கள்?' என்றுகேட்டனர். அதற்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் 'அல்லாஹ் எனது ஒவ்வொரு திர்ஹமுக்குப் பதிலாகவும் 10 திர்ஹம் தருகிறான்' என்று கூறினார்கள். 'நீங்கள் அதை விட அதிகம் தரமுடியுமா?' என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் 'இல்லை, எங்களால் இதை விட அதிகம் தர முடியாது' என்றனர். அப்போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் 'நான் அல்லாஹ்வை சாட்சியாக்கி இந்த தானியத்தை ஏழை முஸ்லிம்களுக்கு ஸதகாவாக கொடுத்து விடுகிறேன்' என்று கூறினார்கள் அதாவது அந்த அனைத்து தானியங்களையும் ஏழைகளுக்கு தர்மமாக கொடுத்து விட்டார்கள். அதற்கு பதிலாக அன்னார் எதனையும் பெறவில்லை.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எந்த நாளில் இந்த சம்பவம் நிகழ்ந்ததோ (அதாவது எந்த நாளில் தானியங்கள் ஸதகாவாக வழங்கப்பட்டதோ) அந்த நாளில் நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கனவில் கண்டேன். அன்னார் அரேபியாவைச் சாராத ஒரு பெரிய குதிரையின் மீது அமர்ந்திருந்தார்கள். அவர்கள் ஆன்மிக ஒளியினால் நிறைந்த ஆடை அணிந்திருந்தார்கள். அவர்களின் கைகளில் ஒளியினால் நிறைந்த தடி இருந்தது. அவர்களின் காலணிகள் ஒளியினால் நிறைந்தவையாக இருந்தன. அவர்கள் அவசரத்தில் இருந்தார்கள். நான் அவர்களிடம் 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் உங்களை சந்தித்து உரையாட விரும்பினேன். தாங்கள் இவ்வளவு விரைவாக எங்கு செல்கின்றீர்கள்?' என்று வினவினேன். அதற்கு 'இப்னு அப்பாஸே! உஸ்மான் ஒரு ஸதகா கொடுத்துள்ளார் அல்லாஹ் அதனை ஏற்றுக் கொண்டு விட்டான். சுவர்க்கத்தில் அவரது திருமணத்திற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனக்கும் திருமணத்தில் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று கூறினார்கள்.'' (ஸீரத் அமீருல் மு.்.மினீன் உஸ்மான் பின் அ.்.ப்வான், பக்கம் 51-52. தொகுதி 1 தாருல் மாரி.்.பா பெய்ரூட் லெபனான் 2006)

(ஹஸ்ரத் கலீ.்.பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் ஜும்ஆ சொற்பொழிவிலிருந்து நாள்: 05-02-2022)

# ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள்

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஆரம்ப கால முஸ்லிம்களுள் ஒருவராக இருந்து இஸ்லாத்தின் நான்காவது கலீஃபாவாக ஆனார்கள். திருக்குர்ஆன் மற்றும் இஸ்லாமிய மார்க்கச் சட்டங்களில் அவர்களது முழுமையான ஞானம் முஸ்லிம்களால் இன்றும் கூட அங்கீகரிக்கப்பட்டு பெரிதும் மதிக்கப்படுகிறது.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரரின் மகன் ஆவார்கள். அவர்கள் சிறுவராக இருந்தபோது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவரை தம் பராமரிப்பில் வைத்துக் கொண்டார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு சிறுவராக இருந்த அலீ (ரலி) அவர்கள் மீது தனிப்பட்ட நேசம் இருந்தது. மக்காவில் ஹிரா குகையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தியானத்தில் இருந்தபோது அன்னாருக்கு ஹஸ்ரத் அலீ உணவு கொண்டு போய் கொடுப்பார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு பத்து வயதான போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களும் அல்லாஹ்வை புகழ்ந்து குனிந்து வணங்குவதை உற்றுக் கவனித்தார்கள். அது பற்றி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வினவியபோது அவர்கள் நாங்கள் அல்லாஹ்வை தொழுதோம். அவன் ஒருவனே. நீரும் அவ்வாறே செய்வீராக. உமது தலையை லாத், உஸ்ஸா சிலைகளுக்காக குனிய வைக்காதிருப்பீராக எனக் கூறினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் போதனைகளால் ஈர்க்கப்பட்ட ஹஸ்ரத் அலீ அவர்கள் உடனடியாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

கி.பி 622-ம் ஆண்டு முஸ்லிம்கள் அதிக கொடுமை -களுக்கு இலக்காகி மக்கவை விட்டு ஹிஜ்ரத் செய்து மதீனா சென்றனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு ஹிஜ்ரத் செய்யுமாறு அல்லாஹ் கட்டளையிட்ட சமயத்தில் மக்கத்து எதிரிகள் அன்னாரது வீட்டைச் சுற்றி முற்றுகையிட்டு அன்னாரைக் கொலை செய்யத் திட்டமிட்டனர். அன்றைய தினம் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் படுக்கையில் படுத்திருக்குமாறு கோரப்பட்டார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பாதுகாப்புடன் மக்கத்து எல்லைகளை விட்டு வெளியேறும் வரை தம் உயிரைப் பணயமாக வைத்து அலீ (ரலி) அவர்கள் அவ்வாறே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் படுக்கையில் படுத்திருந்தார்கள்.

ஹிஜ்ரத் சென்று மதீனா சென்ற பிறகு முதல் பத்து ஆண்டு காலத்தில் ஹஸ்ரத் அலீ (ரலி) பல பொறுப்புமிக்க பணிகளில் ஈடுபட வேண்டி வந்தது. அதில் போர் பயணங்களில் பங்கெடுத்தல், தற்காப்பு போர், முஸ்லிம்களின் தூதராக செல்லுதல் ஆகியவை முக்கிய பணிகளாகும்,

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் எவ்வாறு முதல் கலீஃபாவை ஏற்றுக் கொண்டார்கள் என்பது பற்றி இஸ்லாமிய அறிஞர் இப்னு ஜரீர் அத்தபரீ தமது தரீக்குர் ரசூல் வல் முல்க் என்னும் நூலில் எழுதுகிறார்:

“அலீ (ரலி) தம் வீட்டில் இருந்தபோது ஒரு மனிதர் வந்து அபூபக்ர் பள்ளிவாசலில் இருந்து கொண்டு முஸ்லிம்களிடம் பைஅத் வாங்கிக் கொண்டிருக்கிறார் எனக் கூறினார். இதனைக் கேட்ட ஹஸ்ரத் அலீ (ரலி) உடனே வீட்டை விட்டுப் புறப்பட்டார்கள். தமது ஆடையைக் கூட சரியாக அணிவதற்கு அவகாசம் எடுத்துக் கொள்ளவில்லை. அப்போது ஒரு நீள சட்டையை அணிந்திருந்தார்கள். எந்த அளவுக்கு அவசரத்தைக் காட்டினார்கள் என்றால் பைஅத் செய்யும் விஷயத்தில் அவர்கள் சிறிதும் பின்தங்கி விட விரும்பவில்லை. உடனே ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களிடம் பைஅத் செய்த பின் அவர்களின் அருகில் உட்கார்ந்தார்கள்.”

ஒருமுறை முஸ்லிம்கள் ஜெருஸலேமைக் கைப்பற்றிய போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலி அவர்களை இஸ்லாமியப் பேரரசின் தலைமையிடமாக விளங்கிய மதீனாவுக்கு பொறுப்பாளராக நியமித்தார்கள். இது இரண்டாவது கலீஃபா ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் மீது கொண்டிருந்த வலுவான நம்பிக்கையை நிரூபிக்கிறது.

### கிலாஃபத்

மூன்றாவது கலீஃபா ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் படுகொலை செய்யப்பட்ட பின் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் இக்கட்டான அமைதியற்ற சூழலில் நான்காவது கலீஃபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கிலாஃபத் பதவிக்கு சிறிதும் ஆசைப்படவில்லை. ஆனால் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைக் கொன்ற கலகக்காரர்கள் 1000-க்கும் மேற்பட்டவர்கள் இன்னும் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்ததால் மக்கள் பீதியில் இருந்தனர். முஸ்லிம்கள் மதீனாவிலுள்ள ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மஸ்ஜிதில் ஒன்று கூடி அன்ஸார், முஹாஜிரீன் எல்லாரும் ஒரே குரலில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை கிலாஃபத் பதவியை ஏற்றுக் கொண்டு நாட்டில் அமைதியை நிலைநாட்டும்படி வேண்டினார்கள். அவர்கள் யாவரும் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் கையில் பைஅத் செய்தனர்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் மக்களுக்கு ஆற்றிய முதல் உரையில் திட்டவட்டமாக இவ்வாறு கூறினார்கள்:

“கஅபத்துல்லாஹ்வை சுற்றிய பகுதிகள் புனிதம் நிறைந்தவை. அல்லாஹ் முஸ்லிம்களை சகோதரர்களாக வாழும்படி கட்டளையிட்டுள்ளான். ஒரு முஸ்லிம் மற்றவர்களுக்கு வாயினாலோ, கையினாலோ தீங்கிழைக்கக் கூடாது. மற்றவர்களுடன் கொடுக்கல் வாங்கல் செய்யும் போது இறைவனுக்கு அஞ்சுங்கள். நியாயத் தீர்ப்பு நாளில் உங்களின் செயல்பாடுகளுக்கு பதில் சொல்ல வேண்டியது வரும். இறைவனுக்குக் கட்டுப்பட்டு நடங்கள். அவன் வல்லவனாவான். அவனது கட்டளைகளை ஒதுக்கி விடாதீர்கள்.”

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கடினமான காலம் வர இருப்பதை உணர்ந்தார்கள். நம்பிக்கையற்ற தன்மையும், சட்டத்தை மீறும் போக்கும் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன. சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட கடின உழைப்பு பொறுமை, சாதுரியம் ஆகியவை தேவைப்பட்டன. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் மக்களின் ஒத்துழைப்பாலும் நம்பிக்கைக்குரிய ஆலோசகர்களின் துணையோடும் அவற்றை நிறைவேற்ற எண்ணினார்கள்.

முதல் சொற்பொழிவுக்குப் பின் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை ஹஸ்ரத் தல்ஹா, ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) ஆகியோரை உள்ளடக்கிய ஒரு குழுவினர் சந்தித்து, ஷரீஅத் சட்டத்தை அமல்படுத்தும்படியும், ஹஸ்ரத் உதுமான் (ரலி) அவர்களைக் கொலை செய்தவர்களைத் தண்டிக்கும் படியும் வற்புறுத்திக் கூறினர். அப்போது கலீ∴பா அவர்கள் கூறினார்கள்:

“நான் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் மரணத்திற்கு பழிவாங்காமல் விடப் போவதில்லை. ஆனால் நீங்கள் பொறுமையை மேற்கொள்ளுங்கள். இப்போது நிலைமை சீரடையவில்லை. கலகக்காரர்கள் மதீனாவில் சக்தி படைத்தவர்களாய் இருக்கிறார்கள். நாம் அவர்களின் பிடியில் இருக்கின்றோம். என் சொந்த நிலைமையும் சீராக இல்லை. தயவுகூர்ந்து பொறுமையைக் கைக்-கொள்ளுங்கள். எப்போது நிலவரம் சரியாகுமோ, அப்போதுநான் என் கடமையை நிறைவேற்றுவேன்.”




கலீ∴பாவின் இத்தகைய பதில்கள் தோழர்கள் வட்டத்தில் திருப்தியைத் தரவில்லை. எனினும் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் முக்கியமான பதவிகளில் தமக்கு நம்பிக்கைக்குரிய நபர்களை நியமனம் செய்ய முனைந்தார்கள். பல கவர்னர்கள் நீக்கப்பட்டு நம்பிக்கைக்குப் பாத்திரமான சல்மான் ∴பார்ஸி, மாலிக் அல் அஷ்தர் ஆகியோர் நியமிக்கப்பட்டார்கள். இத்தகைய மாற்றத்தை எவரும் அங்கீகரிக்கவில்லை. பலரையும் திருப்பதிப்படுத்துவதற்காக சில சாதுரியமான முடிவுகளை எடுக்க வேண்டும் என அவர்கள் ஆலோசனை கூறினர். இது பற்றி இப்னு கல்தூன், பக்கம் 165-ல் இவ்வாறு வருகிறது.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் ஆட்சிக் கால ஆரம்பத்தில் அல்மஹீராவால் கூறப்பட்ட ஆலோசனை என்னவெனில் ஸுபைர், முஆவியா, தல்ஹா ஆகியோரை நீங்கள் அவர்களின் நிலையிலேயே விடுங்கள். நிலைமைகள் சீரடைந்து மக்கள் பைஅத் செய்ய முன்வரட்டும். பின்பு நீங்கள் நினைத்தபடி மாற்றங்களைச் செய்யுங்கள். இப்படி செய்தால் இது ஒரு திறமையான அரசியல் நடவடிக்கையாக இருக்கும் என ஆலோசனை கூறினர். இதற்கு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் இசையவில்லை. ஏனெனில் ஏமாற்றுதலை இஸ்லாம் தடுக்கிறது எனக் கூறி விட்டார்கள்.

### ஒட்டகப் போர்:

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கன் கொலை செய்யப்பட்டபோது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹஜ்ஜுக்காகப் பயணம் மேற்கொண்டிருந்தார்கள். அவர்கள் மக்காவில் ஒரு பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்தி ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கொலை செய்யப்பட்டதற்கு பழிதீர்ப்பதற்காக ஆதரவைக் கேட்டார்கள். நூற்றுக்-கணக்கான மக்களைத் திரட்டிக் கொண்டு பஸ்ரா சென்று மேலும் ஆதரவு கோரியதில் மொத்தம் 3000 பேர் படையில் சேர்ந்து விட்டனர். பஸ்ரா நகரம் கருத்து வேற்றுமை கொண்டிருந்தது. அந்நகரை தம் ஆளுகையில் எடுத்துக் கொண்ட பின் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு எதிராக எழுந்த ஒவ்வொரு கிளர்ச்சியாளரையும் இனம் கண்டு ஒடுக்கினர். நூற்றுக்கணக்கான நபர்கள் விசாரிக்கப்பட்டு குற்றவாளி-களாகக் கண்டறியப்பட்டவர்கள் கொல்லப்பட்டனர்.

பஸ்ரா நகரம் பயங்கரமான நிலைக்குத் தள்ளப்பட்டது. இப்போது மீண்டும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) கிளர்ச்சியாளர்-களைத் தண்டிப்பதற்காக எஞ்சியுள்ள முஸ்லிம்களிடம் உதவிக்காக கோரினார்கள். இதனால் மீண்டும் அமைதியற்ற சூழ்நிலையே நிலவியது. ஹஸ்ரத் தல்ஹா (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு ஆதரவு கொடுத்தனர்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தம் சொந்தப் படையுடன் பஸ்ரா சென்றார்கள். அப்போது கூ∴பாவிலிருந்து 9000 படை வீரர்கள் சேர்ந்து கொண்டனர். பஸ்ரா சென்றடைந்ததும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு ஒரு சமாதானத் தூது அனுப்பினார்கள். அதில் ‘பழிவாங்கக் கோருவது நியாயமான செயல்தான். ஆனால் கலீ∴பாவுடைய கரங்களைப் பலப்படுத்தாமல் தாங்கள் எப்படி இப்படிப்பட்ட தீய எண்ணம் கொண்டவர்களைப் பணியச் செய்வீர்கள்? தாங்கள் உண்மையிலேயே கிளர்ச்சிக்கு முடிவுகட்ட விரும்பினால் கலீ∴பாவின் கொடியின் கீழ் வாருங்கள். மக்களை உள்நாட்டுப் போரில் ஈடுபடுத்த முயலாதீர்கள்’ என்று கூறப்பட்டிருந்தது.

இரு குழுவினரும் சமாதானத்தை விரும்பியபோதும் நயவஞ்சகர்களின் திட்டத்தால் போர் மூண்டது. அதில் ஹஸ்ரத் அலி (ரலி) பயந்தபடியே முஸ்லிம்களுள் 10000 பேர் மடிந்தனர். இப்போரில் அலி (ரலி) அவர்களுக்கு வெற்றி கிடைத்தது. ஆனால் இத்தகைய தேவையற்ற உயிரிழப்பை எண்ணி அவர்களது உள்ளத்தில் உதிரம் கொட்டியது.

பஸ்ராவில் நடந்த இந்த ஒட்டகப் போரில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கிளர்ச்சியாளர்களைத் தோல்வியுறச் செய்தார்கள். எனினும் அமைதியின்மை நீடித்தது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மதீனாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். தல்ஹா, ஸுபைர் ஆகிய இருவரும் கொல்லப்பட்ட செய்தி கேட்டு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கண்ணீர் வடித்தார்கள்.

ஒருமுறை ஹஸ்ரத் நபி (ஸல்) இவ்வாறு கூறுவதை ஹஸ்ரத் அலி (ரலி) கேட்டார்கள்: ‘ஒவ்வொரு தூதருக்கும் ஒரு சீடர் உண்டு. என்னுடைய சீடர் அஸ்ஸுபைர் ஆவார்.’

### ஸி∴பின் போர்:

முஆவியா சிரியாவின் கவர்னராக இருந்தார். அவர் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை கிலா∴பத் பதவியிலிருந்து நீக்க திட்டமிட்டார். அதன் காரணமாக கி.பி 657-ல் போர்

மூண்டது. நீண்ட காலம் நடந்த இப்போர் ஸி∴பின் போர் என்று அழைக்கப்படுகிறது. முடிவில் சமாதானம் பேசப்பட்டது. அதில் முடிவு ஏற்படவில்லை. 4000 பேர் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் இராணுவத்திலிருந்து பிரிந்து சென்றனர். பிரிந்து சென்ற படைக்கும் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் நம்பிக்கைக்குரிய படைக்கும் இடையே போர் மூண்டது. இதில் எதிரி படைகள் தோற்கடிக்கப்பட்டன. இது நஹ்ரவன் போர் என்று அழைக்கப்படுகிறது.

மறைவு:

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் பெரு முயற்சிக்கு மாற்றமாக முஸ்லிம்களிடையே பல பிரிவுகளும், குழப்பங்களும் தோன்றின. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் 661-ம் வருடம் கூ∴பாவில் தம் 62-வது வயதில் தாக்குதலுக்கு உள்ளானார்கள். ரமலான் மாதம் ∴பஜ்ர் தொழுகையை நிறைவேற்றுகின்றபோது இந்தக் கொலைவெறித் தாக்குதல் நடைபெற்றது. பின் 2 நாட்கள் மட்டுமே உயிருடன் இருந்தார்கள். தனது மகன்களிடம் கொலையாளியை ஒன்றும் செய்ய வேண்டாம். அவருக்கு உணவும் உடையும் வழங்குங்கள் என்று கூறினார்கள். மற்றொரு இடத்தில் அன்னார் இவ்வாறு கூறியதாக கூறப்படுகிறது.


'என்னைக் கொல்லத் துணிந்த கொலையாளியை இரக்கத்தோடு நடத்துங்கள். உணவு, குடிநீர் கொடுங்கள். நான் இறந்து போனால் அவரது வாழ்வு நீதியின் அடிப்படையில் உள்ளது. நீதி நிலைநாட்டப்பட்டு அவர் ஒருவேளை கொல்லப்பட்டால் அவரது உடலைச் சிதைக்கக் கூடாது. அவ்வாறு செய்வதை நபி (ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள்.'

அன்னாரின் உடல் ஈராக்கில் நஜ∴ப் என்னும் இடத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. (The Review of Religions எனும் பத்திரிக்கை 2007 டிசம்பர் இதழில் வெளி வந்த கட்டுரையைத் தழுவி எழுதப்பட்டது)

(தொகுப்பு: J. சய்யிது அன்வர்)


## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் முன்னேற்றங்கள் தொடர்பாக கண்ணியத்திற்குரிய கலீஃபாக்களின் முன்னறிவிப்புகள்

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:




இஸ்லாம் மிகவும் நலிவடைந்த இந்தக் காலகட்டத்திலும் எல்லாம் வல்ல இறைவன் தன்னுடைய ஒரு தூதர் மூலம் அவன் புறமிருந்து இஸ்லாத்திற்கான வெற்றி மற்றும் உதவியின் நேரம் மீண்டும் வந்து விட்டது என்ற நற்செய்தியை வழங்கியுள்ளான். மேலும் மக்கள் கூட்டம் கூட்டமாக இஸ்லாத்தில் நுழைவார்கள். மீண்டும் இஸ்லாமியர்களுக்குள் அதே ஆன்மிகத்தின் ஆன்மா ஊதப்படும். எவர்கள் ஆணவத்தை மேற்கொள்ளவில்லையோ அவர்கள் அருளுக்குரியவர்கள் ஆவர். மேலும் இறைவனுடைய பணிக்கு கண்ணியம் அளியுங்கள். அதன் மூலம் நீங்களும் கௌரவிக்கப் –படுவீர்கள். (ஹகாயிகுல் ஃபுர்கான் தொகுதி 4 பக்கம் 533)

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:



தீர்மானிக்கப்பட்ட மற்றும் உறுதியான விஷயம் என்னவென்றால், சூரியன் மறையலாம். நட்சத்திரங்கள் தன்னுடைய இடத்தை விட்டு நகர்ந்து விடலாம். பூமி சுற்றுவதை நிறுத்தி விடலாம். ஆனால், முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) மற்றும் இஸ்லாத்தின் வெற்றியில் தற்போது எந்தவொரு நபரும் தடை ஏற்படுத்த முடியாது. திருக்குர்ஆனின் கட்டளைகள் மீண்டும் நிலைநாட்டப்படும். அதன் மூலம் உலகம் தன்னுடைய கைகளினால் செய்த சிலைகள் அல்லது மனிதர்களை வணங்குவதை விட்டு விட்டு ஏக இறைவனை வணங்கும். உலகின் நிலை இந்த திருக்குர்ஆனின் போதனைகளுக்கு எதிராக இருந்தாலும் கூட இஸ்லாமிய ஆட்சி மீண்டும் நிலைநாட்டப்படும். அதன் பிறகு மீண்டும் அதனுடைய வேரை அசைத்துப் பார்ப்பது சாத்தியமே இல்லை. (தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன் பக்கம் 324)

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கூறுகின்றார்கள்:



ஒருநாள் வரும். எல்லாம் வல்ல இறைவனால் நிறுவப்பட்ட இயக்கமானது இவ்வளவு பெரிய ஆற்றல் வாய்ந்ததாக உள்ளதே! என்பதை மக்கள் வியப்புடன் காண்பார்கள். வெளிப்படையாகப் பார்க்கும் போது பலவீனமாகத் தென்படு –கின்றனர். மேலும் செல்வத்திலும் விலக்கப் –பட்டிருக்கின்றார்கள். காரணிகளில் இருந்தும் விலக்கப்பட்டிருக்கின்றார்கள். உலகின் கௌரவத்தில் இருந்தும் விலக்கப்பட்டிருக்கின்றார்கள். எல்லா புறமிருந்தும் தூற்றப்படுகின்றார்கள்; இழிவுபடுத்தப்படு –கின்றார்கள். மேலும் இந்த இயக்கத்தை உலகம் தன்னுடைய காலடியில் நசுக்க விரும்பியது. ஆனால் எல்லாம் வல்ல இறைவனின் அருளால் விண்ணின் உயரத்தை எட்டி விட்டது.


மேலும் அன்னார் இரண்டாம் நூற்றாண்டில் இஸ்லாத்தின் வெற்றி தொடர்பாக இவ்வாறு கூறுகின்றார்கள்: நான் இதற்கு முன்னரும் பலமுறை கூறியுள்ளேன். என்னுடைய கணிப்பின் படி அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இரண்டாம் நூற்றாண்டானது இஸ்லாத்தின் வெற்றிக்கான நூற்றாண்டாகும். இதில் அனைத்து உலகிலும் இஸ்லாம் வெற்றி பெறும். முஸ்லிமாக இருந்தாலும் முஸ்லிம் அல்லாதவராக இருந்தாலும் சரியே! அஹ்மதிய்யா ஜமாஅத் செய்த அந்தத் தொண்டுகளை எடுத்துக் கூறியவாறு உண்மையிலேயே இந்த அஹ்மதிய்யா ஜமாஅத் தான் இஸ்லாத்திற்கு தொண்டு செய்வதற்காக நிறுவப்பட்டுள்ளது என்று பறைசாற்றக் கூடியவர்களாகத் திகழ்வார்கள். மேலும் அது உலகத்தின் உள்ளங்களை வெற்றி கொண்டு முஹம்மது

(தொடர்ச்சி 17-ஆம் பக்கம்...)

# முதல் கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் ஹாஃபிஸ் அல்ஹாஜ் ஹக்கீம் மவ்லானா நூருத்தீன் (ரலி) அவர்கள்

முஅல்லிம் M. ஷாஜஹான்

அல்லாஹுத்தஆலா தன் ஒளியை உலகில் பரவச் செய்ய நபிமார்களின் தொடரை ஏற்படுத்திருக்கின்றான். இவ்வாறாக நபிமார்கள் இவ்வுலகிற்கு வந்து தமது பொறுப்பை முழுமை செய்து தமது வாழ்வை கழித்த பின் இவ்வுலகை விட்டு தம் அன்பிற்குரிய இறைவனிடம் சென்று விடுகின்றார்கள். அவ்வாறான தருணத்தில் இறைவன் கிலா∴பத் என்ற அமைப்பின் வடிவில் நபிமார்களின் காலத்தில் என்ன அருள்கள் பரக்கத்துகள் இருந்தனவோ அதனை தொடர செய்வதற்கான ஏற்பாட்டை செய்து விடுகின்றான்.



அல்லாஹ் திருக்குர்ஆனில் கிலா∴பத் தொடர்பாக இவ்வாறு கூறுகின்றான்: மேலும் அல்லாஹ் உங்களுள் நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவர்களை, அவர்களின் முன்னோர்களை கலீ∴பாவாக (தலைவராக) ஆக்கியது போன்று இப்பூமியில் கலீ∴பாவாக ஆக்குவதாகவும், அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களின் மார்க்கத்தை அவர்களுக்கு உறுதிப்படுத்துவதாகவும், அவன் அவர்களுக்கு அவர்களது அச்சத்தின் நிலைக்குப் பிறகு (அதை) அமைதியின் நிலையாக மாற்றுவதாகவும் அவர்களிடம் வாக்குறுதி அளித்துள்ளான். அவர்கள் என்னை வணங்குவார்கள். எதனையும் எனக்கு இணையாக்க மாட்டார்கள். இதன் பின்னரும் நிராகரிப்பவர்கள் கட்டுப்படாத -வர்களாவர். (24:56)

இதைப் போன்று ஹஸ்ரத் நபி பெருமானார் (ஸல்) அவர்களும் தம் உம்மத்தில் கிலா∴பத் ஏற்படுவது தொடர்பாக முன்னறிவித்திருக்கின்றார்கள். திருக்குர்ஆன் மற்றும் நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புக்கு ஏற்ப அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அன்னார் (அலை) அவர்கள் மூலம் ஏற்பட்ட அருள்களை தொடரச் செய்வதற்கு இரண்டாவது வல்லமையான கிலா∴பத்தை இறைவன் ஏற்படுத்தினான்.


இந்த இரண்டாவது வல்லமையைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் முன்னரே தகவல் கொடுத்து இருந்தார்கள். அதற்கு ஏற்ப அன்னார் (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் ஹா∴பிஸ் ஹாஜி ஹக்கீம் மவ்லானா நூருத்தீன் சாஹிப் முதலாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் பைஅத் வாயிலாக 27 மே 1908-இல் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் கிலா∴பத் தோன்றியது.

இரண்டாவது வல்லமையின் முதல் தோற்றம் அஹ்மதிய்யத் எனும் வானத்தின் ஒளிமயமான நட்சத்திரம், குர்ஆனின் ஆழிய ஞானங்களின் பெரு ஊற்று, சித்தீக்கின் அழகிய பிரதிபிம்பமான ஹாஜியுல் ஹரமைன் சய்யிதுனா ஹஸ்ரத் ஹா∴பிஸ் ஹக்கீம் மவ்லானா நூருத்தீன் பேர்வி முதல் கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் 1834-இல் பேரா என்ற ஊரில் ஹஸ்ரத் ஹா∴பிஸ் குலாம் ரஸூல் மற்றும் நூர் பக்த் என்ற பெற்றோருக்கும் பிறந்தார்கள். அன்னாரது முன்னோர்களின் 32-வது தலைமுறை ஹஸ்ரத் உமர் ∴பாரூக் (ரலி) வரையும் அன்னாரின் தாயுடைய தலைமுறை ஹஸ்ரத் அலி (ரலி) வரையும் சென்று சேர்கிறது. இவ்வகையில் அன்னார் (ரலி) அவர்கள் ∴பாரூக் குடும்பத்தையும் அலி குடும்பத்தையும் சார்ந்தவர்கள் ஆவார்கள்.

சய்யிதுனா ஹஸ்ரத் ஹா∴பிஸ் ஹக்கீம் மவ்லானா நூருத்தீன் பேர்வி முதல் கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தன் தாயின் அரவணைப்பில் இருக்கும் சிறு வயதிலேயே திருக்குர்ஆனை கற்றுக் கொண்டார்கள். அன்னார் ஆரம்பத்தில் இருந்து அற்புதமான குர்ஆன் ஹா∴பிழ் ஆவார்கள், அவர்கள் நீச்சலில் ஆர்வம் உள்ளவர்களாக இருந்தார்கள். சிறு வயதிலேயே நூல்களின் மீது ஆர்வம் அதிகம் இருந்தது. கல்வி கற்பதற்கு லாஹூர், ராம்பூர், லக்னோ, டில்லி மற்றும் போபால் போன்ற இடங்களில் தங்கி -யுள்ளார்கள். கல்வி ஞானத்தை பெற வேண்டும் என்பதற்காக மக்கா மதீனாவும் சென்றார்கள். கல்வியைக் கற்றபின் தம் ஊருக்கு திரும்பினார்கள். பேராவில் குர்ஆன் கரீம் மற்றும் ஹதீஸ் தர்ஸ் வகுப்பைத் தொடங்கினார்கள். அதனுடன் மருத்துவத்தையும் பார்த்து வந்தார்கள். தொலை தூரத்திலிருந்து மக்கள் மருத்துவம் பார்ப்பதற்காக அன்னாரிடம் வருகை தருபவர்களாக இருந்தார்கள்.

சய்யிதுனா ஹஸ்ரத் ஹா∴பிஸ் ஹக்கீம் மவ்லானா நூருத்தீன் பேர்வி முதல் கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுக்கு 1885-ஆம் ஆண்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஒரு பிரசுரத்தை முதல் முதலில் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அதன் தாக்கம் அன்னார் மீது எந்த அளவுக்கு ஏற்பட்டது எனில் அன்னார் (ரலி) அவர்கள் ஹுஸூர் (அலை) அவர்களை கண்ணார காண காதியான் வந்து சேர்ந்தார்கள். இந்த சந்திப்புக்கு பின்னர் ஹுஸூர் (அலை) அவர்களின் அர்ப்பணிக்கும் தொண்டர்களில் இணைந்து கொண்டார்கள்.

முதல் பைஅத் நிகழ்ச்சி 1889-ஆம் ஆண்டு லூதியானாவில் நடைபெற்றபோது அன்னார் (ரலி) அவர்கள் முதல் நபராக பைஅத் செய்வதற்கான நல்வாய்ப்பை பெற்றார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் 1890-ல் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என வாதம் செய்த போது எவ்வித தயக்கமும் இன்றி ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் போன்று ஹுஸூர் (அலை) அவர்களின் வாதத்தின் மீது நம்பிக்கை கொண்டார்கள்.



ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஆயினா கமாலாத்தே இஸ்லாம் என்ற தமது நூலில் கூறுகின்றார்கள்:

“நான் இரவு பகலாக இறைவனிடம் மன்றாடி வேண்டினேன். என் இறைவா! எனது உதவிக்கும் ஒத்தாசைக்கும் யார் உள்ளார்? நான் தனிமையில் உள்ளேன். துஆக்களின் பக்கம் கை மீண்டும் மீண்டும் எழுந்தது. வானின் சூழல் எனது துஆவால் நிறைந்த போது இறைவன் எனது பணிவு மற்றும் துஆவுக்கு ஏற்புடைமையின் தகுதியை வழங்கினான். அகிலங்களின் இறைவனின் ரஹ்மத் கர்வம் பொங்கி எழுந்தது. மேலும் அல்லாஹ் எனக்கு ஒரு மனத்தூய்மையான நண்பரை வழங்கினான்.... அவருடைய பெயர் அவருடைய ஒளிமயமான குணத்தை போன்று நூருத்தீன் ஆகும்.’’ (ஆயினயே கமாலாத்தே இஸ்லாம் ரூஹானீ கஸாயீன் தொகுதி 5 பக்கம் 581-582)

இதே போல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது ஹஸ்ரத் முதல் கலீ்பத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுக்கும் அசாதாரணமான அன்பும் அர்ப்பணிப்பின் தொடர்பும் இருந்தது.

ஒருமுறை ஆண்டு மாநாட்டிற்கு வந்திருந்த நண்பர்களிடம் கூறினார்கள்: ‘நாம் என்ன? நமது இருப்பு என்ன? என நம்மைப் பற்றி ஏதும் சிந்திக்க வேண்டாம். ஒருவேளை நாம் மகான்களாக இருந்திருந்தால் வீட்டிலேயே இருந்திருப்போம். தூய்மையானவர்களாக இருந்திருந்தால் பிறகு இமாமின் தேவை என்ன இருக்கப் போகிறது? நூல்களின் மூலம் இந்த நோக்கம் கிடைக்க பெறும் என்றால் பிறகு நமக்கு என்ன தேவை இருக்கிறது? நம்மிடம் அதிகமான நூல்கள் இருந்தன. ஆனால் இல்லை. இவற்றால் ஒன்றும் ஆகப் போவதில்லை..... இதை போன்றே எந்த அளவுக்கு நாம் இங்கு இருக்கிறோமோ தத்தமது நோயால் பீடிக்கப் -பட்டுள்ளோம். மேலும் இங்கு நலம் பெற அமர்ந்துள்ளோம் எனில் பிறகு நமது ஏதேனும் அசைவினால் கோபம் கொள்வது அறிவுடைமை இல்லை.... உண்மையான ம்ஃமூர் (இறைவன் புறத்திலிருந்து வந்தவர்) ஒருவரே ஆவார். அவர் மஸீஹ் மற்றும் மஹ்தியாக வந்துள்ளார். எனவே இறைவனிடம் உதவி கேளுங்கள். திக்ருல்லாஹ்வின் பக்கம் வாருங்கள். அவரே வெட்கக்கேடு மற்றும் மறுப்பில் இருந்து பாதுகாப்பவர் ஆவார். அவரையே முன்மாதிரியாக ஆக்கிக் கொள்ளுங்கள். மேலும் ஒரே தலைவரும் பின்பற்றப்பட வேண்டியவரும் இமாமுமான அவரை பின்பற்றி செல்லுங்கள்.’ (சூரா ஜுமுஆ விளக்க உரை பக்கம் 66)

காலத்தின் இமாமின் மீது எவ்வாறான தொடர்பும் நம்பிக்கையும் கொண்டிருந்தார்கள் என்பதை இந்த மேற்கோளின் ஒளியில் இருந்து நாம் விளங்கிக் கொள்ள முடிகிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அல் வஸிய்யத் நூலில் முன்னறிவித்திருந்தபடி அன்னாருடைய மரணத்திற்குப் பிறகு ஜமாஅத்தில் ஓர் அச்சத்தின் நிலை சூழ்ந்தது. அப்பொழுது ஹஸ்ரத் முதலாவது கலீ்பத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் இருப்பின் மூலம் அந்த அருள்களை இறைவன் தொடரச் செய்து அச்சத்தின் நிலையை அமைதியில் மாற்றினான். அன்னார் (ரலி) அவர்கள் கலீ்பாவாக தேர்வு செய்யப்பட்டபோது ஜமாஅத்தில் கிலா்பத்தை விட அஞ்சுமனுக்கு உயர்வை வழங்கும் ஒரு குழு இருந்தது. அன்னார் (ரலி) அவர்களின் கிலா்பத் காலகட்ட சீரிய பணிகளில் மிகப் பெரிய பணி கிலா்பத் என்ற அமைப்பை உறுதியுடன் நிலை பெறச் செய்ததாகும். மேலும் கிலா்பத்தின் தேவை அதன் முக்கியத்தும் மற்றும் அவசியத்தைப் பற்றி மீண்டும் மீண்டும் ஜமாஅத்தினர் முன் எடுத்து வைத்து ‘கலீ்பாவை இறைவனே நியமிக்கின்றான் மனித திட்டங்களினால் எந்த மனிதரும் கலீ்பா ஆக முடியாது’ என்ற நம்பிக்கையை ஜமாஅத்தில் உறுதியாக நிலை பெறச் செய்தார்கள்.

கிலா்பத் என்ற இறை அமைப்பை அழிப்பதற்கு கிலா்பத் மறுப்பாளர்கள் என்னென்ன குழப்பங்களை தடைகளை உருவாக்கினார்களோ மேலும் மக்களை தூண்டி விட்டு தமக்கு ஒத்த கருத்தை உடையவர்களாக ஆக்குவதற்கு என்னென்ன வேலைகளை செய்தார்களோ அதனை ஹஸ்ரத் முதல் கலீ்பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் சான்றுகளுடன் இறை உதவியுடன் தவிடுபொடியாக்கினார்கள்.

ஹஸ்ரத் முதல் கலீ்பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் சித்தீக்கிய குணயியல்புகளைப் பெற்றவராக இருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எந்த பணிகளின் பக்கம் அதிக கவனம் செலுத்தினானோ அதே பணிகளின் பக்கம் தம்முடைய கவனத்தை செலுத்தி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகையின் நோக்கத்தை முழுமை பெறச் செய்யக் கூடியவராக இருந்தார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கலீ்பா ஆனவுடன் குர்ஆன் கரீமை ஒன்று திரட்டும் பணியை மேற்கொண்டார்கள். இந்த காலத்தில் ஒன்று திரட்டுவது என்பது குர்ஆன் கரீமின் போதனைக்கு ஏற்ப செயல்படுவது என கூறி அதன் பக்கம் அதிக கவனம் செலுத்தினார்கள்.

பிறகு ஸக்காத்திற்கான ஏற்பாட்டை அபூபக்ர் (ரலி) அவர்கள் செய்தார்கள். இது ஒரு மகத்தான பணியாகும். ஸக்காத்திற்கான அமைப்புக்கு உயர்தர கட்டுப்படுதலின் தேவை உள்ளது என்று கூறினார்கள்.

### சமுதாய ஒற்றுமைக்கான திட்டம்:

ஹஸ்ரத் முதல் கலீ்பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஒருபுறம் கிலாபத்தை உறுதிப்படுத்துதல் என்ற பணிகளில் கவனம் செலுத்தினார்கள் என்றால் மறுபுறம் சமூக

ஒற்றுமையை நிலை நிறுத்த முழு முயற்சி செய்தார்கள். அன்னாரின் உரைகள் மற்றும் கட்டுரைகளை வாசிக்கும் போது தெரிய வருவது என்னவென்றால், அன்னாரின் அனைத்து உரைகளிலும் ஒரு முக்கிய விஷயமாக ஒருவர் மற்றவர் மீது பரஸ்பரம் அன்பு கொண்டிருத்தல் பிரிவினையில் இருந்து விலகி இருத்தல் பற்றி வலியுறுத்தி இருப்பதை காண முடியும்.

இது பற்றி அன்னார் கூறுகின்றார்கள்: நீங்கள் கட்டுப்படு -பவர்களாக வேண்டுமென நான் விரும்புகின்றேன். கருத்து வேறுபாடு கொள்ள வேண்டாம் சண்டையிட வேண்டாம்.

ஒரு நோன்பு பெருநாள் பேருரையில் அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: 'எந்தச் சமூகமும் ஒற்றுமை இல்லாமல் உருவாக முடியாது. மாறாக நான் கூறுகின்றேன். எந்த மனிதனும் ஒற்றுமை இல்லாமல் மனிதனாக முடியாது. எந்தப் பகுதியும் ஒற்றுமை இல்லாமல் முஹல்லாவாக முடியாது. எந்தக் கிராமமும் ஒற்றுமை இல்லாமல் கிராமமாக முடியாது. எந்த நாடும் ஒற்றுமையில்லாமல் நாடாக முடியாது. எந்த அரசும் ஒற்றுமை இல்லாமல் அரசாக முடியாது. பிறகு நான் கூறுகின்றேன்: எப்போது வரை ஒற்றுமை இல்லையோ நீங்கள் எந்த வெற்றியையும் பெற முடியாது.' (பத்ர் 21 அக்டோபர் 1909 பக்கம் 10)

இது தவிர அன்னார் (ரலி) அவர்களின் திட்டங்களில் சில, சண்டையில் இருந்து தப்பித்தல், புள்ளி விவரம் சேகரித்தல், ஜுமுஆ தொழுகையின் பலன், அரபி மற்றும் குர்ஆன் கற்பித்தல், குர்ஆன் தர்ஸ், குர்ஆன் மனனம், குர்ஆனைப் பரப்புதல், தாருல் குர்ஆனிற்கான ஏற்பாடு, பேச்சாளர்கள் முரப்பிமார்களுக்கான ஏற்பாடு, மார்க்க மதரஸா நிறுவுதல், டிராக்ட் துண்டுப் பிரசுரங்களை வெளியிடுதல், பத்திரிகைகளை அதிகப்படுத்துதல், அஞ்சுமன்கள் ஏற்படுத்துதல், இலண்டன் மிஷனுக்கான சில திட்டங்கள், இறைவழியில் அழைத்தலை விரிவுபடுத்துவதற்கான திட்டங்கள், நூர் மருத்துவமனைக்கான திட்டம் போன்ற பல வெற்றிகரமான திட்டங்களை வகுத்து அதன்படி ஜமாஅத்தை வழி நடத்தினார்கள்.


ஹஸ்ரத் முதல் கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தமது கிலா∴பத் காலகட்டம் முழுவதும் இஸ்லாம் மற்றும் குர்ஆனைப் பரப்புதல் போன்ற பணிகளைச் செய்த அதே வேளையில், கிலா∴பத்தின் தேவை அதன் அவசியம் மற்றும் அதனை இறுகப் பற்றி இருத்தல் தொடர்பாக எந்த அளவுக்கு உரைகளும் குத்பாக்களும் வழங்கி இருந்தார்கள் என்றால் ஜமாஅத்தின் ஒரு பெரும் பகுதியினர் இந்த ஹப்லுல்லாஹ் - அல்லாஹ்வின் கயிற்றை உறுதியாக பற்றிப் பிடித்துக் கொண்டனர்.

ஹஸ்ரத் முதல் கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் 13 மார்ச் 1914 ஜுமுஆ நாளன்று இறையடி சேர்ந்தார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். காதியானில் உள்ள பஹிஷ்தி மக்பரா அடக்கஸ்தலத்தில் தன் அன்பிற்குரிய இமாமின் பக்கத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

*(14-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பாதங்களில் சமர்ப்பித்து விடும். (ஆண்டு மாநாடு டிசம்பர் 26, 1978 – துவக்கவுரை)


**ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கூறுகின்றார்கள்:**



எவர்கள் நம்மை அழிக்க வேண்டும் என்று விரும்புகின்றார்களோ அது அந்த மக்களின் ஒருபோதும் நிறைவேறாத கனவாகும். எந்தக் கனவு பூர்த்தியாகும் என்றால், என்னுடைய எஜமானர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் கனவு மட்டுமே பூர்த்தி ஆகும். அந்தக் கனவானது அன்னாரின் உண்மைப் பேரன்பரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி (அலை) அவர்களின்கனவாகும். முழு உலகிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடி நாட்டப்படும். மேலும் இஸ்லாத்தின் எதிரியின் அனைத்து கனவுகளும் நிறைவேறாமல் போய்விடும்; தகர்க்கப்படும். அவர்கள் தோல்வி அடைந்தவாறு வெளியேறுவார்கள். மேலும் ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வொரு நகரத்திலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கொடி நாட்டப்படும். அதாவது அந்தக் கொடியானது உண்மையிலேயே ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் கொடியாகும். இஸ்லாத்தின் அனைத்து எதிரிகளின் ஒவ்வொரு கனவும் முறியடிக்கப்படும். (அல் ஃபஸ்ல் நாளிதழ் ஜுன் 9, 1983)

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்தக் காலகட்டம் எதில் ஐந்தாவது கிலாஃபத்துடன்



கிலாஃபத்தின் புதிய நூற்றாண்டில் நாம் நுழைகின்றோமோ இன்ஷா அல்லாஹ் அஹ்மதிய்யத்தின் முன்னேற்றம் மற்றும் வெற்றிக்கான காலகட்டமாகும். நான் உங்களுக்கு நிச்சயம் உறுதியளிக்–கின்றேன். எல்லாம் வல்ல அல்லாஹ்வின் உதவிகளின் எப்படிப்பட்ட கதவுகள் திறக்கப்பட்டுள்ளது; மேலும் திறக்கப்பட உள்ளது என்றால், ஒவ்வொரு வரக்கூடிய நாளும் ஜமாஅத்தின் வெற்றிகளுக்கான நாட்கள் அருகில் உள்ளதைக் காண்பிக் –கின்றது.....

நான் மிகத் தெளிவான கண்ணோட்டத்துடன் கூறுகின்றேன். இந்தக் காலகட்டத்தில் எல்லாம் வல்ல இறைவனின் அளவில்லா உதவிகள் மற்றும் ஒத்தாசைகளைப் பெற்றவாறே முன்னேற்றத்தின் விசாலமான பாதையில் சென்று கொண்டே இருக்கும் – இன்ஷா அல்லாஹ். இந்தக் காலகட்டத்தில் அஹ்மதிய்யத்தின் முன்னேற்றத்தை எவராலும் தடுக்க முடியாது. இனி எதிர்வரும் காலங்களிலும் இந்த முன்னேற்றம் ஒருபோதும் நின்று விடாது. கலீஃபாக்களின் தொடர்கள் தொடர்ந்து கொண்டே இருக்கும். மேலும் அஹ்மதிய்யத்தின் பாதம் முன்னே சென்று கொண்டே இருக்கும் – இன்ஷா அல்லாஹ்.

(மே 27, 2008 கிலாஃபத் நூற்றாண்டு தினம் அன்று ஆற்றிய சொற்பொழிவு)

**(தொகுப்பு: A. அப்துல் நிஸார்)**

# இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்கள்

மவ்லவி N. ஸியாவுல் ஹக்

சய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களது தோற்றம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது அலைஹிஸ்ஸலாம் அவர்களின் துஆ ஏற்றுக் கொள்ளப்படுதல் மற்றும் அன்னாரது உண்மைத்துவத்திற்கு ஒரு மகத்தான அடையாளமாகும். உலகில் மனிதர்கள் பலர் தோன்றுவார்கள். ஆனால் சிலரது தோற்றம் மட்டும்தான் பல முன்னறிவிப்புகள் மற்றும் பல அடையாளங்களை கொண்டதாகத் திகமும்.

## அன்னாரைப் பற்றிய முன்னறிவிப்புகள்:

நமது நபி (ஸல்) அவர்களது ஒரு முன்னறிவிப்பு இவ்வாறு வருகின்றது:

وَيُوْلَدُ لَهُ يَنْزِلُ عِيْسَى ابْنُ مَرْيَمَ إِلَى الأَرْضِ فَيَتَزَوَّجُ

பொருள்: இப்னு மர்யம் அவர்கள் திருமணம் செய்வார்கள். அவர்களுக்கு குழந்தைகள் பிறக்கும். (மிஷ்காத் முஜ்தபாயீ பக்கம் 480, பாடம் நுஸூலுல் மஸீஹ்)

அன்னாரது வருகை குறித்து முந்தைய வேதங்களிலும் முன்னறிவிப்புகள் காணக் கிடைக்கின்றன. உதாரணமாக, யூதர்களுடைய முந்தைய வேத நூலாகிய தால்மூதில் எழுதப்பட்டுள்ளது, மஸீஹ்வுடைய ஆட்சி அவரது மகனுக்கும் பின்னர் அவரது பேரனுக்கும் கிடைக்கும். (தால்மூது தொகுப்பு ஜோசப் பர்களே பாகம் 5 பதிப்பு 1878)

அதே போன்று தஸாதீரில் ஸர்தஷ்துடைய முனறிவிப்பு ஒன்று வருகிறது அதில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு உம்மத்தில் பிளவு ஏற்படும். அப்போது அல்லாஹ் ஒரு சீர்திருத்தவாதியை அனுப்புவான். அவருக்குப் பிறகு கிலா∴பத் உடைய தொடர் ஆரம்பமாகும் என உள்ளது. (சப்ரங்க் தஸாதீர் பக்கம் 190, பதிப்பு 1280 ஹிஜ்ரி தில்லி)

இதே போன்று உம்மத்தினுடைய சான்றோர்களின் பல முன்னறிவிப்புகளும் அன்னாரின் வருகை மூலம் நிறைவேறியது. ஹஸ்ரத் ஷாஹ் நி∴மதுல்லாஹ் வலி சாஹிப் தனது கவிதையில் முன்னறிவிப்பு செய்தவாறு கூறுகிறார்கள்:

வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலம் வெற்றியுடன் முடிவடைந்த பிறகு அவரது முன்மாதிரியின்படி அவரது மகன் அவரது இடத்தில் இருப்பார்.

இவ்வாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் தோற்றமானது எல்லா விதமான முன்னறிவிப்புகளையும் முழுமை செய்தவண்ணம் நிகழ்ந்தது. மேலும் அன்னாரது 52 வருட கிலா∴பத் காலகட்டம் முழுவதுமாக இஸ்லாம் மற்றும் மனித இனத்திற்காக சேவை செய்வதில்லையே கழிந்தது. எப்படிப்பட்ட பணிகளாக இருந்தது என்றால் முழுக்க முழுக்க ஒரு நபி உடைய சிறப்புகளாக இருக்கக் கூடியதாக இருந்தன. ஆனால் அல்லாஹ் அன்னாரை நபியாக அனுப்பவில்லை. ஆனால் அல்லாஹ் அன்னாரது வருகையை கஅன்னல் -லாஹ நஸ்ஸல மினஸ்ஸமா. அதாவது வானத்திலிருந்து அல்லாஹ்வே இறங்கியது போன்று இருக்கும் என கூறியுள்ளான்.

## அன்னாரது பிறப்பு, கல்வி மற்றும் உடல் ஆரோக்கியம்:

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஜனவரி 12, 1889-ஆம் ஆண்டு, ஜமாத்தில் அவ்வல் 1306 ஹிஜ்ரி வெள்ளி மற்றும் சனிக்கிழமைக்கு இடைப்பட்ட இரவில் காதியானில் பிறந்தார்கள். அன்னாரது பெயர் பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது என்று வைக்கப்பட்டது. அன்றைய காலத்தின் வழக்கப்படி அன்னாரது ஆரம்ப கல்வி வீட்டிலேயே வழங்கப்பட்டது. திருக்குர்ஆன் பார்த்து ஓதுவது போன்றவையும் வீட்டிலேயே கற்பிக்கப்பட்டது. அன்னாரது திருக்குர்ஆன் கற்றுத் தரும் ஆசிரியராக ஹா∴பிஸ் அஹ்மதுல்லாஹ் சாஹிப் நாக்பூரி அவர்கள் இருந்தார்கள்.

அன்னார் திருக்குர்ஆனை முதன் முறையாக ஓதி முடித்தபோது ஒரு சிறப்பான நிகழ்ச்சிக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். அதில் தனது நண்பர்களையும் உறவினர்களையும் அழைத்து விருந்து கொடுத்தார்கள். நன்றி செலுத்தக்கூடிய வகையில் அந்த ஆசிரியருக்கு 150 ரூபாய் ரொக்கத் தொகையை வழங்கினார்கள். இது அன்றைய காலத்தில் மிகப்பெரிய ஒரு மதிப்பைக் கொண்டிருந்தது. மேலும் அன்று இறைவனின் புகழ் மற்றும் துஆக்கள் நிறைந்த ஒரு கவிதைத் தொகுப்பை எழுதினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸின் கல்வியை முதல் கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடமிருந்து பெற்றார்கள். சிறு வயதில் இருந்தே அறிவுரைகளை ஏற்கும் நல்ல இயல்பைக் கொண்டவாராகத் திகழ்ந்தார்கள்.

ஒருமுறை அன்னார் கூறுகின்றார்கள்: எங்களது வீட்டில் வாசல் அருகே ஒரு நாய் வந்தது. அப்போது நான் அங்குதான் நின்று கொண்டிருந்தேன். ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் வீட்டின் அறையில் அமர்ந்திருந்தார்கள். நான் அந்த நாயைப் பார்த்து திப்பு! திப்பு! என்று அழைத்தேன். இதைக் கேட்ட ஹஸ்ரத் ஸாஹிப் அவர்கள் மிகவும் கோபம் அடைந்தவாறு, உங்களுக்கு வெட்கமாக இல்லையா ஆங்கிலேயர்கள் தமது பகைமையின் காரணமாக தனது நாய்களுக்கு ஓர் உண்மையான முஸ்லிம் உடைய பெயராகிய திப்பு என்று




வைத்து விட்டார்கள். நீங்கள் இனி ஒருபோதும் அவ்வாறு கூறக்கூடாது என எச்சரிக்கிறேன் என்று கூறினார்கள். அப்பொழுது எனக்கு 8 அல்லது 9 வயதாக இருந்தது. அன்றைய தினம்தான் எனக்கு எனது உள்ளத்தில் பேரரசர் திப்பு உடைய நேசம் உருவானது.

அன்னார் சிறு வயதிலிருந்து உடல்நலம் குன்றி இருந்தார்கள். நான்கைந்து வருடங்களாக அன்னாரது கண்களில் கண் நோய் இருந்து வந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அதற்காக அதிகமாக துஆவும்செய்து வந்தார்கள். அன்னார் கல்வி கற்பதற்கு அதிகமாக வலியுறுத்தப்பட்டு வரவில்லை. தனது விருப்பப்படியே அவர்கள் பள்ளிக்குச் சென்று வந்தார்கள். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அன்னாரது ஆசிரியர்களிடம் அவர் எந்த அளவு பொறுமையாக படித்தாலும் பரவாயில்லை. அவருக்கு எவ்விதமான அழுத்தமும் கொடுக்க வேண்டாம் என்று கூறி விட்டார்கள்.ஒருமுறை அன்னாரது ஆசிரியர் அவர்களைப் பற்றி கல்வியில் மிகவும் கவனக்குறைவாக இருக்கிறார்கள் என புகார் அளித்தார்கள். அதைக் கேட்ட வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தாங்கள் எனது மகனின் மீது கவனம் செலுத்தியதற்கு மிகவும் நன்றி! எனக்கு அவர் மதரஸா செல்கின்றார் என்ற செய்தியைக் கேட்டு மகிழ்ச்சி ஏற்படுகின்றது. ஏனென்றால் எனது பார்வையில் அவரது ஆரோக்கியம் மதரஸா செல்வதற்கு தகுதியானது அல்ல எனக் கூறினார்கள்.

## அன்னாரது இறை நம்பிக்கை மற்றும் இறை நேசம்:

அன்னார் சிறு வயதிலிருந்தே இறைவன் மற்றும் இறைதூதர் மீது அளப்பரிய நேசம் கொண்டிருந்தார்கள். மேலும் துஆவில் அன்னாருக்கு ஓர் உறுதியான நம்பிக்கை இருந்தது. ஹஸ்ரத் மு.ஃப்தி முஹம்மது சாதிக் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். ஒருமுறை எனக்கு நன்கு நினைவில் இருக்கின்றது. அப்பொழுது நாங்கள் மஸ்ஜித் அக்ஸாவில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் தொழுகையில் நின்று கொண்டிருந்தோம். அப்போது மியான் மஹ்மூதுவிற்கு ஏறக்குறைய 10 வயது இருக்கும். அன்னார் ஸஜ்தாவில் மிக அதிகமாக அழுது கொண்டிருந்தார்கள். சிறு வயதிலேயே அன்னாருக்கு அல்லாஹ்வுடனும் அவனது ரஸூலுடனும் ஒரு சிறப்பான நேசம் இருந்தது அங்கு வெளிப்பட்டது. சிறு வயதிலேயே இல்ஹாம் கஷ்.ஃப் போன்றவற்றை பெறக் கூடியவராக அன்னார் திகழ்ந்தார்கள்.

ஹஸ்ரத் வாக்களிப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு தனது மகனுக்கு சிறுவயதிலேயே இறைவன் மீது உறுதியான நம்பிக்கை இருப்பது தொடர்பாக உறுதியான எண்ணம் இருந்து வந்தது. இவ்வகையில் ஒருமுறை அன்னார் (ரலி) கூறுகின்றார்கள். மார்டின் கிளார்க் உடைய வழக்கு தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மற்றவர்களிடம் துஆவுக்காக கூறியபோது என்னிடமும் துஆ மற்றும் இஸ்திகாரா செய்யுங்கள் எனக் கூறினார்கள். நான் துஆ செய்தேன். அப்போது நான் ஒரு ரு.ஃயா(கன)வைக் கண்டேன் அதில் எனக்கு இறையடியார் -களாக இருக்கக் கூடியவர்களை எவ்வித நெருப்பும் எரிக்க முடியாது என எழுதப்பட்டிருப்பதை கண்டேன். இவ்வாறு அந்த வழக்கு நமக்கு சாதகமாக முடிவுற்றது.

## ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது பற்றிய ஹஸ்ரத் வாக்களிக்கப் -பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முன்னறிவிப்பு:

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் உலகம் முழுவதிற்கும் உயிருள்ள இறைவன் மற்றும் உயிருள்ள மார்க்கம் தொடர்பாக உயிருள்ள அடையாளங்களை காணவருமாறு அழைப்பு விடுத்தபோது. உள்ளூர்வாசிகளாக இருந்த மாற்று மதத்தினர் தமக்கு அந்த அடையாளத்தை வெளிப்படுத்திக் காட்ட வேண்டினார்கள். 1886-ஆம் ஆண்டு அந்த அடையாளத்தை இறைவனிடம் வேண்டுவதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 40 நாட்கள் இ.ஃதிகா.ஃப் இருக்க முடிவு செய்தார்கள். இதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹோஷியார்பூரைத் தேர்ந்தெடுத் -தார்கள். அங்கு ஒரு வீட்டில் நாற்பது நாட்கள் இ.ஃதிகா.ஃப் இருந்தபோது அல்லாஹ்விடமிருந்து தமக்கு ஒரு மகன் கிடைப்பதற்கான செய்தி கிடைத்ததாக அறிவித்தார்கள். அதனை முறையாக 20 பிப்ரவரி 1886-ஆம் ஆண்டு பிரசுரம் வடிவில் வெளியிட்டார்கள். அது ஜமாஅத்தில் பச்சைப் பிரசுரம் என்ற பெயரில் பிரசித்தி பெற்றது.

இதன் பின்னர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு பல்வேறு வகையான கஷ்டங்களை தாங்கி கொள்ள வேண்டியது வந்தது. பல்வேறு தரப்பிலிருந்து எதிர்புகளும் வந்தன.

12 ஜனவரி 1889 ஆம் ஆண்டு ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்களின் பிறப்பு

நிகழ்ந்தது. சிறுவயதிலிருந்தே அன்னாரிடம் அந்த முன்னறிவிப்பிற்கான பல அடையாளங்கள் தென்பட ஆரம்பித்தன. இறுதியில் 28 ஜனவரி 1944-ஆம் ஆண்டு அனல் மஸீஹுல் மவ்வூது வ மஸீலுஹு வ கலீ.ஃபத்துஹு என்ற இல்ஹாம் இறங்கியதன் அடிப்படையில் தன்னை முஸ்லிஹ் மவ்வூதாக அறிவித்தார்கள்.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரணமும் அன்னாரது உறுதியான எண்ணமும்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரணம் நிகழ்ந்தபோது ஜமாஅத்தினர்கள் தற்போது இந்த ஜமாஅத்தினை யார் முன்னெடுத்து செல்வார் என மிகவும் கவலையில் ஆழ்திருந்தார்கள். அன்னார் கூறுகின்றார்கள் அப்போது எனக்கு 19 வயதாக இருந்தது. நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தலையின் அருகில் நின்றவாறு கூறினேன் இறைவா! நான் உன்னை சாட்சியாக வைத்து உண்மையான உள்ளத்துடன் உறுதி கூறுகின்றேன், ஒருவேளை முழு ஜமாஅத்தும் அஹ்மதியத்திலிருந்து முகம் திருப்பிக் கொண்டாலும் கூட ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக நீ இறக்கிய அந்த தூது செய்தியை உலகின் எல்லைகள் வரை நான் பரப்புவேன்.

ஆக இதுதான் அன்னாரது உறுதியான எண்ணமாக இருந்தது இதற்கு அன்னாரது முழு வாழ்வும் சாட்சியாகும். அன்னாரது வரலாறு மிக நீண்ட வரலாறாகும். இதனை இந்த சிறிய கட்டுரையில் எடுத்துறைப்பது சாத்தியமற்றதாகும்.

### கலீ.ஃபாவாக தேர்ந்தெடுக்கப்படுதல்:

ஹஸ்ரத் முதல் கலீ.ஃபத்துல் மஸீஹ் அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஜமாஅத்தில் இனி கலீ.ஃபாவிற்கு அவசியமில்லை மாறாக சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா ஜமாஅத்தினை பார்த்துக்கொள்ளும் என ஒரு குரல் எழ ஆரம்பித்தது. அதில் சில சஹாபிகளும் உறுதியாக இருந்தார்கள். இதற்கு எதிரில் அன்னார் இக்கருத்து ஒருபோதும் ஏற்று கொள்ள தகுதியானதல்ல. கண்டிப்பாக ஜமாத்திற்கு கிலா.ஃபத் அமைப்பு தேவை என வலியுறுத்தினார்கள். இறுதியில் ஒரு கூட்டம் கிலா.ஃபத்தை மறுத்தவாறு சென்றது. ஏனைய பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது அவர்களை தமது கலீ.ஃபாவாக தேர்ந்தெடுத்தனர். இவ்வாறு 14 மார்ச் 1914-ஆம் ஆண்டு அன்னார் இரண்டாவது கலீ.ஃபத்துல் மஸீஹாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஏறக்குறைய 52 ஆண்டு காலம் அன்னார் கலீ.ஃபாக இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்திற்கு அரும்பணி செய்துள்ளார்கள். அவை அனைத்தும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட தகுதி படைத்ததாகும். தற்போது அன்னாரது அரும்பணிகளில் சிலவற்றை எடுத்துரைத்து இந்த சிறிய கட்டுரையை நிறைவு செய்வோம்.

### அன்னாரது அரும்பணிகள்:

கலீ.ஃபாவாக ஆவதற்கு முன்பிருந்தே அன்னார் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்திற்கு மகத்தான பணிகளை செய்து வந்தார்கள். அன்னாரது எழுத்துகள் திட்டங்கள் மற்றும் உரைகள் என பல பொக்கிஷங்கள் காணக் கிடைக்கின்றன. எழுத்துகளில் குறிப்பாக அன்னாரது த.ஃப்ஸீர் ஸகீர் மற்றும் த.ஃப்ஸீர் கபீர் போன்றவைகளும் த.ஃவத்துல் அமீர், ஹஸ்திபாரி தஆலா, மின்ஹாஜுத் தாலிபீன், நிஸாமே நவ், மலாயிக்கதுல்லாஹ், இஸ்லாம் கே இக்திஸாதி நிஸாம், ஆயினாயே ஸதாகத், திக்ரே இலாஹி மற்றும் தக்தீரே இலாஹி போன்ற நூற்றுக்கணக்கான நூட்களும் அடங்கும். அவ்வாறே அன்னாரது திட்டங்களில் தஹ்ரீகே ஜதீது, வக்.ஃபே ஜதீது, வக்.ஃபே ஸிந்தகீ, தக்ரிக்கே ஹி.ஃப்ஸே குர்ஆன், மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மஜ்லிஸ் அத்.ஃபாலுல் அஹ்மதிய்யா, லஜ்னா இமாயில்லாஹ் மற்றும் நாஸிராத்துல் அஹ்மதிய்யா போன்றவைகள்.

அன்னாரது நூட்கள், உரைகள் மற்றும் சொற்பொழிவு -கள் ஆகியவை அன்வாருல் உலூம் என்ற பெயரில் ஒரு பெரும் தொகுப்பாக பாதுகாக்கப்பட்டுள்ளது. இது மட்டுமல்லாது அன்னாரது கிலா.ஃபத் ஒவ்வோர் ஆண்டும் அன்னாரைப் பற்றிய முன்னறிவிப்புகளை நிறைவேற்றக் கூடியவையாக இருந்தன. அன்னாரது 52 வருட கிலா.ஃபத் காலகட்டம் அன்னாரைப் பற்றி முன்னறிவிக்கப்பட்ட 52 பண்புகளையும் பிரதிபலிக்கக் கூடியதாக இருந்தது.

இவை தவிர அன்னாரது தேசப்பற்று, மனிதகுலத்தின் மீது கருணை, சமுதாய நலன் என பல அரும்பணிகள் உள்ளன. இந்த சிறிய கட்டுரை வாயிலாக அன்னாரது 76 ஆண்டு கால வாழ்க்கையை எடுத்துரைப்பதென்பது சாத்திய -மற்ற ஒன்றாகும். இறுதியாக இறைவா! எப்போதும் எங்களைப் போன்ற அடியார்களின் துஆ என்னவென்றால் அன்பார்ந்த மஹ்மூதிற்கு எப்போதும் தனது அருகில் இடம் அளிப்பாயாக. அன்னார் மூலமாக கிடைக்கப் பெற்ற ஞானத்தின் கருவூலத்திலிருந்து பயன்பெறும் நல்வாய்ப்பை எங்களுக்கு வழங்குவாயாக. ஆமீன்.

## மிகவும் நற்பேறிழந்த மனிதர்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'மிகவும் நற்பேறிழந்த இருவரைக் குறித்து நான் உங்களுக்கு கூறட்டுமா?' என்று கேட்டார்கள். அதற்கு நாங்கள் 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! கூறுங்கள்' என்றோம். அதற்கு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'அவர்களில் முதலாமவன், ஸமூது சமுதாயத்தைச் சேர்ந்த உஹைமிர் என்பவனாவான். அவன் நபி ஸாலிஹ் (அலை) அவர்களின் ஒட்டகத்தின் கால்களைத் துண்டித்தவன். இரண்டாமவன், அலியே! உமது தலையின் மீது தாக்குதல் செய்து அதனால் உமது தாடி இரத்தத்தால் நனையும்படி செய்பவன்.' (முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல், ஹதீஸ் 18511)

# மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா நாஸிர் அஹ்மது (ரஹ்) அவர்கள்

மவ்லவி M. ஷஹாபுத்தீன்



உலகத்தில் அன்பு நேசம் ஆகியவற்றை விநியோகம் செய்த மாபெரும் ஆன்மிக இருப்பாகிய ஹஸ்ரத் மிர்ஸா நாஸிர் அஹ்மது மூன்றாவது கலீ்.பதுல் மஸீஹ் (ரஹி) அவர்கள் அஹ்மதிய்யா ஜமாத்தின் விண்ணில் எப்பொழுதும் மின்னிக் கொண்டிருக்கின்ற நட்சத்திரமாக இருக்கின்றார்கள். அன்னாருடைய வாழ்வின் ஒவ்வொரு காலகட்டமும் நமக்கு வழிகாட்டக் கூடியதாகவும் நேர்வழிக்கான ஒளிவிளக்காகவும் இருக்கின்றது. அன்னாரது அசாதாரணமான குழந்தைப் பருவம், தூய்மையான இளமைக் காலம் ஆகியவை நமக்கு மிகப்பெரிய படிப்பினையாக இருக்கின்றது. இதே போன்று அன்னாரது கிலா்.பத் காலகட்டம் மாபெரும் முன்னேற்றங் -களையும் ஆன்மிக ரீதியான உயர்வுகளை கடந்து சென்றது. அவை இன்றும் நமது சிந்தனைகளுக்கு புத்துணர்ச்சியை வழங்குகின்றது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கலீ்.பாக்களின் ஒவ்வோர் அறிவிப்புகளும் ஒவ்வொரு தீர்மானங்களும் எவ்வாறு அருளுக்குரியதாகவும் புதுப்புது வழிகளைத் திறக்கக் கூடியதாகவும் இறைவனுடைய அருட்களை ஈர்க்கக் கூடியதாகவும் இருக்கின்றது என்பதை நம்மால் மறுக்கவே முடியாது. அந்த வகையில் மூன்றாவது கலீ்.பத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா நாஸிர் அஹ்மது (ரஹி) அவர்களின் வாழ்க்கையின் சில அம்சங்களை பார்வையாளர்களுக்காக சமர்ப்பிக்கின்றேன்.

ஒரு சந்தர்ப்பத்தில் அன்னார் (ரஹி) கூறுகின்றார்கள்: நான் எனது வாழ்நாளில் திருக்குர்ஆனை மிகவும் கவனத்துடன் நூற்றுக்கணக்கான முறை படித்திருக்கின்றேன். அதில் முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிம் அல்லாதவர்களுக்கு இடையில் உலக விஷயங்களில் பிரிவினையை ஏற்படுத்தக் கூடிய ஒரு வசனம் கூட போதிக்கப்படவில்லை......... மக்களின் உள்ளங்களை ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) மற்றும் அன்னாரது சஹாபா பெருமக்கள் (ரலி) அன்பு மற்றும் பரிவினால் வெற்றி கொண்டார்கள். இன்று நாம் மக்களுடைய உள்ளங்களை வெற்றி கொள்ள வேண்டும் என்று எண்ணுகிறோம் என்றால் நாமும் அவர்களுடைய வழித்தடங்களில் செல்ல வேண்டும். திருக்குர்ஆனின் போதனைகளின் சுருக்கம் என்னவென்றால் எல்லாரிடத்தும் அன்பு, எவரிடத்தும் இல்லை வெறுப்பு (Love for all, Hatred for none). (ஜல்ஸா ஸலானா பிரிட்டன் 5 அக்டோபர் 1980 அன்று ஆற்றிய உரை)

மூன்றாவது கலீ்.பத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா நாஸிர் அஹ்மது (ரஹி) அவர்கள் இரண்டாவது கலீ்.பத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது சாஹிப் (ரலி) அவர்களின் மகன் ஆவார்கள். அல்லாஹ்வால் வழங்கப்பட்ட மாபெரும் நற்செய்திகளின் அடிப்படையில் அன்னார் (ரஹி) நவம்பர் 16-ஆம் தேதி 1909-ஆம் ஆண்டு புதன்கிழமை ஹஸ்ரத் மஹ்மூதா பேகம் சாஹிபா அவர்களின் செல்வப் புதல்வனாகப் பிறந்தார்கள். அன்னார் (ரஹி) ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மவ்வூது நா்.பிலா (அதாவது வாக்களிக்கப்பட்ட பேரன்) ஆவார்கள். இதன் பின்னணி என்னவென்றால் நான்காவது மகன் முபாரக் அஹ்மது அவருக்குப் பகரமாக ஐந்தாவது மகன் வழங்கப்படுவார். அவர் நா்.பிலா அதாவது பேரன் ஆவார். இது தொடர்பாக அன்னார் (அலை) அவர்களின் பல்வேறு இல்ஹாம்கள் உள்ளன. ஓர் இல்ஹாமிற்கு விளக்கம் தந்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள், இதற்கு விளக்கம் ஒருவேளை மஹ்மூதுக்கு மகன் பிறப்பார். ஏனென்றால் 'நா்.பிலா' பேரனுக்கும் சொல்வர். (தஸ்கிரா பக்கம் 607)


ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அன்னாரது பிறப்புக்கு இரண்டு மாதத்திற்கு முன்பு ஒரு கடிதத்தில் எழுதுகிறார்கள்: எனக்கு இறைவன் செய்தி தந்துள்ளான். அதாவது நான் உனக்கு ஒரு மகனைத் தருவேன். அவர் மார்க்கத்தின் நாஸிர் (உதவியாளர்) ஆக இருப்பார். மேலும் அதன் தொண்டில் எப்பொழுதும் மூழ்கியிருப்பார். (அல் ்.பஸ்ல் காதியான் 8 ஏப்ரல் 1910) ஹஸ்ரத் உம்முல் மு்.மினீன் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்கு அன்னார் (ரஹி) குர்ஆனை மனனம் செய்து

கொண்டிருந்த காலகட்டத்தில் உலகக் கல்வி குறிப்பாக கணக்கு மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் மற்ற குழந்தைகளை விட பின் தங்கி விடுவார் என்ற கவலை ஏற்பட்ட பொழுது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: 'மகனே திருக்குர்ஆனை கண்டிப்பாக மனனம் செய்ய வையுங்கள். அதனுடன் மற்ற படிப்பிற்கான ஏற்பாடும் செய்யுங்கள். ஏனெனில் நாஸிர் மற்ற குழந்தைகளை விட பின் தங்கி விடக் கூடாது. எனக்கு இது கவலையாக உள்ளது' என்றார்கள். அதற்கு அன்னார் புன்சிரித்தவாறு பதில் வழங்கினார்கள். அதாவது, 'அம்மா! தாங்கள் ஒருபோதும் கவலைப்படாதீர்கள். ஒருநாள் இவர் எல்லாருக்கும் முன்னோடியாக இருப்பார் - இன்ஷா அல்லாஹ். (அல் ∴பஸ்ல் 25 ஜனவரி 1965)

அல்லாஹ் அன்னாரை கலீ∴பாவாகத் தேர்ந்தெடுத்து தன்னுடைய காலத்தில் அனைத்து மக்களை விட அன்னாரை முன்னோடியாகக் காண்பித்தான். அன்னாரது படிப்பிற்கான தொடக்கம் திருக்குர்ஆனில் இருந்து ஆரம்பமானது. முதலில் அன்னார் (ரலி) திருக்குர்ஆனை பார்த்து ஓதக் கற்றார்கள். அதற்குப் பிறகு திருக்குர்ஆனை மனனம் செய்ய ஆரம்பித்து 13 வயதில் திருக்குர்ஆன் முழுவதும் மனனம் செய்து விட்டார்கள். 1922-ஆம் ஆண்டு ரமலான் மாதத்தில் காதியானில் தராவீஹ் தொழுகையைத் தொழ வைத்தார்கள். மேலும் திருக்குர்ஆனை ஒருமுறை முழுமையாக ஓதினார்கள். அதன் பிறகு மார்க்கக் கல்வி பயில மத்ரஸா அஹ்மதிய்யாவில் இணைந்தார்கள். 1929-ல் மவ்லவி ∴பாஸில் பட்டம் பெற்றார்கள். 1934-ல் ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலி சாஹிப் (ரலி) மற்றும் ஹஸ்ரத் நவாப் முபாரகா பேகம் சாஹிபா (ரலி) ஆகியோரின் மகளாகிய சய்யிதா மன்சூரா பேகம் சாஹிபா அவர்களை மணந்தார்கள். இவர்களுக்கு மூன்று மகன்கள் மற்றும் இரண்டு மகள்கள் பிறந்தனர்.

### வாழ்க்கையை அர்ப்பணித்தல் (வக்∴பே ஸிந்தகி):

1934 முதல் 1938 வரை அன்னார் U.K-ல் மேல்படிப்பிற்காக தங்கி இருந்தார்கள். அந்தக் காலத்தில் ஐரோப்பாவின் சில நாடுகளுக்கும் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்கள். அன்னாருடைய உள்ளம் எப்பொழுதும் மார்க்கத் தொண்டு செய்ய வேண்டும் என்கின்ற எண்ணத்தில் மூழ்கியிருந்தது. ஒருமுறை ஜெர்மனியில் தங்கி இருக்கும் பொழுது ஒரு கனவு காண்கின்றார்கள். அதில், 'அங்கு ஹிட்லர் இருக்கின்றார் அவர் தன்னுடைய அற்புத அறைகளைக் காண்பிக்கின்றார் அதில் ஒருகல் இருக்கின்றது. அதில் 'லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர்ரஸூலுல்லாஹ்' என்று எழுதியுள்ளது. அன்னார் (ரஹி) ஜெர்மனியில் தங்கி இருந்த அந்த நாட்களிலேயே தன்னுடைய கண்ணியமிக்க தந்தை மேலும் காலத்தின் கலீ∴பா அவர்களுக்கு வாழ்க்கையை அர்ப்பணம் செய்வதற்காக ஒரு கடிதத்தை எழுதுகின்றார்கள். அதில் கூறுகின்றார்கள், 'அர்ப்பணம் செய்தவனாக இருக்கின்றேன் ஆனால் மறுபடியும் என்னை தங்களுக்கு முன்பு சமர்ப்பிக்கின்றேன். அடியான் இந்தத் தருணத்தில் இருந்து அஹ்மதியத்தின் தொண்டிற்காக தயாராக இருக்கின்றேன். இந்த அமைப்பிற்கு அடிமையாக இருப்பதையே மிகவும் விருப்பத்திற்குரியதாக எண்ணுகிறேன். அமைப்பிற்கு தொண்டு செய்வதிலிருந்து விலகி இருப்பது என்னுடைய வாழ்க்கையை வெறுமையாகவும் வீணானதாக -வும் கருதுகிறேன்.'



ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்தக் கடிதத்தைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். மேலும் இதற்கு ஒரு நீண்ட பதில் கடிதம் எழுதினார்கள். அதில் கூறுகின்றார்கள்: "அல்லாஹ் உங்களுடைய நோக்கத்தில் அருளைப் பொழிவானாக. எனக்கு மிகவும் இது தொடர்பான எண்ணம் தோன்றிக் கொண்டே இருந்தது. இருப்பினும் நான் எதுவும் பேசாமல் இருப்பதையே சரியானதாகக் கருதினேன். மேலும் இறைவனிடம் துஆ செய்து கொண்டிருந்தேன். அதாவது அவன் தானே உங்களுக்கு நல்ல எண்ணத்திற்கான பாக்கியத்தை நல்க வேண்டும். ஏனென்றால் என்னுடைய கூற்றின் அடிப்படையில் உங்களுடைய எண்ணம் மாறியது என்றால் உங்களுக்கான நற்கூலி வீணாகி விடும். எவ்வாறு இருப்பினும் அல்ஹம்துலில்லாஹ்! உங்களுடைய உள்ளம் இதன் பக்கம் திரும்பி விட்டது."

அன்னார் (ரஹி) ஜமாஅத்தின் பல்வேறு துறைகளில் தொண்டாற்றும் பாக்கியத்தைப் பெற்றிருந்தார்கள். குறிப்பாக சதர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, சதர் மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்வாக இருந்த தருணங்களில் அசாதாரணமான பணிகளைச் செய்ததாக வரலாற்றில் பார்க்க முடிகின்றது. அன்னார் (ரஹி) சதர் மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்வாக ஆன அந்தத் தருணத்தில் ஒருவர் கூறினார்: 'மியான் சாஹிப்! தாங்களும் முதியவர் ஆகி விட்டீர்கள்.' அதற்கு பதிலாக அன்னார் (ரஹ்) கூறினார்கள்: 'நான் முதியவனாக ஆக வில்லை. மாறாக அன்ஸாருல்லாஹ் இளைஞனாக ஆகி விட்டேன்.' அன்னார் (ரஹி) ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் மூத்த மகனாக இருந்த காரணத்தினால் பொறுப்புகளும் சுமைகளும் மிக அதிகமாக இருந்தன. மேலும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் மீது கொலை முயற்சி நடந்ததன் பிறகு நீண்ட காலம் நோய்வாய்ப்பட்டு இருந்தார்கள். அந்த தருணத்தில் உட்புற வெளிப்புற அனைத்து குழப்பங்களையும் சரிசெய்யும் பணியில் அன்னார் (ரஹி) மிகவும் பொறுமையுடன் செயல்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

### கலீ∴பாவாகத் தேர்ந்தெடுக்கப்படுதல்:

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் மரணத்திற்கு மூன்று நாள் முன்பு 5 நவம்பர் 1965 ஆண்டு

ஜுமுஆ நாளாக இருந்தது. ஹஸ்ரத் சய்யிதா மர்யம் சித்தீக்கா சாஹிபா கூறுகின்றார்கள்: "ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் உடல்நலக் குறைவின் இறுதி நாட்களாக இருந்தன. ஜுமுஆ அன்று முஅஸ்ஸின் (பாங்கு சொல்பவர்) ஜுமுஆ யார் தொழ வைப்பார் என்பதைக் கேட்க வந்தார். பொதுவாக அன்னார் கூறுவார்கள். 'ஷம்ஸ் சாஹிப்'. அதாவது மவ்லானா ஜலாலுதீன் சாஹிப் ஷம்ஸ். சில நேரங்களில் ஷம்ஸ் சாஹிப் மர்ஹூம் ரப்வாவிற்கு வெளியே சென்றிருந்தார்கள் என்றால். அன்னார் கூறுவார்கள்: மவ்லானா அபுல் அ(த்)தா சாஹிப் அல்லது காஸீ முஹம்மது நஸீர் சாஹிப் அவர்களில் ஒருவரையே ஜுமுஆ தொழ வைக்கக் கூறுவார்கள். மரணத்திற்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு ஜுமுஆவாக இருந்தது. பாங்கு சொல்பவர் வினவிய பொழுது அன்னார் கூறினார்கள்: 'நாஸிர் அஹ்மது'. எனக்கு அப்பொழுது மிகவும் வியப்பாக இருந்தது. இதற்கு முன்பு அவர்கள் இவ்வாறு கூறியதாக எனக்கு ஞாபகம் இல்லை. மறுபடியும் கேட்கப்பட்டது. அப்பொழுதும் இதே பதிலைத்தான் கூறினார்கள். 'நாஸிர் அஹ்மது'. அலுவலகப் பணியாள் செய்தி தெரிவிக்கச் சென்றார். அப்பொழுது ஹஸ்ரத் மிர்ஸா நாஸிர் அஹ்மது சாஹிப் (ரஹி) ஜுமுஆவிற்காக தயாராகிக் கொண்டிருந்தார்கள். ஜுமுஆ தொழ வைக்க வேண்டும் என்கின்ற எண்ணம் கூட இருந்தது இல்லை. எனினும் கட்டளையைச் செயல்படுத்தினார்கள். நிச்சயமாக இது இறைவன் புறமிருந்து வந்துள்ள சைகையாகும். அதாவது எதிர்காலத்தில் கிலா∴பத் என்கின்ற பொறுப்பு இவர்கள் மீது வரவிருக்கிறது." (ஹயாத்தே நாஸிர் தொகுதி 1 பக்கம் 350)

### கலீ∴பாவை இறைவன் தேர்ந்தெடுக்கின்றான்:

ஒரு குத்பா ஜுமுஆவில் அன்னார் (ரஹி) கூறுகின்றார்கள்: 'என்னிடம் ஒருவர், கிலா∴பத்துக்கு முன்பு தாங்கள் கலீ∴பா ஆவீர்கள் என்று எண்ணினீர்களா? என்று வினவினார். நான் கூறினேன்: No sane person can aspire to it. அதாவது எந்த அறிவுடைய நபரும் இவ்வாறு சிந்திக்கக் கூட மாட்டார். என்னுடையகிலா∴பத்தின் சிறிது காலத்திலேயே எனக்கு அல்லாஹ் இல்ஹாமாக கூறினான்: தாவூதே! நாம் உம்மைப் பூமியில் கலீ∴பாவாக ஆக்கி உள்ளோம். (ஹயாத்தே நாஸிர் தொகுதி 1 பக்கம் 370)

### மன்னர்கள் உமது ஆடையிலிருந்து அருள்களைத் தேடுவார்கள்:

1968-ஆம் ஆண்டு கேம்பியாவின் ஓர் அஹ்மதி ஜனாப் எ∴ப் எம் சிங்குடே சாஹிப் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். அவர்களுடைய விண்ணப்பத்தின் அடிப்படையில் அவருக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஒரு துணியைப் பரக்கத்திற்காக அன்னார் அனுப்பி வைத்தார்கள். மேலும் இவ்வாறு முதல் முறையாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இல்ஹாம் 'மன்னர்கள் உமது ஆடையில் இருந்து அருள்களைத் தேடுவார்கள்' என்பது நிறைவேறியது.

### திட்டங்கள்:

அன்னார் (ரஹி) அவர்களுடைய கிலா∴பத் காலகட்டத்தின் மிக முக்கியமான நிகழ்வுகள். (1) ∴பஸ்லே உமர் ∴பவுன்டேஷன் (2) த∴லீம் மற்றும் இஷாஅத்தே குர்ஆன் (3) மூன்று சிறப்பான விஷயங்கள்: (ஈடேற்றம் இறைவனுடைய அருளினால் மட்டுமே உள்ளது. எளிமை மற்றும் பணிவின் பண்புகளை மேற்கொள்ளுங்கள். ஏழைகள், அனாதைகள், கைதிகளுக்கு உணவு வழங்க வலியுறுத்துதல்) (4) அதிகாரம் அல் பகராவின் முதல் 17 வசனங்களை மனனம் செய்தல் (5) மேற்கத்திய நாடுகளுக்கு முதல் சுற்றுப் பயணம். மேலும் பைத் நுஸ்ரத் ஜஹான் நிறுவுதல் (டென்மார்க் பள்ளிவாசல்) (6) இஸ்லாமிய பிரிவுகளுக்கு இடையில் ஒற்றுமை ஏற்படுத்துவதற்கான ஏற்பாடு. (7) மேற்கத்திய நாடுகளுக்கு இரண்டாவது சுற்றுப் பயணம். (8) நுஸ்ரத் ஜஹான் திட்டம் (9) பைத்துல்லாஹ் நிறுவியதற்கான 23 மாபெரும் நோக்கங்கள். (10) சீனாவின் பிரதிநிதி ரப்வாவிற்கு வருகை. (11) மேற்கத்திய நாடுகளுக்கு மூன்றாவது சுற்றுப் பயணம். (12) நூற்றாண்டு விழாவிற்கான திட்டங்கள். (13) 1974-இன் மாபெரும் சோதனை. பாகிஸ்தான் அரசு அஹ்மதிகளை முஸ்லிம் இல்லை என்று அறிவித்தல் (14) மேற்கத்திய நாடுகளுக்கு நான்காவது சுற்றுப் பயணம் (15) மேற்கத்திய நாடுகளுக்கான ஐந்தாவது சுற்றுப் பயணம் மேலும் அமேரிக்கா செல்லுதல். (16) ஸ்வீடனில் பள்ளிவாசல் நிறுவுதல். (17) மேற்கத்திய நாடுகளுக்கு ஆறாவது சுற்றுப் பயணம். மேலும் சமுதாயங்களுக்கு இடையில் கான்∴பரன்ஸ். (18) மேற்கத்திய நாடுகளுக்கு இறுதியாக ஏழாவது சுற்றுப் பயணம். (19) ஸ்பெயினில் பஷாரத் பள்ளிவாயில் நிறுவுதல்.

### உடல்நலகுறைவு மற்றும் மறைவு

ஸ்பெயினில் பைத்துல் ஸிக்ர் முழுமை அடைந்து விட்டது. அன்னார் (ரஹி) 10 செப்டம்பர் 1982-ஆம் தேதி திறப்பு விழாவிற்காக நிர்ணயித்திருந்தார்கள். அன்னார் விசா எடுக்க 23 மே 1982-ஆம் தேதி ரப்வாவில் இருந்து இஸ்லாமாபாத் சென்றார்கள். ஆனால் அங்கு பள்ளிவாசலில் தங்கி இருந்த தருணத்தில் தொழுகையும் நடைபெற்றுக் கொண்டிருந்தது. 26 மே புதன்கிழமை இஷா தொழுகையின் தருணத்தில் அன்னாரின் உடல்நிலை மிகவும் மோசமானது. மீதமுள்ள தொழுகையை அன்னார் அமர்ந்து நிறைவேற்றினார்கள். அதை தொடர்ந்து அன்னாருக்கு மாரடைப்பு ஏற்பட்டிருந்தது. 1982-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 8 மற்றும் 9-ஆம் தேதி நடு இரவில் அன்னாரது வ∴பாத் நிகழ்ந்தது.

அன்னார் (ரஹி) அவர்களின் காலகட்டத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத் தன்னுடைய புது நூற்றாண்டில் கால் வைக்கும் பொழுது தனது நேசத்திற்குரிய இறைவனின் சன்னிதியில் எழுநூறு ஆண்டு காலமாக அல்லாஹ் மற்றும் அவனுடைய தூய தூதரின் ஓசையை முடக்கி வைத்திருந்த ஸ்பெயின் மண்ணில் பஷாரத் பள்ளிவாயிலை சமர்ப்பித்து தனது இறைவனுடைய திருப்தியைப் பெற்றது. அன்னாருக்கு இறை இல்ஹாம்கள் மற்றும் நல்ல கனவுகள் வந்து கொண்டே இருந்தன. ஆனால் மிகக் குறைவாகவே அதனை வெளிப்படுத்தினார்கள். ஒருமுறை கூறினார்கள்: 'நான் என்னுடைய இறைவனுடைய சப்தத்தை பலமுறை கேட்டிருக்கிறேன். மேலும் அவன் கஷ்டமான நேரங்களில் தானே எனக்கு வழிகாட்டினான்.' (அல் ∴பஸ்ல் 28, ஆகஸ்ட் 1978).

அன்னார் (ரஹி) பெரும் பெரும் பணிகளைச் செய்த பிறகும் மிகவும் பணிவு தன்னடக்கம் கொண்ட நபராக இருந்தார்கள். 'I am the humblest of the humble' நான் மிகவும் பணிவான எளியவனாவேன் என்று கூறி வந்தார்கள். அன்னார் (ரஹி) எப்பொழுதும் துஆவில் மூழ்கிக் கொண்டே இருப்பார்கள். அன்னாருடைய துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் அடையாளத்தை அல்லாஹ் அன்னாருக்கு வழங்கியிருந்தான். அன்னாருடைய தூய ஆன்மாவுக்கு அல்லாஹ் தன்னுடைய எண்ணிலடங்கா அருள்களையும் சாந்தியையும் சமாதானங்களையும் தந்தருள்வானாக. ஆமீன்

# நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹி) அவர்கள் காலத்தில் இறங்கிய இறை அருட்கள்

மவ்லவி அபுல் ஹஸன் ஆபித்

رَبَّنَا وَابْعَثْ فِيْهِمْ رَسُوْلًا مِّنْهُمْ يَتْلُوْا عَلَيْهِمْ اٰيٰتِكَ وَيُعَلِّمُهُمُ الْكِتٰبَ وَالْحِكْمَةَ وَيُزَكِّيْهِمْ ۭ اِنَّكَ اَنْتَ الْعَزِيْزُ الْحَكِيْمُ

எங்களுடைய இறைவா! அவர்களுக்கு உமது அடையாளங்களை எடுத்தோதி, அவர்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கற்றுக் கொடுத்து, அவர்களைத் தூய்மைப் -படுத்தும் ஒரு தூதரை அவர்களிலிருந்தே அவர்களிடம் தோற்றுவிப்பாயாக. நிச்சயமாக நீயே வல்லோனும், ஞானமிக்கோனுமாவாய். (2:130)

இந்த துஆவை ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் செய்தார்கள். அல்லாஹ் அதை ஏற்றுக் கொண்டு அதன் விளைவாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அனுப்பினான். மேலும் அன்னார் மீது எண்ணற்ற அருள்களின் மழையை பொழிந்தான். அதே போன்று அன்னாரின் அடியாராகவும் நிழலாகவும் உண்மைப் பேரன்பாகவும் தோன்றிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மீதும் அவர்களின் கலீ∴பாக்களின் மீதும் அல்லாஹ் அந்த அருள்களின் மழையைப் பொழிந்து கொண்டே இருக்கின்றான்.


ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: மஸீஹ் மவ்வூது அவர்களின் காலகட்டத்தில் அன்னாருடைய மற்றொரு பெயர் மஸீஹாகவும் அன்னாருடைய மற்றொரு பெயர் மஹ்தியாகவும் உள்ளது. இது அனைத்து சமுதாயங்கள் மீதும் இஸ்லாத்தின் அருட்கள் நிரூபிக்கப்படும் என்பதைத் தெரிவிக்கிறது. மேலும் இஸ்லாம் மட்டும்தான் அந்த அருளுக்குரிய மார்க்கமாகும் என்பதும் வெளிப்படுத்தப்படும். இது எப்படிப்பட்ட அருளுக்குரிய காலமாக இருக்கும் என்றால் உலகில் அமைதிக்கான அருள் பரப்பப்படும். மேலும் வானம் தன்னுடைய அடையாளத்துடன் அருட்களை வெளிப்படுத்தும். பூமியில் பலவிதமான அமைதி -களைக் கொண்ட அருட்கள் பரவும் என்றால் இதற்கு முன்பு அந்த அளவிற்கு பரவி இருக்காது. (குத்பா இல்ஹாமியா)

ஆக எவ்வாறு எம்பெருமான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய காலகட்டமானது இறை உதவிக்குரிய காலமாக இருந்ததோ அதே போன்று இந்த காலகட்டமானது இறை அருளுக்குரிய காலகட்டமாக இருக்கும்.

இதன் வரிசையில் தான் நாம் தற்போது ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் காலத்தில் இறங்கிய இறை அருட்களை இந்தக் கட்டுரையில் பார்ப்போம்.

புயூத்துஸ் ஸிக்ர் (இறை இல்லங்களுக்கான) கட்டுமான பணிகள்:

அல்லாஹ்வின் முதல் அருளானது இறை இல்லங்கள் கட்டுவது தொடர்பானதாகும். ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் தன்னுடைய கிலா∴பத்தின் ஆரம்பத்தில் இருந்தே இறையில்லங் -களைக் கட்டுவதில் வழக்கத்திற்கு மாற்றமான ஈடுபாட்டை வெளிப்படுத்தி -னார்கள். 1982-ஆம் ஆண்டில் அமெரிக்காவில் ஐந்து புதிய இறை இல்லங்கள் மற்றும் ஐந்து மிஷன் ஹவுஸ்களின் கட்டுமானத்தின் பக்கம் கவனமூட்டினார்கள். மேலும் அதற்காக பொருள் தியாகம் செய்வதற்கான திட்டத்தை -யும் அறிவித்தார்கள்.



எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளால் தற்போது அமெரிக்கா மேரிலேண்டில் உள்ள பைத்துர் ரஹ்மான் உட்பட இறை இல்லங்களின் எண்ணிக்கையானது 40-ஐ எட்டியுள்ளது. ஜெர்மனியில் 100 பள்ளிவாசல்களைக் கட்டுவதற்கான திட்டத்தை அன்னார் வழங்கியுள்ளார்கள். அதற்கான பணி தீவிரமாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது. எதிரிகளின் சார்பாக எந்த இறை இல்லங்கள் இடித்து நொறுக்கப் -பட்டுள்ளதோ அதையும் புதிதாகக் கட்டுவதற்கான கட்டளையை ஹுஸூர் அவர்கள் பிறப்பித்துள்ளார்கள். பெல்ஜியம் மற்றும் நார்வேவிலும் புதிய இறையில்லங்கள் கட்டுவதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறன. அதே போன்று இலண்டனில் மார்டன் என்ற பகுதியில் பைத்துல் ∴புதூஹ் என்ற பெயரில் ஐரோப்பாவின் மிகப்பெரிய பள்ளிவாசல் அன்னாரின் கிலா∴பத் காலகட்டத்தில் கட்டப்பட்டது. ஹிஜ்ரத்திற்கு பிறகு 19 ஆண்டுகளில் ஒட்டுமொத்தமாக 13,065 புதிய பள்ளிவாசல்களை நிறுவும் பாக்கியத்தை உலகெங்கிலும் உள்ள அஹ்மதிய்யத் பெற்றுள்ளது.

### ஸ்பெய்னில் முதல் பள்ளிவாசல்:

கிலா∴பத்தின் அரியணையில் அமர்ந்த பிறகு ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் பெட்ரோபாத், ஸ்பெய்னில் 700 ஆண்டுகளுக்கு பிறகு கட்டப்பட்ட முதல் பள்ளிவாசலை (மஸ்ஜித் பஷாரத்) 1982-ஆம் ஆண்டு செப்டம்பர் 10-ஆம் தேதி திறந்து வைத்தார்கள். அந்த பள்ளிவாசலின் அடிக்கல்லை ஹஸ்ரத் மூன்றாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் அக்டோபர் 9, 1980-ஆம் ஆண்டு வைத்தார்கள்.

### புயூத்துல் ஹம்து திட்டம்:

ஸ்பெய்னின் முதல் இறை இல்லமான மஸ்ஜித் பஷாரத் கட்டப்பட்ட மகிழ்ச்சியில் நன்றி செலுத்தும் விதமாக ஏழை மற்றும் தேவையுடைய மக்களுக்கான வீடுகள் கட்டுவதற்கான திட்டத்தை மஸ்ஜித் அக்ஸா ரப்வாவில் அக்டோபர் 29, 1982-ஆம் ஆண்டில் அறிவித்தார்கள். அன்னாரின் கிலா∴பத் காலகட்டத்தில் விசாலமான மற்றும் வசிப்பதற்கு ஏற்ப 87 வீடுகள் கட்டப்பட்டன. 500 நபர்களுக்கு வீட்டின் நிலையை சீர்படுத்துவதற்கும் விரிவுபடுத்துவதற்கும் தொகை வழங்கப்-பட்டுள்ளது. காதியானிலும் 37 வீடுகள் கட்டப்பட்டுள்ளது காதியானில் உள்ள தர்வேஷ்களின் குடும்பங்கள் மற்றும் அவர்களின் மனைவி மக்கள் வசிக்கின்றார்கள்.

### ரப்வாவிலிருந்து ஹிஜ்ரத்:

அன்னாரின் தலைமைத்துவத்தில் ஜமாஅத் மிக வேகமாக முன்னேறிக் கொண்டு சென்றது. அதன் விளைவாக 1984-இல் பாகிஸ்தானில் அஹ்மதியத்திற்கு எதிராக அரசாங்க அளவில் மிகத் தீவிரமான எதிர்ப்பு கிளம்பியது. அதன் அடிப்படையில் ஏப்ரல் 26, 1984-ஆம் ஆண்டில் அப்போதைய ஜனாதிபதி ஜென்ரல் ஜியாவுல் ஹக் எப்படிப்பட்ட கடினமான அரசாணையைப் பிறப்பித்தான் என்றால் அதை செயல்படுத்தினால் அஹ்மதிகள் ஒருபோதும் தன்னுடைய கொள்கையை வெளிப்படுத்த முடியாது. காலத்தின் கலீ∴பாவின் பணியோ அஹ்மதிய்யத்தின் முன்னேற்றம் அதை விரிவடைய செய்தல் மற்றும் தர்பிய்யத் வழங்குவதாகும். இந்த அரசாணை பிறப்பித்ததன் காரணமாக இப்பணிகளைச் செய்வது சாத்தியம் இல்லாமல் ஆகிவிட்டது. எனவே ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் தன்னுடைய நாட்டில் இருந்து ஹிஜ்ரத் செய்து ஏப்ரல் 30, 1982-ல் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் சிறப்பான உதவி மற்றும் ஒத்தாசையுடன் இலண்டன் சென்றடைந்-தார்கள். இந்த ஹிஜ்ரத்தின் காலகட்டமானது ஹுஸூர் மற்றும் ஜமாஅத்திற்கு மிகவும் கடினமானதாக இருந்தது ஆனாலும் எல்லாம் வல்ல அல்லாஹ் முன்னேற்றத்திற்கான புதிய புதிய வழிவகைகளை ஏற்படுத்தினான். ஹுஸூர் அவர்கள் சுயமே மீண்டும் ரப்வாவிற்கு திரும்பி வர முடியவில்லைதான். ஆனாலும் MTA-வின் மூலமாக உலகில் உள்ள எல்லா இடங்களிலும் அன்னாரின் தரிசனம் காண கிடைத்தது.

### பிரிட்டன் ஆண்டு மாநாடு:

ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் ஹிஜ்ரத் செய்து இலண்டன் வந்த பிறகு அன்னாரின் முன்னிலையில் நடைபெற்ற ஆண்டு மாநாடு தலைமைத்துவ அந்தஸ்தை அங்கு பெற்றது. முழு உலகிலிருந்தும் அஹ்மதி சகோதர சகோதரிகள் ஜூலை மாதத்தின் இறுதியில் பெரும் மகிழ்ச்சியுடன் இலண்டன் வந்தடைவார்கள். ஹுஸூர் அவர்களின் பேருரை புதிய நஸம்கள் உலகளாவிய பைஅத்தின் காட்சிகள் மற்றும் நடப்பு ஆண்டில் இறைவன் பொழிந்த அருட்கொடைகள் மற்றும் அருள்களைக் கேட்பார்கள். MTA பிரிட்டனின் ஆண்டு மாநாட்டை ஒவ்வோர் அஹ்மதியின் இல்லம் வரை எட்ட வைத்து விட்டது. ரப்வாவில் மாநாட்டை நடத்துவதற்கான அனுமதியை வழங்காமல் விலக்கி வைத்திருந்ததை அல்லாஹ் இதன் மூலம் போக்கி விட்டான்.

அன்னாரின் இறுதி ஆண்டு மாநாட்டில் (2002) இவ்வாறு கூறுகிறார்கள்: "இறைவனின் அருளால் 175 நாடுகளில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் செடி நடப்பட்டு விட்டது. என்னுடைய ஹிஜ்ரத்தின் 18 ஆண்டுகளில் 84 புதிய நாடுகள் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு கிடைத்தது. இந்த வருடம் 5498 புதிய இடங்களில் ஜமாஅத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அதில் 4485 இடங்களில் முதல் முறையாக ஜமாஅத்தின் அமைப்பு நிலைபெற்று விட்டது. நடப்பு ஆண்டில் (2002) 944 பள்ளிவாசல்கள், மிஷன் ஹவுஸ்கள் மற்றும் இரண்டு கோடிகளை விட அதிகமான நபர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்துள்ளார்கள்".



### திருக்குர்ஆனின் மொழிபெயர்ப்புகள்

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஒரு மிகப்பெரிய இஸ்லாமிய தொண்டு திருக்குர்ஆனுடன் தொடர்புடையதாக இருக்கின்றது. மேலும் நம்முடைய நோக்கம் உலகத்தில் உள்ள அனைத்து மொழிகளிலும் திருக்குர்ஆனை மொழிபெயர்ப்பதாகும். 2002-ஆம் ஆண்டு வரை ஜமாஅத் 56 மொழிகளில் திருக்குர்ஆனின் முழுமையான மொழிபெயர்ப்பை செய்வதற்கு நல் பாக்கியத்தை பெற்றது. ஆனால் பிற சமுதாயங்களையும் மிக நீண்ட நாட்கள் காத்திருப்பில் வைக்க முடியாது. எனவே ஜூன் 9, 1986-ஆம் ஆண்டு ஹுஸூர் அவர்கள் நோன்புப் பெருநாளில் நூற்றாண்டு விழாவின் சந்தர்ப்பத்தில் உலகின் 100 மொழிகளில் திருக்குர்ஆனின் தேர்ந்தெடுக்கப்பட்ட வசனங்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட நபிமொழிகளின் மொழிபெயர்ப்பை அச்சிடுவதற்கான அறிவிப்பைச் செய்தார்கள். அத்துடன் இவை அனைத்து வெளியீடுகளும் சய்யிதுனா பிலால் ∴பண்டின் மூலமாக நடைபெறும். சிறைக் கைதிகள் மற்றும் ஷஹீகளின் சார்பாக முழு உலகிற்கும் ஆன அன்பளிப்பு ஆகும். இதனடிப்படையில் 1989 வரை 117 மொழிகளில் திருக்குர்ஆனின் தேர்ந்தெடுக்கப்பட்ட வசனங்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட நபிமொழிகள் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியின் நன்மொழிகள் ஆகியவை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

திருக்குர்ஆனின் முழுமையான மொழிபெயர்ப்பிற்காக ஹுஸூர் அவர்கள் பல நபர்கள் அல்லது குடும்பங்கள் ஒவ்வொரு மொழிபெயர்ப்புக்கான முழுமையான செலவை

ஏற்றுக் கொள்ளுங்கள் என கூறியிருந்தார்கள். மேலும் ஹுஸூர் அவர்கள் சுயமே சீன மொழியில் திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பதற்கான அந்தச் செலவை ஏற்றுக் கொண்டார்கள்.

### வக்ஃபே நவ் திட்டம்:

ஏப்ரல் 3,1987-ஆம் ஆண்டில் ஹுஸூர் அவர்கள் புதிய நூற்றாண்டின் தேவையை முழுமை படுத்துவதற்காக வக்ஃபே நவ் திட்டத்தை அறிவித்தார்கள் இத்திட்டத்தின் கீழ் பெற்றோர்கள் குழந்தைகள் பிறப்பதற்கு முன்பே மார்க்கத்திற்காக அக்குழந்தைகளை அர்ப்பணித்து விடுவார்கள். இது உலக வரலாற்றில் ஒரு தனித்துவம் வாய்ந்த திட்டமாகும். ஆரம்பத்தில் இத்திட்டம் 5000 குழந்தைகளுக்கு மட்டுமானதாகவே இருந்தது. ஆனால் அன்னாரின் காலகட்டத்தில் அதாவது ஏப்ரல் 2003-ஆம் ஆண்டு வரை 24,355 குழந்தைகள் இத்திட்டத்தில் இணைந்திருந்தார்கள். அதில் அல்லாஹ்வின் சிறப்பான உதவிக் கரங்களின் கீழ் 16,563 ஆண்கள் மற்றும் 7,792 பெண்கள் உள்ளனர். எண்ணற்ற குடும்பங்களுக்கு இறைவன் இத்திட்டத்தின் அருளினால் சந்ததிகளை வழங்கியுள்ளான். தற்போது அல்லாஹ்வின் அருளால் இந்தத் திட்டத்தில் 80,000-க்கும் அதிகமானவர்கள் இணைந்துள்ளனர்.

### அரசர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஆடையிலிருந்து அருளை பெறுதல்:

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி (அலை) அவர்களின் இறையறிவிப்பான 'அரசர்கள் உம்முடைய ஆடையிலிருந்து அருளைத் தேடுவார்கள்' என்ற இந்த இறை அறிவிப்பு முதல் முறையாக 1968-ஆம் ஆண்டில் கேம்பியாவினுடைய கவர்னர் ஜெனரல் சர் எஃப் எம் சிங்காட்டே அவர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டு ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்ளிடமிருந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி (அலை) அவர்களின் ஆடையை அருள் பெறும் விதமாக பெற்றுக் கொண்டார்கள். இந்தக் காட்சி நான்காவது கிலாஃபத்தின் காலகட்டத்தில் மிக அதிகமான பொலிவுடன் காணப்பட்டது.

ஏப்ரல் 1987-ஆம் ஆண்டில் நைஜீரியாவின் மூன்று அரசர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டனர் அதில் இரண்டு நபர்களுக்கு ஹுஸூர் அவர்கள் ஆகஸ்ட் 1, 1987 -ஆம் ஆண்டில் பிரிட்டன் ஆண்டு மாநாட்டில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி (அலை) அவர்களின் ஆடையை (தபர்ருக்காக) அருள் பெறும் விதமாக கொடுத்தார்கள்.

2000-இல் நடைபெற்ற ஆண்டு மாநாட்டில் பெனின் நாட்டினுடைய இரண்டு அரசர்களுக்கு ஹுஸூர் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி (அலை) அவர்களின் ஆடையை (தபர்ருக்காக) அருள் பெறும் விதமாக கொடுத்தார்கள்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி (அலை) அவர்களுக்கு இந்த இறையருவிப்பானது 1898-ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. அதிலிருந்து நூறு ஆண்டுகள் முழுமை அடைந்த பிறகு 1998-ஆம் ஆண்டில் 20 அரசர்கள் ஜமாஅத்தில் இணைந்துள்ளார்கள். டிசம்பர் 21-23, 2002-ஆம் ஆண்டில் பெனினில் நடைபெற்ற ஆண்டு மாநாட்டில் 100 அரசர்கள் கலந்து கொண்டார்கள் அதில் கிங் ஆப் மொராக்கோ தலைமையிலான ஆட்சியில் அந்நாட்டின் 30 பெரிய அரசர்களின் குழு குதிரைப் பயணமாக வந்தார்கள். அதேபோன்று நைஜீரியாவினுடைய மிகப்பெரிய அரசர் சுல்தான் ஆஃப் ஆகாதேஸ் அவர்களின் 16 நபர்களைக் கொண்ட குழுக்கள் 2500 கிலோ மீட்டர் தூர பயணத்தை மேற்கொண்டு ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டார்கள்.

### ஆப்பிரிக்கா சுற்றுப் பயணம்:

ஹுஸூர் அவர்கள் ஜனவரி மற்றும் பிப்ரவரி 1988-ஆம் ஆண்டில் மேற்கு ஆப்பிரிக்காவின் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார்கள் அதில் கேம்பியா, செராலியோன், லைபீரியா, ஐவரிகோஸ்ட், கானா மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளும் அடங்கும். மேலும் ஆகஸ்ட் 26-28, 1988-ஆம் ஆண்டில் கிழக்கு ஆப்பிரிக்காவில் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார்கள். கிழக்கு ஆப்பிரிக்காவில் கலீஃபத்துல் மஸீஹ் என்ற முறையில் அன்னாரின் பயணமே முதல் சுற்றுப் பயணமாக இருந்தது. (இதற்கு முன்பு கலீஃபத்துல் மஸீஹ் என்ற முறையில் எந்தக் கலீஃபாவும் அங்கு பயணத்தை மேற்கொண்டதில்லை). இந்த சுற்றுப் பயணத்தில் ஹுஸூர் அவர்கள் கென்யா, யுகான்டா, தன்சானியா, மொரிஷியஸ் ஆகிய இடங்களுக்கும் பயணம் மேற்கொண்டார்கள். இந்த சுற்றுப் பயணங்களில் மிக விரிவாகவும் அதிக எண்ணிக்கையிலும் தஃவத்தே இல்லல்லாஹ்வின் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது.




ஜனவரி 22, 1988-ஆம் ஆண்டில் ஹுஸூர் அவர்கள் கேம்பியாவில் நுஸ்ரத் ஜஹான் திட்டத்தை அறிவித்தார்கள். மேலும் அனைத்து துறையின் தேர்ச்சி பெற்ற வல்லுனர்கள் மற்றும் நிபுணர்களை இத்திட்டத்தின் கீழ் தொண்டு செய்வதற்கு அழைத்தார்கள். அன்னாரின் கிலாஃபத் காலகட்டத்தில் நுஸ்ரத் ஜஹான் திட்டத்தின் கீழ் மேலும் 14 மருத்துவமனைகள், சிகிச்சை மையங்கள் மற்றும் 9 பள்ளிக்கூடங்கள் நிறுவப்பட்டன. அதேபோன்று 12 ஆப்பிரிக்கா நாடுகளிலும் 37 மருத்துவமனைகள் மற்றும் 34 பள்ளிக்கூடங்கள் செயல்பாட்டில் உள்ளன.

ஜுமுஆ தொழுவதற்கான வலியுறுத்தல்:

ஜனவரி 1, 1988-ஆம் ஆண்டில் ஹுஸூர் அவர்கள் ஐரோப்பிய நாடுகளில் உள்ள அஹ்மதிகளுக்கு ஜுமுஆ தொழுகையைத் தொழுவதன் பக்கம் குறிப்பாக வலியுறுத்தி -னார்கள். அதற்காக அவர்கள் பணியிலிருந்து விடுப்பு எடுக்க நேர்ந்தாலும் சரியே அல்லது வேலையை ராஜினாமா செய்ய நேர்ந்தாலும் சரியே. மற்றொரு சந்தர்ப்பத்தில் ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள். மூன்று ஜுமுஆக்களில் ஒரு ஜுமுஆவை எந்நிலையிலும் கண்டிப்பாக தொழ வேண்டும் எனக் கூறியுள்ளார்கள். எனவே அதற்கு ஏற்ப அதிக எண்ணிக்கையிலான மக்கள் பணிகளைத் தியாகம் செய்தவாறு இக்கட்டளைக்குக்குக் கட்டுப்பட்டார்கள். எனவேதான் அல்லாஹ்வும் அவர்களுக்கான சிறந்த வாழ்வாதாரத்திற்கான வழிவகைகளை ஏற்படுத்தி விட்டான்.

முபாஹலாவிற்கான வரலாற்றுச் சிறப்புமிக்க சவால்:

ஜமாஅத் மீது சுமத்தக்கூடிய பொய்யான அவதூறு -களுக்கான பதிலளித்தும் எதிரி அதை ஏற்றுக் கொள்ளாமல் மறுத்துக் கொண்டே இருந்தான். இதன் காரணமாக ஹுஸூர் அவர்கள் ஜமாஅத்தின் இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்பாக ஜூன் 10, 1988-ஆம் ஆண்டில் உலகத்தில் உள்ள அனைத்து எதிரிகளுக்கும், நிராகரிப்பாளர்களுக்கும், பொய்யர்களுக்கும் முபாஹலா அதாவது விண்ணின் (இறைவனின்) நீதிமன்றத்தில் ஆஜராவதற்கான சவாலை விடுத்தார்கள் மேலும், எதிரிகள் இதற்குப் பிறகும் பொய்யான அவதூறு -களையே மீண்டும் மீண்டும் பரப்பிக் கொண்டிருந்தால் அவர்கள், பொய்யர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டுமாக என்ற இந்த வரியின் மீது கையொப்பம் இட வேண்டும். மேலும் அந்த இறைவன் உண்மையாளர்களுக்குச் சாதகமாக உதவியின் அடையாளத்தை வெளிப்படுத்துவான். முபாஹலா குறித்த இந்த சவால் அதிகமாக விளம்பரம் செய்யப்பட்டது. அதன் காரணமாக பாகிஸ்தானில் அதிகமான அஹ்மதிகள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு தண்டனையும் கொடுக்கப்பட்டது.

இந்த சவாலின் பிடியிலிருந்து தப்புவதற்காக எதிரிகள் பல சாக்குப் போக்குகளை தேடினார்கள். நாடகங்களை நடத்தினார்கள். ஆனால் ஒரு வருடத்திற்குள் இறை நியதியின் கோபம் வெளிப்பட்டது. அவர்களில் மிகவும் பிரசித்திப் பெற்ற பெயராக ஆகஸ்ட் 17, 1988-ஆம் ஆண்டில் விமான விபத்தில் அழிவுக்குள்ளான பாகிஸ்தானின் ஜனாதிபதி ஜென்ரல் ஜியாவுல் ஹக் உடைய பெயர்தான் இருந்தது. அவருடைய விமானம் எரிந்து சாம்பலாகி விட்டது. மேலும் அவரது செயற்கைப் பல்லின் மூலமாகத்தான் அவர் அடையாளம் காணப்பட்டார்.

அல்லாஹ்வின் மாபெரும் அருள் என்னவென்றால் முபாஹலாவின் ஒரு மாதத்திற்கு பிறகு அஸ்லம் குரைஷி என்ற பெயருடைய நபர் மக்கள் மத்தியில் பொதுவாக தென்பட ஆரம்பித்தார். இந்த நபரைத்தான் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கொலை செய்தார்கள் என்று சத்தியம் செய்து ஆலிம்கள் கூறினார்கள். அவர்கள் தன் முகத்தையே வெளியில் காட்ட முடியாத அளவிற்கு இழிவை மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

ஹுஸூர் அவர்கள் 1994-ஆம் ஆண்டில் அஹ்மதிய்யத்தின் எதிரிகளிடம் ஈஸா மஸீஹை இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் வானத்திலிருந்து இறக்கி விட்டால் அவ்வாறு செய்யக்கூடிய ஒவ்வொரு நபருக்கும் ஒரு கோடி ரூபாய் இனாமாக வழங்கப்படும் என அறிவித்தார்கள்.

நூற்றாண்டு விழா கொண்டாட்டம்:

1989-ஆம் ஆண்டு ஜமாஅத்திற்கு எண்ணற்ற மகிழ்ச்சிகளையும் சந்தோஷங்களையும் கொண்ட ஆண்டாக இருந்தது. இந்த வருடத்தை ஜமாஅத் துஆக்களுடனும் நன்றியின் கண்ணீருடனும் கொண்டாடியது. ஜமாஅத்தின் நூற்றாண்டு விழாவை கொண்டாட வேண்டும் என ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கூறி இருந்தார்கள். மேலும் 1973-ஆம் ஆண்டில் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அதற்கான ஏற்பாடுகளைத் துவங்குவதற்கான அடித்தளத்தை இட்டார்கள்.




மார்ச் 22, 1989-ஆம் ஆண்டு அன்று மாலை இலண்டனில் உள்ள மஸ்ஜிது ஃபஸலில் வண்ண விளக்குகளின் பொத்தானை அமுக்கி நூற்றாண்டு விழா நிகழ்ச்சியைத் துவக்கி வைத்தார்கள். மார்ச் 23 அன்று ஹுஸூர் அவர்கள் இலண்டனில் உள்ள மஸ்ஜிது ஃபஸலில் அஹ்மதிய்யத்தின் கொடியை ஏற்றி துஆ செய்தார்கள். மேலும் இந்த சந்தர்ப்பத்தில் காணொளி செய்தியையும் ஹுஸூர் அவர்கள் வெளியிட்டார்கள். அது முழு உலகிலும் ஒளிபரப்பப்பட்டது. மேலும் பிரத்தியேகமாக நூற்றாண்டு LOGO-வும் தயார் செய்யப்பட்டது.

ஹுஸூர் அவர்கள் 24 மார்ச் 1989 அன்று புதிய நூற்றாண்டிற்கான முதல் ஜுமுஆ உரையை நிகழ்த்தினார்கள். அது மொரிஷியஸ் ஜெர்மனி நாடுகளிலும் தொலைக்காட்சி மூலமாக பார்க்கப்பட்டது. புதிய நூற்றாண்டின் துவக்கத்தில் எல்லாம் வல்ல அல்லாஹ் எனக்கு அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்தஹு என்ற அன்பளிப்பை வழங்கியுள்ளான் என ஹுஸூர் கூறினார்கள்.

இலண்டனில் நடைபெற்ற அந்த வருட ஆண்டு மாநாட்டில் 64 நாடுகளிலிருந்து 14,000 அஹ்மதிகள் கலந்து கொண்டார்கள். பல நாடுகளின் தலைவர்கள் வாழ்த்துகள் கூறி செய்தியை அனுப்பி இருந்தார்கள். மேலும் பல கண்ணியமுள்ளவர்கள் அந்த மாநாட்டில் கலந்து கொண்டார்கள். அந்த மாநாட்டில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபி மவ்லவி முஹம்மது ஹுஸைன் சாஹிப் அவர்களை மாநாட்டில் அழைத்து ஆயிரக்கணக்கான அஹ்மதிகளை தாபியீன் (சஹாபிகளைப் பார்த்தவர்கள்)

ஆகுவதற்கான நற்பேறை பெறச் செய்தார்கள். அந்த ஆண்டு மார்ச் 23, 1989 முதல் மார்ச் 23, 1990 வரை வரலாற்றில் ஒரு மைல் கல்லாக திகழக்கூடிய ஒரு இலட்சம் பைஅத்துகள் நடைபெற்றன.

### ஆலமி பைஅத் (உலகளாவிய பைஅத்)

1993-ஆம் ஆண்டு காதியானில் நடந்த ஆண்டு மாநாட்டில்தான் உலகளாவிய பைஅத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. 1993 டிசம்பர் 26 முதல் 28 வரை நடைபெற்ற ஆண்டு மாநாட்டில் துவக்க உரை மற்றும் முடிவுரைகள் செயற்கைக்கோள் மூலமாக உலகெங்கிளலும் பார்க்கப் -பட்டன. முடிவுரையின்போது எட்டு நபர்கள் பைஅத் செய்தார்கள். இது உலகளாவில் செயற்கைக்கோள் மூலமாக ஒளிபரப்பப்பட்ட முதல் பைஅத் ஆகும்.



அதே போன்று மே 30, 1993-ஆம் ஆண்டில் ஜெர்மனியில் நடைபெற்ற குத்தாமுல் அஹ்மதிய்யா இஜ்திமாவின் சந்தர்ப்பத்தில் 13 நாடுகளைச் சார்ந்த 71 நபர்களிடம் பைஅத் வாங்கினார்கள். அந்த நிகழ்ச்சியும் செயற்கைக்கோள் மூலமாக ஒளிபரப்பப்பட்டது.

உலகளாவிய பைஅத் நிகழ்வு முறையாக 1993-ல் பிரிட்டனில் நடைபெற்ற ஆண்டு மாநாட்டில் துவங்கியது. ஹுஸுர் அவர்கள் 1993 ஏப்ரல் மாதத்தில் உலகளாவிய பைஅத்தின் ஏற்பாட்டிற்கான முதல் தூதுச் செய்தியை அனுப்பினார்கள். மேலும் ஜுலை 13 பிரிட்டன் ஆண்டு மாநாட்டின் இரண்டாம் நாள் அன்று இரண்டு இலட்சம் நபர்கள் பைஅத் செய்து அஹ்மதிய்யா இயக்கத்தில் இணைந்தார்கள்.

இந்த பைஅத்தின் தொடர்ச்சியானது விண்ணிலிருந்து ஓசை வரும் என்ற இந்த முன்னறிவிப்பின் அடிப்படையில் தான் அமைந்துள்ளது. இதன் பொருள் இமாம் மஹ்தியிடம் பைஅத் செய்யுங்கள் மேலும் உலகில் ஒரு மகத்துவம் வாய்ந்த புரட்சி ஏற்படும் என்பதாகும்.

### மனித இனத்திற்கு தொண்டாற்றுவதில் மிகுந்த ஆர்வம்

ஹுஸுர் அவர்களின் உள்ளத்தில் மனித இனத்திற்கு தொண்டாற்ற வேண்டும் என்பதில் கட்டுக்கடங்காத உணர்வு இருந்தது. அந்த உணர்வானது மார்க்க சமுதாய மொழி மற்றும் இனத்திற்கு அப்பாற்பட்டதாக இருந்தது. அன்னாருடைய பொருள் தியாகத்தின் திட்டங்களின் மூலமாக உலகின் பல இன்னல்கள் மற்றும் துன்பங்களில் வாழக்கூடிய மக்களின் துயரம் நீக்கப்பட்டது. அஹ்மதியத்திற்காக உயிர் நீத்தவர்களின் வாரிசுகளுக்காக சய்யிதுனா பிலால் ஃபண்ட் நிறுவப்படும் என்று மார்ச் 14, 1986-ஆம் ஆண்டு தன்னுடைய ஜுமுஆ உரையில் அறிவித்தார்கள்.

1984-ல் ஆப்பிரிக்காவில் பஞ்சத்தினால் பாதிக்கப் -பட்டவர்கள், 1992-ஆம் ஆண்டில் சோமாலியாவில் பஞ்சத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் 1994-இல் ரவாண்டாவின் மக்களுக்கான பொருள் உதவி செய்வதற்கான திட்டத்தை அறிவித்தார்கள். அதே போன்று 1992-இல் போஸ்னியாவில் நடைபெற்ற போரின் காரணமாக வீட்டை இழந்த மக்களுக்காக ஜமாஅத் அசாதாரண உதவிகளை செய்வதற்கான பாக்கியத்தை பெற்றது. மேலும் 30 அக்டோபர் 1992-ஆம் ஆண்டில் ஹுஸுர் அவர்கள் போஸ்னியாவில் இருக்கின்ற அனாதைக் குழந்தைகளுக்கு உதவி செய்யும் படியும் பிப்ரவரி 19, 1993-ஆம் ஆண்டில் போஸ்னியன் குடும்பத்தார்களுடன் சகோதர உறவை ஏற்படுத்துமாறும் வலியுறுத்தினார்கள்.

இவை அனைத்திற்கும் மேலாக ஹுஸுர் அவர்கள் மே 30, 1997 அன்று நிகழ்த்திய ஜுமுஆ உரையில் அஹ்மதிகள் மனித இனத்திற்கு தொண்டாற்றக்கூடிய உலக அமைப்பு -களின் உறுப்பினராக ஆக வேண்டும் என கூறியிருந்தார்கள். உலக அளவில் அதிகரித்துக் கொண்டிருக்க கூடிய கொடுமைகள் துன்பங்கள் இன்னல்கள் மேலும் தொண்டாற்றக் கூடிய பரந்த களத்தில் ஜமாஅத்தினுடைய உபசரித்தலின் பங்களிப்பிற்காக ஹுஸுர் அவர்கள் 1992-ஆம் ஆண்டில் மனித இனத்திற்கு தொண்டாற்றுதற்கான உலகளாவிய அமைப்பை நிறுவுவதற்கான அறிவிப்பைச் செய்தார்கள். அதன் அடிப்படையில் Humanity First என்ற அமைப்பு 1993-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இத்திட்டமானது தற்போது வரை எண்ணற்ற நாடுகளில் நிறுவப்பட்டு அதன் மூலமாக மனித இனத்திற்கு தொண்டாற்றுவதில் ஒப்பற்றதாக திகழ்கிறது.


### ஹோமியோபதி பயன்பாட்டை மக்களுக்கு மத்தியில் பரப்புதல்:

ஹுஸுர் அவர்களுக்கு கலீஃபா ஆகுவதற்கு முன்பிருந்து ஹோமியோபதி மற்றும் அதன் மூலமாக இலவச சிகிச்சையை அளிக்க வேண்டும் என்ற உணர்வு அவர்களுக்குள் இருந்தது. 1960-ஆம் ஆண்டில் அன்னார் தன்னுடைய வீட்டிலேயே ஹோமியோபதி மருந்தை கொடுக்க ஆரம்பித்தார்கள். அதன் பிறகு 1968-ஆம் ஆண்டில் வக்ஃபே ஜதீது அமைப்பில் இலவச ஹோமியோபதி டிஸ்பென்சரியை துவங்கினார்கள். மேலும் அன்னார் சுயமே தன்னுடைய பொன்னான நேரத்தைக் கொண்டு நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்துள்ளார்கள்.

ஹுஸுர் அவர்கள் மார்ச் 23, 1994-ஆம் ஆண்டில் MTA -வில் ஹோமியோபதி வகுப்பை நடத்த துவங்கினார்கள். மேலும் மிகவும் விரிவான முறையில் நோய்களுக்கு மருந்துகள் கொடுத்து குணப்படுத்தியது தொடர்பாக வியப்பூட்டக்கூடிய சம்பவங்களையும் கூறியுள்ளார்கள். 200 வகுப்புகள் பதிவு செய்யப்பட்ட பிறகு அது புத்தக வடிவில் ஹோமியோபதி என்ற பெயரில் வெளியிடப்பட்டது. இதுவும் அல்லாஹ்வின் மாபெரும் ஒரு அருளாகும்.

### தர்ஜுமத்துல் குர்ஆன் வகுப்பு

இதுவும் அல்லாஹ்வின் மாபெரும் அருளாகும். அதாவது ஹுஸூர் அவர்கள் ஜூலை 15,1994-ஆம் ஆண்டில் MTA-வில் தர்ஜுமத்துல் குர்ஆன் வகுப்பை துவக்கி வைத்தார்கள். அது பிப்ரவரி 24, 1999-ஆம் ஆண்டு வரை 305




மணி நேரங்களைக் கொண்ட வகுப்பாக முழுமை பெற்றது. அதில் தர்ஜுமா மட்டுமல்லாமல் தேவைக்கேற்ப விளக்கங்களும் இருக்கின்றது .

### மர்யம் ஷாதி ∴பண்ட்:

ஹுஸூர் அவர்கள் ஏப்ரல் 1992-ஆம் ஆண்டில் ஜமாஅத்திற்கு ஏழைப் பெண்களின் திருமணத்தில் பங்கெடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் மேலும் சமுதாயத்தில் உள்ள சடங்கு சம்பிரதாயங்கள் வரதட்சனை போன்ற காரணத்தினால் நிம்மதி இழந்து காணப்படுகின்ற பெற்றோர்களுக்கு உதவி புரியும் வண்ணமாக தன்னுடைய மரணத்திற்கு சில வாரங்களுக்கு முன்பாக பிப்ரவரி 2002-ல் ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். ஒரு வாரத்திற்குள் ஒரு இலட்சம் பவுண்ட் இத்திட்டத்தின் கீழ் ஒன்று சேர்ந்து விட்டது. பிப்ரவரி 22, 1992 அன்று ஜுமுஆ உரையில் அந்த ∴பண்டிற்கு 'மர்யம் ஷாதி ∴பண்ட்' என பெயர் வைத்து மேலும் கூறினார்கள்: "தற்போதுள்ள இந்த ∴பண்ட் ஒருபோதும் முடிவு பெறாது. மேலும் எப்போதுமே ஏழைப் பெண் பிள்ளைகள் கண்ணியத்துடன் திருமணம் முடித்து அனுப்பி வைக்கப்படுவார்கள் என நான் நம்புகின்றேன்". (அல் ∴பஸ்ல் இன்டர்நெஷனல் ஏப்ரல் 4, 2003)

### மாபெரும் மகத்துவமான பணி:

அன்னாரின் மாபெரும் மகத்துவமான பணி என்னவென்றால் ஜமாஅத்தின் உலகளாவிய ஒற்றுமை மற்றும் கிலா∴பத்தை வலுப்படுத்தியதுதான். இதுவும் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் மாபெரும் இறையருளாகும். அன்னார் ஒவ்வொரு குழப்பத்தையும் நசுக்கி விட்டார்கள். ஒவ்வொரு கலகத்தைத் தூண்டக்கூடிய விஷயங்களையும் வேரோடு அறுத்து எறிந்து விட்டார்கள். மேலும் உலகம் அன்னாருக்கு எதிராக திட்டங்கள் தீட்டியிருந்தும் தன்னுடைய அமானிதத்தை மிகவும் சிறப்பாக பாதுகாத்தவாறு அடுத்த கலீ∴பாவிடம் அதை ஒப்படைத்துள்ளார்கள்.

### நான்காம் கிலா∴பத் காலகட்டத்தில் அஹ்மதிய்யத்தின் விஸ்வரூபம்:

மற்றொரு மாபெரும் அல்லாஹ்வின் அருள் என்னவென்றால் 1982-ஆம் ஆண்டில் நான்காம் கிலா∴பத்தின் துவக்கத்தில் ஜமாஅத் 80 நாடுகளில் மட்டுமே நிறுவப்பட்டிருந்தது. அதன் பிறகு 2003-ஆம் ஆண்டில் ஹுஸூர் அவர்களின் மரணம் வரை 175 நாடுகளில் ஜமாஅத் நிலைபெற்று விட்டது. 1958 முதல் 1984 வரை 28 புதிய ஜமாஅத்துகள்தான் நிறுவப்பட்டிருந்தது. அதன் பிறகு உலகின் பல நாடுகளில் புதிய ஜமாஅத் நிறுவப்பட்டதன் மூலமாக எத்தகு அசாதாரணமான மற்றும் வியக்கத்தகு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதை மதிப்பிட முடியும். ஹிஜ்ரத்திற்கு பிறகு 19 ஆண்டுகளில் முழு உலகிலும் 35,258 புதிய ஜமாத்துகள் நிறுவப்பட்டுள்ளன.

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் இந்த அருள் மழையிலிருந்து நாம் அனைவரும் பயன் பெறுவதற்கான நற்பாக்கியத்தை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக.

## கலீஃபா - பிரதிநிதி

கலீ∴பா பிரதிநிதிக்கு கூறப்படுகிறது. தூதரின் பிரதிநிதி உண்மையான பொருளில் தூதரின் சிறப்புகளை நிழல் ரீதியில் தன்னகத்தே கொண்டவரே ஆவார். மனிதனுக்கு நிரந்தர வாழ்வு இல்லை. எனவே இறைவன் உலகில் உள்ள அனைவரையும் விட சிறப்பான இருப்பாகிய தூதரின் இருப்பை நிழல் ரீதியில் என்றென்றைக்கும் கியாமத் வரைக்கும் நிலைத்திருக்கச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே இறைவன் கிலா∴பத்தை தேர்ந்தெடுத்தான். அதன் மூலம் உலகம் எப்போதும் எந்த காலத்திலும் நபித்துவத்தின் அருட்களை இழக்காதிருக்க அவ்வாறு செய்தான்.

-ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை)

# ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள்

மவ்லவி S. அப்துல் காதிர்

இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி மற்றும் வெற்றிகளின் அடிப்படை இரகசியத்தை ஒரே ஒரு சொல்லில் எடுத்துரைக்க வேண்டுமானால் அது கிலா.ஃ.பத் என்றே சொல்லலாம். நபிகள் நாயகம் ஹஸ்ரத் முஹம்மது முஸ்த.ஃ.பா (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புக்கு ஏற்ப இக்காலத்தில் நுபுவ்வத்தைத் தொடர்ந்து வந்த இந்த கிலா.ஃ.பத் என்ற இறை அருள் கிடைக்கப் பெற்றதற்காக நாம் அனைவரும் இறைவனுக்கு எவ்வளவுதான் நன்றி தெரிவித்தாலும் அது குறைவே!

மனித குலத்திற்கு ஆன்மிக வழிகாட்டல் தேவைப்படும் போதெல்லாம் அல்லாஹ் தன்னுடைய கருணையை வெளிப்படுத்தி தன் சொந்தக் கரங்களின் உதவியைக் கொண்டு நபியை அனுப்பி வைக்கிறான். இறைவனின் இந்த நடைமுறையை அவனது வல்லமையின் முதலாவது வெளிப்பாடு என்றும், அந்த நுபுவ்வத்தைத் தொடர்ந்து வரும் கிலா.ஃ.பத்தை இறை இருப்பு மற்றும் வல்லமையின் இரண்டாம் வெளிப்பாடு என்றும் அழைக்கிறோம்.

இறைவனின் இந்தக் கருணையின் விளைவாக மனித குலத்திற்கு எண்ணற்ற ஆன்மிக மற்றும் பௌதிகப் பலன்கள் கிடைக்கப் பெறுகின்றன. மனிதனிடம் காணப்படும் பல்வேறு வகையான மறைவான ஆற்றல்களும் திறமைகளும் வெளிப்படுகின்றன. இவை சொந்த முயற்சியால் அல்லது உரிமை அடிப்படையில் கிடைப்பது இல்லை. மாறாக, இறைவனின் தனிப்பட்ட விருப்பம் மற்றும் அருளைச் சார்ந்தது என்பதுதான் நிதர்சனமான உண்மை.

இதைக் குறித்து அல்லாஹ் தன்னுடைய அருள் மறையில், ذٰلِكَ فَضْلُ اللّٰهِ يُؤْتِيْهِ مَنْ يَّشَآءُ என்று கூறுகின்றான். இறைவனின் இந்த வாக்குறுதிக்கேற்ப இன்று அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் கிலா.ஃ.பத் எனும் மாபெரும் அருள் நிலைத்திருக்கின்றது. இது மனித குலத்திற்கு இறைவன் கொடுத்த மாபெரும் பேரருளாகும் என்ற கருத்தை வலியுறுத்தி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

“உலகின் அனைத்து மனிதர்களை விடவும் எப்போதும் சிறப்பும், மேன்மையும் பொருந்தியவர்களாகத் திகழும் நபிமார்களின் இருப்பை நிரந்தரமாக கியாமத் வரை நிழல் வடிவில் நிலைத்திருக்கச் செய்ய வேண்டும் என்று இறைவன் தீர்மானித்திருக்கிறான். மனித குலம் எப்போதும் எந்த ஒரு காலகட்டத்திலும் தூதுத்துவத்தின் அருள்களிலிருந்து பேறிழந்து போய் விடக் கூடாது என்பதற்காகவே இறைவன் கிலா.ஃ.பத் என்பதைத் தேர்ந்தெடுத்தான்.” (ஷஹாதத்துல் குர்ஆன் ரூஹானி கஸாயின் தொகுதி 6 பக்கம் 353)

ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அவர்கள் 15 செப்டம்பர் 1950 அன்று பாகிஸ்தானில் ரப்வா நகரில் மிர்ஸா மன்சூர் அஹ்மது சாஹிப் அவர்களுக்கும் ஹஸ்ரத் நாஸிரா பேகம் சாஹிபா அவர்களுக்கும் பிறந்தார்கள். வேளாண் துறையில் முதுகலைப் பட்டம் பெற்ற பின் 1977-ல் இஸ்லாத்திற்காக தமது வாழ்வை அர்ப்பணித்தார்கள். 1977 முதல் பல வருடங்கள் கானாவில் பல்வேறு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பள்ளிக்கூடங்களில் முதல்வராகப் பணிபுரிந்துள்ளார்கள். கானா நாட்டில் முதன் முதலாக கோதுமையைப் பயிரிட்டு வெற்றி கண்டார்கள்.




## கிலா.ஃ.பத்:

2003-ஆம் ஆண்டு ஏப்ரல் 22-ல் ஐந்தாவது கலீ.ஃ.பத்துல் மஸீஹாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அன்றிலிருந்து 200-க்கும் மேற்பட்ட நாடுகளில் கோடிக்கணக்கான அஹ்மதிகளை உறுப்பினர்களாக் கொண்ட அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய ஆன்மிகத் தலைவராகப் பெரும் பணியாற்றி வருகிறார்கள். கலீ.ஃ.பாவாகத் தேர்நதெக்கப்பட்டதிலிருந்து முழு உலகிலும் இஸ்லாத்தின் அமைதி நிறைந்த போதனைகளை அனைத்து வகை ஊடகங்களையும் பயன்படுத்திப் பரப்பி வருகிறார்கள். அவர்களது தலைமையின் கீழ் பல்வேறு நாடுகளில் அஹ்மதிகள் உண்மையான இஸ்லாத்தின் போதனைகளைப் பிரதிபலிக்கும் அமைதிக் கருத்தரங்குகள் நடத்தி மத நல்லிணக்கம், நாட்டுப்பற்று, மனிதகுலத் தொண்டு மற்றும் சமூக ஒற்றுமைக்காகவும் பாடுபட்டு வருகின்றார்கள். அன்னாரின் வழிகாட்டலின் கீழ் உலகின் எல்லா நாடுகளிலும் கோடிக்கணக்கான அமைதிப் பிரசுரங்கள் முஸ்லிம்களுக்கும் மாற்று மார்க்க சகோதரர்களுக்கும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. மேலும் திருக்குர்ஆனின் சிறப்பையும் அதன் அன்பு நிறைந்த போதனைகளை எடுத்துரைக்கவும் திருக்குர்ஆன் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

அமைதிக் கருத்தரங்குகள்:

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் 2004-ஆம் ஆண்டு இங்கிலாந்தில் முதலாவது தேசிய அமைதிக் கருத்தரங்கு நிகழ்ச்சியை ஆரம்பித்தார்கள். ஆண்டுதோறும் நடைபெற்று வரும் இந்த அமைதிக் கருத்தரங்கு நிகழ்ச்சியில் பல்வேறு துறையைச் சார்ந்த அறிஞர்களும் பல்வேறு மட்டங்களைச்




சார்ந்த பிரமுகர்களும் அரசு அதிகாரிகளும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் மார்க்கத் தலைவர்களும் கலந்து கொள்கின்றனர். இந்த அமைதிக் கருத்தரங்கு நிகழ்ச்சிகளில் உலகளாவிய அமைதியையும் நல்லிணக்கத்-தையும் மேம்படுத்தும் உரைகள் நிகழ்த்தப்படுகின்றன. கடந்த இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக உலகம் ஒரு பேரழிவின் பக்கம் விரைந்து சென்று கொண்டிருப்பதையும் அதை தடுபபதற்கு நம்மாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வதற்கான அவசியத்தைக் குறித்தும் அதற்கான வழிமுறைகள் குறித்தும் இந்த அமைதிக் கருத்தரங்குகள் வாயிலாகவும் பிற தருணங்களிலும் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் எடுத்துக் கூறி வருகிறார்கள். இவ்வருடம் மார்ச் மாதம் இலண்டனில் நடைபெற்ற 18-வது தேசியஅமைதிக் கருத்தரங்கில் உரைநிகழத்தும் போது இஸ்ரேல் காஸா போர், ரஷ்யா உக்ரைன் போர் உள்ளிட்ட உலகில் நடைபெற்றுவரும் போர்களைக் குறிப்பிட்டு இந்தப் போர்கள் மேலும் தீவிரமடைந்து செல்லட்டும் என்று நாம் வெறுமனே நின்று கொண்டிருந்தால், எண்ணற்ற அப்பாவி உயிர்கள் பலியாகி விடுவது மட்டுமின்றி, நிச்சயமாக, நாமே நமது அழிவு மற்றும் துயரத்திற்கு காரணமாகத் திகழ்ந்ததாக வரலாறு நம்மை நினைவுகூரும் என்றும் குறிப்பிட்டார்கள்.

பாராளுமன்ற உரைகள்:

உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் சுற்றுப் பயணம் செய்து உலகம் ஓர் உலகளாவிய பேரழிவின் பக்கம் சென்று கொண்டிருப்பதைச் சுட்டிக் காட்டி பல்வேறு உயர்மட்ட அரசியல் தலைவர்களிடம் நீதியையும் நல்லிணக்த்தையும் கைகொள்ள வேண்டிய அவசியத்தை எடுத்துக் கூறி வருகிறார்கள். நீதியும் அமைதியும் ஒன்றையொன்று பிரிக்க முடியாதவை. நீதியை நிலைநாட்டாமல் அமைதியை எண்ணிப் பார்க்கவே முடியாது. திருக்குர்ஆன் கூறும் நீதியின் உயர்தர போதனை இதுவாகும்.

“நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்காக நீங்கள் நேர்மையான சாட்சி கூறுபவர்களாக நிலைத்து நில்லுங்கள். ஒரு சமுதாயத்தின் பகைமை, உங்களை நீதியுடன் நடக்காதவாறு தூண்ட வேண்டாம். நீங்கள் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். இதுதான் இறையச்சத்திற்கு மிக நெருங்கியது. அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ், நீங்கள் செய்பவற்றை நன்கறிகின்றான்.” (திருக்குர்ஆன் 5:9)

உலகில் அமைதியை நிலைநாட்ட இஸ்லாம் வழங்கும் இந்தப் போதனையை துரதிர்ஷ்டவசமாக முஸ்லிம்களால் கூட பேணி நடக்க முடியாத நிலையில், சர்வதேச அளவில் உலக நாடுகளின் தலைவர்களுக்கும், சாமானியர்களுக்கும் சரிசமமாக அவரவர் செயல் வட்டத்தில் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள் என்ற கருத்தை வலியுறுத்தி போதித்து வருகிறார்கள். அது மட்டுமின்றி உண்மையான நீதியின் இலக்கணத்தை வரையறை செய்து அதன்படி செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஓர் உண்மை இஸ்லாமிய சமூகத்தை வழிநடத்திக் கொண்டும் இருக்கிறார்கள்.

“இதுதான் இறையச்சத்திற்கு மிகவும் நெருங்கியது” என்று இறைவன் எந்த நீதியைக் குறிப்பிட்டுச் சொல்கின்றானோ அந்த நீதி இன்றல்ல. நேற்றல்ல. உலகில் ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்பு நிலை நாட்டப்பட்டது. அது திருக்குர்ஆனில் கூறப்பட்ட, ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களால் நடைமுறையில் கொண்டு வரப்பட்ட, அக்காலம் முதல் இக்காலம் வரை உலகெங்கும் மக்களால் அங்கீகரிக்கப்பட்ட நீதியாகும். அந்த நீதிதான் இன்றும் உலகில் அமைதியை ஏற்படுத்தவல்லது. இதனை முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு அதிகமாக சமீப காலத்தில் உலகம் உணர ஆரம்பித்திருக்கிறது.” (யு.கே. அமைதிக் கருத்தரங்கு 2012)

இவ்வாறு அமைதிக் கருத்தரங்குகள் மட்டுமின்றி சர்வதேச மேடைகளில் மற்றும் பல பாராளுமன்றங்களில் இந்தக் கருத்தை வலியுறுத்தி பேசியும் பல அரசியல் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் உலக அமைதி பற்றிய இஸ்லாமிய புரிதலை மேம்படுத்த இடைவிடாது முயற்சி செய்தும் வருகின்றார்கள்.

ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் பிரிட்டிஷ் பாராளுமன்றம், அமெரிக்காவின் கேபிடல் ஹில், ஐரோப்பிய யூனியனின் பாராளுமன்றம், ஜெர்மனி இராணுவத் தலைமையகம், ஹாலந்தின் பாராளுமன்றம், நியூஸிலாந்து பாராளுமன்றம் போன்றவற்றில் உலக அமைதியை மேம்படுத்த பல்வேறு தலைப்புகளில் உரைகள் நிக்ழ்த்தியுள்ளார்கள்.

தலைவர்களுக்கு கடிதங்கள்:

அதைப் போன்று அமெரிக்க அதிபர், ரஷ்ய அதிபர். இஸ்ரேலின் பிரதமர், ஈரானின் அதிபர், பிரிட்டன் பிரதமர், போப் ஆண்டவர் உள்ளிட்ட பல தலைவர்களுக்கு தன் சார்பாக கடிதங்கள் எழுதினார்கள். அதில் உலகம் வேகமாக அழிவின் பக்கம் சென்று கொண்டிருப்பதைச் சுட்டிக் காட்டி மனித குலத்தைக் காப்பாற்ற நீதியின் பக்கமும் அமைதியின் பக்கமும் திரும்ப வேண்டிய அவசரத் தேவை இருப்பதையும் அந்தத் தலைவர்கள் தம்மால் ஆன முயற்சிகளை மேற்கொள்ளவும் வலியுறுத்தினார்கள். போப்பாண்டவர் புனித

14-வது போப் பெனடிக்ட் அவர்களுக்கு 2011-ஆம் ஆண்டு எழுதிய கடித்தில் "கவலையுடன் இப்போதுள்ள உலகின் சூழலை நாம் கூர்ந்து கவனித்தால் மற்றோர் உலகப் போருக்கான அடிக்கல் நாட்டப்பட்டு விட்டதைக் காணலாம்.... உலகில் நீங்கள் ஒரு செல்வாக்கு நிறைந்த குரலைக் கொண்டுள்ளீர்கள். இறைவனால் ஏற்படுத்தப்பட்ட இயற்கை சமநிலையின் வழியில் தடைகளை ஏற்படுத்தினால் அவர்கள் விரைவாகப் பேரழிவை நோக்கிச் செல்வார்கள் என்பதை நீங்களும் இந்த உலகிற்குத் தெரியப்படுத்துங்கள் என நான் உங்களிடம் வேண்டுகிறேன்" என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

அதைப் போன்று அமெரிக்க அதிபர் ஒபாமாவுக்கு எழுதிய கடித்தில் "எனது தாழ்மையான வேண்டுகோள் என்னவென்றால் வல்லரசுகள் மற்றும் சிறிய நாடுகள் உலகப் போரில் ஈடுபடுவதிலிருந்து தடுக்க உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள். நாம் இந்தப் பணியில் தோற்றால் இந்தப் போரினால் ஏற்படும் விளைவுகள் ஆசியாவில் உள்ள ஏழை நாடுகளுக்கு மட்டுமல்லாமல் ஐரோப்பாவையும் அமெரிக்காவையும் பாதிக்கும் என்பதில் சந்தேகமில்லை. மேலும் இந்தச் செயல்களால் நமது வருங்கால சந்ததியினர் இதன் விளைவுகளைச் சந்திப்பார்கள். மேலும் உலகில் எங்கு பார்த்தாலும் குறைபாடுள்ள, ஊனமுள்ள குழந்தைகள் பிறப்பார்கள். அவர்கள் தங்களின் மூதாதையர்களை இந்த உலகத்தை உலகப் பேரழிவிற்கு இட்டுச் சென்றவர்களை ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள்" என்று குறிப்பிட்டிருந்-தார்கள்.

இதைப் போன்று சவூதி அரேபிய மன்னருக்கும், கனடா நாட்டின் பிரதமர், பிரான்ஸ் நாட்டின் பிரதமர் மற்றும் ஜெர்மன் நாட்டின் பிரதமருக்கும் கடிதங்கள் எழுதினார்கள். ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் அவர்களின் இந்தக் கடிதங்களில் தொகுப்பை World Crisis and the Pathway to Peace என்ற நூலில் காணலாம்.

## இறைத்தொடர்பு:

இறைவனுடன் மனிதகுலத்திற்கு ஓர் உயிரோட்டம் உள்ள தொடர்பை ஏற்படுத்துவதும் நுபுவ்வத் மற்றும் கிலா∴பத்தின் நோக்கங்களுள் ஒன்றாகும். இந்த தொடர்பு கிடைக்கப் பெற்றுள்ளது என்பது இறைவனிடம் நமது பிரார்த்தனைகள் ஏற்றுக் கொள்ளப்படுவதை வைத்து நாம் உறுதி செய்து கொள்ள முடியும்.

வல்லமையுள்ள இறைவனின் சந்நிதியில் மன்றாட யாவருக்கும் இடமுண்டு. அந்த மன்றாடல்களைக் கேட்பதில் கருணையாளனாகிய இறைவன் எந்தப் பாரபட்சமும் பார்ப்பதில்லை என்பது எவ்வளவு உண்மையோ அதேப் போன்று இறைவன் தனக்கு விருப்பமான நபர்களின் மன்றாடல்களுக்கு மற்ற எல்லாரையும் விட அதிகமாக பதிலளிக்கின்றான் என்பதும் உண்மையே!

ஏனென்றால் இந்தக் கலீ∴பாவை தன் நபியின் பிரதிநி என்ற உயர்வான இடத்திற்கு தன் சொந்த விருப்பத்தின்படி தேர்ந்தெடுத்து தன் ஆதரவு மற்றும் வல்லமையின் இரண்டாம் வெளிப்பாடாக ஆக்கியதால் மற்றவர்களின் பிரார்த்தனைகள் மற்றும் மன்றாடல்களை விட கலீ∴பாவுக்கு இறை சந்நிதியில் கூடுதல் இடமுண்டு.

'இன்னீ மஅக்க யா மஸ்ரூர்' என்ற இறைவனின் குரலில் நாம் அந்த அன்பையும் ஆதரவையும் பார்க்க முடிகிறது. கடந்த காலங்களிலும் தற்போதும் நடைமுறையில் இருந்து வருகின்ற இறை ஆதரவின் சம்பவங்களின் காட்சிகள் எனும் கடலில் இறங்கினால் முடிவில்லாத நெடுந்தொடராகப் போய்க் கொண்டே இருக்கும்.

"துஆ என்பது ஓர் அற்புதமான ஆயுதம் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளுக்கள். இதில் பல மகத்துவம் வாய்ந்த அருள்கள் இருக்கின்றன. எனவே உங்களின் எல்லா வேலைகளிலும் வெற்றி கிடைப்பதற்காக துஆக்களில் ஈடுபட்டு வாருங்கள். உங்கள் துஆக்களின் வட்டத்தை நன்றாக விரிவுபடுத்துங்கள். நீங்கள் உங்கள் துஆக்களில் உங்களுக்காகவும் உங்கள் சொந்தங்கள் மற்றும் உற்றார் உறவினருக்காகவும் துஆ செய்யுங்கள். கிலா∴பத்தின் உறுதிப்பாட்டிற்காகவும், ஜமாஅத்தின் வளர்ச்சிக்காகவும் துஆ செய்யுங்கள். சமுதாயத்திற்காகவும், நாட்டின் எல்லா வகையான செழிப்பிற்காகவும் துஆ செய்யுங்கள். துஆவில் உள்ள அருள்களைக் குறித்து சந்ததிகளிடமும் மனைவி மக்களிடம் நல்ல ஒருபுரிதலை உருவாக்குங்கள்." (அல் ∴பஸ்ல் நாளிதழ் டிசம்பர் 28, 2015 பக்கம் 3)

இது தொடர்பாக உதாரணத்திற்காக ஒரே ஒரு சம்பவத்தை மட்டும் முன் வைக்கிறேன்.



2004 ஆப்ரிக்கா சுற்றுப் பயணத்தின்போது ஹுஸுர் அவர்கள் நைஜீரியாவில் இருந்து பெனின் வந்தார்கள். அப்போது அஸர் தொழுகைக்காக மக்கள் பள்ளியிலும் பள்ளிவாசலுக்கு வெளியே பந்தலிலும் காத்திருந்தார்கள். திடீரென மேகமூட்டம் உருவாக அதனைத் தொடர்ந்து இடியுடன் பலத்த மழை பெய்தது. பந்தல் நாலாபுறமும் திறந்த வெளியாக இருந்ததால் அதில் நிற்பது கூட சிரமமாக இருந்தது. 'தொழுகைக்கு நேரமாகி விட்டதா?' என்று ஹுஸுர் அவர்கள் அமீர் சாஹிபிடம் கேட்டார்கள். அதற்கு அமீர் சாஹிப் 'வெளியில் பலத்த மழை பெய்து கொண்டிருக்கிறது. பந்தலில் இருக்கும் மக்கள் சிரமப்படுகிறார்கள்' என்று கூறினார்கள். ஹுஸுர் அவர்கள் வெளியே வந்து வானத்தை நோக்கிப் பார்த்தார்கள். பின்னர் 'பத்து நிமிடம் கழித்து தொழலாம்' என்று கூறி விட்டு உள்ளே சென்றார்கள்.

அடுத்த மூன்று நிமிடங்களில் மழை முற்றிலும் நின்று மேகங்கள் கலைந்து செல்ல வெயில் அடிக்க ஆரம்பித்தது. அதே பந்தலுக்கு அடியில் தொழுகைக்கான ஏற்பாடு

செய்யப்பட்டது. இந்த அற்புதத்தை நேரில் கண்ட அங்குள்ள உள்ளூர்வாசிகள், 'இது என்ன மாயம்!? இந்தப் பகுதியில் மழை பெய்தால் தொடர்ந்து ஒரு சில மணி நேரங்கள் பெய்து விட்டுதான் ஓயும். ஆனால் இப்போது சில நிமிடங்களில் மழை நின்று போனது மட்டுமல்லாது காற்று வீசி மேகங்களும் கலைந்து விட்டதே!' என்று மிகவும் ஆச்சரியமாகக் கேட்டனர். (அல் ஃபஸ்ல் நாளிதழ் 28.12.2015 பக்கம் 43)

## இறை அருட்கள்:

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் அருளுக்குரிய காலகட்டத்தில் கனடாவில் செப்டம்பர் 7, 2003 -ல் முதல் ஜாமிஆ அஹ்மதிய்யா தொடங்கப்பட்டது. இதன் மூலம் அமெரிக்கக் கண்டத்தில் இஸ்லாத்தைப் பரப்ப அங்கேயே முபல்லிஃக்கள் உருவாக முடியும்.

மேற்கு ஐரோப்பாவின் மிகப்பெரிய பள்ளிவாசல் பைத்துல் ஃபுதூஹின் கட்டுமானம் முழுமையாக்கப்பட்டு அக்டோபர் 3, 2003 ஜுமுஆ குத்பா வழங்கி அதனை திறந்து வைத்தார்கள்.



இலண்டன் ஜலஸா 2004-ன் நிறைவு நாளன்று கிலாஃபத் நூற்றாண்டில் வருமானம் ஈட்டும் அஹ்மதிகளில் குறைந்தது 50 சதவீதம் பேர் வஸிய்யத் செய்ய வேண்டும் என்று ஜமாஅத்தைக் கேட்டுக் கொண்டார்கள். அதன் பிறகு ஹஸரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இந்த அருளுக்குரிய திட்டத்தில் இணைந்து இறை அருளைப் பெற்றுக் கொள்ளும் அஹ்மதிகளின் எண்ணிக்கை முழு உலகிலும் பெருமளவு அதிகரித்து விட்டது.

27 மே, 2005 அன்று 2008-ல் கிலாஃபத் ஜூபிலி கொண்டாட வேண்டும் என்ற நோக்கில் பல்வேறு ஆன்மிகத் திட்டங்களை ஜமாஅத்தின் முன் வைத்தார்கள். அவற்றில் ஒன்று உலகம் முழுவதும் உள்ள அஹ்மதிகள் இஸ்லாத்தைப் பரப்பும் பணிக்காக நூறு கோடி பவுண்டுகள் தியாகம் செய்யத் திட்டமிட்டனர். அதற்கு கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் ஒப்புதல் அளித்தார்கள்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் அருளுக்குரிய கிலாஃபத் காலகட்டத்தில் அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிய்யா ஜமாஅத் ஆண்டுதோறும் பெற்று வரும் இறை அருட்கள் எண்ணிலடங்காதவை. அவற்றை ஒரு சில பக்கங்களில் சுருக்கமாகக் கூட எடுத்துரைப்பது சாத்தியமற்றது. இலண்டனில் நடைபெறும் ஒவ்வொரு யு.கே ஆண்டு மாநாட்டிலும் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் முந்தைய ஓராண்டில் ஜமாஅத்திற்கு கிடைத்த இறை அருள்களின் தொகுப்பை எடுத்துக் கூறுகிறார்கள். 2023 ஜூலை மாதம் நடைபெற்ற யு.கே ஆண்டு மாநாட்டில் எடுத்துரைத்த இறை அருட்களின் சில துளிகள் இங்கு தரப்படுகிறது.

கடந்த ஒரு வருடத்தில் மட்டும் உலகில் 329 இடங்களில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கிளைகள் நிறுவப்பட்டுள்ளன. 1016 புதிய இடங்களில் அஹ்மதிய்யத் வேரூன்றியுள்ளது.

சென்ற ஆண்டுமட்டும் 185 பள்ளிவாசல்களை ஜமாஅத் பெற்றிருக்கின்றது. அவற்றுள் 125 புதிதாகக் கட்டப்பட்டவை -யாகும்.

ஆப்ரிக்கா, ஐரோப்பா மற்றும் இதர கண்டங்களில் மொத்தமாக 124 பிரச்சார நிலையங்கள் ஜமாத்திற்கு சென்ற வருடம் கிடைத்துள்ளது.

திருக்குர்ஆன் இதுவரை 76 மொழிகளில் மொழியாக்கம் செய்து வெளிடப்பட்டுள்ளது. மேலும் சில மொழியாக்கங்கள் அச்சிடத் தயாராக உள்ளன.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்கள் அனைத்தும் அரபி மொழியாக்கம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டு விட்டன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் 82 புத்தகங்கள் ஜெர்மன் மொழியில் வெளிடப்பட்டுளளன. அவற்றுள் 10 நூற்கள் கடந்த ஓராண்டில் வெளியிடப்பட்டன.

புத்தகங்கள் மற்றும் பிரசுரங்களின் 5.89 மில்லியன் பிரதிகள் 47 மொழிகளில் கடந்த ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளன. 124 பத்திரிகைகள் பல்வேறு ஜமாஅத்துகள் மற்றும் கிளை அமைப்புகள் சார்பாக வெளியிடப்படுகின்றன.

9166 கண்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன. அதன் மூலம் 420000 மக்களுக்கு தூதுச் செய்தி சென்றடைந்தது. 1774 திருக்குர்ஆன் பிரதிகள் இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளன. 8500 புக் ஸ்டால்களும் புத்தகக் கண்காட்சிகளும் நடத்தப்பட்டுள்ளன. இவற்றின் மூலமாக 1.7 மில்லியன் மக்கள் பயன் பெற்றனர்.

சென்ற வருடத்தில் 107 நாடுகளில் 11 மில்லியன் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இஸ்லாத்தின் தூதுச் செய்தி 18 மில்லியன் மக்களைச் சென்றடைந்தது.

வக்ஃபே நவ் திட்டத்தின் கீழ் இதுவரை அர்ப்பணிக்கப்பட்டுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை 80,000 ஆகும். இதில் 47,000 ஆண் குழந்தைகள் 33,000 பெண் குழந்தைகள் ஆவர். 15 வயதைக் கடந்துள்ள வாகிஃபீன்கள் 39,000 பேர் ஆவர்.

MTA தற்போது மொத்தம் 8 சேனல்களுடன் 24 மணி நேரமும் ஒளிப்பரப்பாகின்றது. MTA 6 ASIA, மற்றும் MTA 7 ASIA தற்போது Streaming-ஐ துவக்கி விட்டன. MTA தற்போது UK-விலும் ஐரோப்பாவிலும் HD-லும் கிடைக்கிறது. MTA Africa பல்வேறு அம்சங்களில் முன்னேறி வருகிறது. MTA

Africa-விற்கு தற்போது 12 கிளைகள் உருவாகி விட்டன. MTA பார்ப்பதன் மூலமாக பலர் அஹ்மதிய்யத்தை ஏற்று வருகின்றனர்.

தற்போது அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாத்திற்கு 25 ரேடியோ நிலையங்கள் உள்ளன. ,அவற்றின் மூலம் சிறப்பாக தப்லீக் நடைபெற்று வருகிறது. அரபி, துருக்கி மற்றும் ஜெர்மானிய மொழிகளில் ஒலிபரப்பு செய்யும் வானொலி நிலையங்கள் ஜெர்மனியிலிருந்து இயங்கி வருகின்றன.

நுஸ்ரத் ஜஹான் திட்டத்தின் கீழ் 13 ஆப்ரிக்க நாடுகளில் 37 மருத்துவமனைகளும் கிளினிக்குகளும் நடத்தப்பட்டு வருகின்றது. நூற்றுக்கணக்கான பள்ளிக் -கூடங்களும் நடத்தப்படுகின்றன.

மனிதம் முதலில் திட்டம் (HUMANITY FIRST) தற்போது 29 நாடுகளில் ரிஜிஸ்டர் செய்யப்படடுள்ளது. HUMANITY FIRST சார்பில் தற்போது மருத்துவமனைகளும் நிறுவப்படுகின்றன. எனவே முதலுதவி சிகிச்சைத் தவிர வழகக்மான சிகிச்சைப் பிரிவுகளும் இந்த மருத்துவமனை -களில் இடம் பெறுகின்றன.

கடந்த ஆண்டில் 2,17,168 பேருக்கு பைஅத் செய்து இஸ்லாம் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளும் நற்பேற்றை அல்லாஹ் வழங்கியுள்ளான.

கிலா∴பத்தின் மூலமாக உண்மையான மார்க்கத்தை உறுதிப்படுத்துவேன் என்ற அல்லாஹ்வின் வாக்குறுதி அஹ்மதிய்யா கிலா∴பத்தின் மூலமாக நிறைவேறி வருவதற்கு முழு உலகிலுமுள்ள அஹ்மதிகள் சாட்சிகளாவர். அல்லாஹ் ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் கரத்தை மேலும் வலுப்படுத்துவானாக! ரூஹுல் குதுஸின் மூலமாக அன்னாரை மேலும் பலப்படுத்துவானாக! ஆமீன்.

# மூதாட்டியுடன் ஒப்பந்தம்!

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்களின் அறிவிப்பு:

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சிரியாவிலிருந்து மதீனா திரும்பி வரும் போது மக்களின் நிலைமையை அறிந்து கொள்வதற்காக மற்றவர்களை விட்டுப் பிரிந்து வந்து விட்டார்கள். (அதாவது மக்களின் நிலைமையை அறிந்து கொள்வதற்காக பயணக் குழவை விட்டுப் பிரிந்து வந்தார்கள்.) அப்போது கூடாரத்திலிருந்து ஒரு மூதாட்டி -யைக் கடந்து சென்றார்கள். அன்னார் அந்த மூதாட்டியிடம் விசாரித்தார்கள். அவர், 'மனிதரே உமர் என்ன செய்து விட்டார்?' என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) 'ஏன்? அவர் சிரியாவிலிருந்து வந்து விட்டார். இதோ இங்கேதான் இருக்கின்றார்' என்று கூறினார்கள். அதற்கு அந்த மூதாட்டி, 'இறைவன் அவருக்கு என் தரப்பிலிருந்து எந்த நற்கூலியையும் வழங்காதிருப்பானாக' என்று கூறினாள். அதற்கு அன்னார் 'உன் மீது பரிதாபம். ஏன்?' என்று கேட்டார்கள். (அதாவது ஏன் இவ்வாறு கூறுகிறாய்? என்று கேட்டார்கள்). அதற்கு அந்த மூதாட்டி, 'அவர் கலீ∴பா ஆனதிலிருந்து எனக்கு எந்த நன்கொடையும் கிடைக்க -வில்லை. எந்த தினாரும் கிடைக்கவில்லை. திர்ஹமும் கிடைக்கவில்லை' என்று கூறினாள். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி), 'உன் மீது பரிதாபம்! உமருக்கு உனது நிலைமை பற்றி எப்படி தெரியும்? நீயோ இவ்வளவு தூரத்தில் காட்டிற்கு அருகே வாழ்கிறாய்' என்று கூறினார்கள்.

அந்த மூதாட்டிக்கு தாம் உமர் (ரலி) அவர்களிடமே பேசிக் கொண்டிருக்கிறோம் என்பது தெரியவில்லை. அதற்கு அந்த மூதாட்டி, 'சுப்ஹானல்லாஹ்! ஒருவர் மக்களுக்கு ஆளுனராக ஆகிவிட்ட பிறகு அவருக்கு கிழக்கிலும் மேற்கிலும் என்ன நடக்கிறது என்பது தெரியாது என்று என்னால் நம்ப முடியவில்லை' என்று கூறினாள். அதைக் கேட்ட ஹஸ்ரத் உமர் (ரலி) அழலானார்கள். பிறகு கூறினார்கள்: 'உமரே! உம் மீது பரிதாபமே! இதைப் போன்று எத்தனை முறையீடு செய்பவர்கள் இருக்கிறார்களோ! அவர்களில் ஒவ்வொருவரும் உன்னை விட மார்க்கத்தை அதிகம் தெரிந்தவர்களாக உள்ளனர்'. பிறகு ஹஸரத் உமர் (ரலி) அவர்கள் அந்த மூதாட்டியிடம், 'உனக்கு இழைக்கப்பட்ட அநீதியை அவரது கைகளில் எவ்வளவு விலைக்கு விற்க விரும்புகிறாய்? நான் அவரை நரக நெருப்பிலிருந்து காப்பாற்ற விரும்புகிறேன்' என்று கூறினார்கள். (அதாவது அவர்கள் ஹஸ்ரத் உமரை நரகத்திலிருந்து காப்பாற்ற விரும்புகிறேன் என்று கூறினார் -கள்.) அந்த மூதாட்டி 'என்னிடம் பரிகாசம் செய்யாதீர். அல்லாஹ் உம் மீது கருணை புரியட்டுமாக' என்று கூறினாள். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அந்த மூதாட்டி இடம் 'இது பரிகாசம் அல்ல' என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவரிடம் வற்புறுத்திக் கொண்டே இருந்தார்கள். எதுவரை என்றால் அவரது அநீதியிழைக்கப் -பட்ட உரிமையை 25 தினாருக்கு வாங்கி விட்டார்கள்.

இந்த உரையாடல் நடந்து கொண்டிருந்தபோது ஹஸ்ரத் அலீ பின் அபு தாலிப் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் அப்துல்லா பின் மஸ்வூத் (ரலி) அவர்களும் அங்கு வந்து விட்டார்கள். அவர்கள் இருவரும், 'அமீருல் மூ∴மினீன் அவர்களே! அஸ்ஸலாமு அலைக்க' என்று கூறினார்கள்.. இதைக் கேட்ட அந்த மூதாட்டி தலை மீது கை வைத்தவாறு, 'அல்லாஹ் நன்மை புரிவானாக நான் அமீருல் மூ∴மினீன் அவர்களை அவர்களுக்கு முன்னாலேயே தவறாக கூறி விட்டேனே' என்று கூறினாள். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் 'உன் மீது எந்தக் குற்றமும் இல்லை. இறைவன் உன் மீது கருணைபுரிவானாக!' என்று கூறினார்கள்.

பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எழுதுவதற்காக ஒரு துண்டு தோல் கேட்டார்கள். ஆனால் அது கிடைக்காமல் போகவே தாம் போர்த்தியிருந்த போர்வையில் ஒரு துண்டு வெட்டி எடுத்து அதில் இவ்வாறு எழுதினார்கள்:: 'பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம். இது உமர் இன்ன பெண்மனியோடு அவர் ஆளுனரான நாளிலிருந்து இன்று வரை அவர் மீது இழைக்கப்பட்ட அநீதியை 25 தினாருக்காக வாங்கிக் கொண்டார் என்பதற்கான பத்திரமாகும். அந்த மூதாட்டி அல்லாஹ்வுக்கு முன் வந்து வாதித்தால் உமர் அதிலிருந்து விடுபட்டவர் ஆவார். அலீ பின் அபுதாலிப் மற்றும் அப்துல்லா பின் மஸ்ஊத் இதற்கு சாட்சியாவார்கள்.

பின்னர் அன்னார் அந்த மடலை ஹஸ்ரத் அலி அவரகளிடம் கொடுத்து, 'ஒருவேளை நான் உமக்கு முன்னர் உலகை விட்டுச் சென்று விட்டால் இதை எனது க∴பன் துணியில் வைத்து விடுங்கள்' என்று கூறினார்கள். (இஸாலத் அல் கா∴பா அன் கிலா∴பத் அல் குல∴பா (மொழிபெயர்ப்பு) தொகுதி 3 பக்கம் 276-278, மனாகிப் ∴பாரூக் ஆஸம், காதிமிகுதுப் காஹ்னா, கராச்சி)

(ஹஸ்ரத் கலீ∴பத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹ் அவர்களின் ஜுமுஆ சொற்பொழிவிலிருந்து நாள் 19-11-2021)

**கேள்வி மற்றும் பதில்**

## ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் வழிகாட்டல்






# காலத்தின் கலீஃபாவுக்கு கட்டுப்படுதல்

**தமிழாக்கம்: A. நாஸிர் அஹ்மது**

எகிப்தில் இருந்து ஒருவர் அமீருல் மு∴மினீன் ஹஸ்ரத் கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு கேள்வி கேட்டிருந்தார்:

“நான் மற்றொரு அஹ்மதியுடன் ஜின்களைப் பற்றி விரிவாக விவாதித்தேன். அந்த சமயத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் குறிப்பை மேற்கோள் காட்டினேன். அவரிடம் உரையாடியதிலிருந்து அவர் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்று-களுக்கும் அன்னாரது கலீ∴பாக்களின் கூற்றுகளுக்கும் இடையில் வேறுபாடு காட்டுவதை நான் உணர்ந்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தெளிவான கட்டளை இருந்தால் அதைப் பின்பற்ற வேண்டும். மற்றபடி ஓர் அஹ்மதி சில விஷயங்களில் கலீ∴பாவிடமிருந்து மாறுபட்ட கருத்துகளைக் கொண்டிருக்க முடியும் என்று அவர் நம்புகிறார். இதற்கு நான் எவ்வாறு பதிலளிக்க வேண்டும் என்று தயவுசெய்து எனக்கு வழிகாட்ட முடியுமா?”

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் செப்டம்பர் 7, 2022 தேதியிட்ட தனது கடிதத்தில் இந்தக் கேள்விக்குப் பின்வரும் பதிலை வழங்கியுள்ளார்கள்:

“அல்லாஹ்வின் நபிமார்களுக்கு அவர்கள் எந்த மக்களிடம் அனுப்பப்பட்டார்களோ அந்த மக்கள் கீழ்ப்படிய வேண்டியது கட்டாயம் என்பதில் சந்தேகத்திற்கோ அல்லது நிச்சயமற்ற தன்மைக்கோ இடமில்லை. ஆன்மிக முன்னேற்றமும் மறுமையில் இரட்சிப்பு கிடைக்கப் பெறுவதும் அவர்களுக்கு முழுமையாகக் கட்டுப்படுவதுடன் பிணைக்கப்-பட்டுள்ளது. மேலும் அவர்களுக்கு கீழ்ப்படியாமை இந்த உலகில் அவமானத்தை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல், மறுமை வாழ்க்கையில் நிலையான தண்டனைக்கும் அது வழிவகுக்கிறது.

இக்கருத்து திருக்குர்ஆனில் மீண்டும் மீண்டும் பலவாறு கூறப்பட்டுள்ளது. உதாரணமாக,

وَمَآ اَرۡسَلۡنَا مِنۡ رَّسُوۡلٍ اِلَّا لِيُطَاعَ بِاِذۡنِ اللّٰهِ ؕ

“நாம் எந்தத் தூதரையும் அல்லாஹ்வின் கட்டளையினால் அவருக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே தவிர அனுப்பவில்லை.” (4:65)

وَمَنۡ يَّعۡصِ اللّٰهَ وَرَسُوۡلَهٗ وَيَتَعَدَّ حُدُوۡدَهٗ يُدۡخِلۡهُ
نَارًا خَالِدًا فِيۡهَا ۖ وَلَهٗ عَذَابٌ مُّهِيۡنٌ ع

“மேலும் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கட்டுப்படாமல் அவன் (ஏற்படுத்திய) வரம்புகளை மீறுபவரை அவன் நெருப்பில் நுழையச் செய்வான். அவர் அதில் நீண்ட காலம் இருந்து கொண்டிருப்பார். அவருக்கு இழிவுபடுத்தக் கூடிய தண்டனையும் (விதிக்கப்பட்டு) உள்ளது.” (4:15)

அதைப் போன்று மற்றோரிடத்தில்,

وَمَا كَانَ لِمُؤۡمِنٍ وَّلَا مُؤۡمِنَةٍ اِذَا قَضَى اللّٰهُ وَرَسُوۡلُهٗۤ
اَمۡرًا اَنۡ يَّكُوۡنَ لَهُمُ الۡخِيَرَةُ مِنۡ اَمۡرِهِمۡ ؕ
وَمَنۡ يَّعۡصِ اللّٰهَ وَرَسُوۡلَهٗ فَقَدۡ ضَلَّ ضَلٰلًا مُّبِيۡنًا ؕ

“அல்லாஹ்வும் அவனது தூதரும் (ஏதாவது) ஒன்றுக்குத் தீர்ப்பு வழங்கி விட்டால், (அதன் பின்னர்) நம்பிக்கை கொண்ட எந்த ஆணுக்கும், நம்பிக்கை கொண்ட எந்தப் பெண்ணுக்கும், தங்கள் பிரச்சினைக்குத் தங்கள் விருப்பத்திற்கேற்ப தீர்ப்பளிப்பதற்கு உரிமையில்லை. அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்படாதவர் நிச்சயமாக மிகத் தெளிவான வழிகேட்டில் சென்று விடுகின்றார்.” (33:37)

அதேபோல், ஹதீஸில் நபித்தோழர்கள் மார்க்க விஷயங்களில் மட்டுமின்றி, உலக விஷயங்களிலும் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்றிய ஏராளமான நிகழ்வுகள் உள்ளன. இந்தப் பின்பற்றுதல் மிகவும்

முழுமையானதாக இருந்ததால், சில உலக விஷயங்களில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூற வேண்டியிருந்தது: ‘உங்கள் உலக விவகாரங்களைப் பற்றி என்னை விட உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

(சஹீஹ் முஸ்லிம் கிதாப் அல் ஃபழாயில்)

நபிமார்களுக்கு கட்டுப்படுவது எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கு கட்டுப்படுவதாகும் என்றும் அதுவே இரட்சிப்பிற்கான ஆதாரமுமாகும் என்பதைக் குறித்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்:

“இறைக் கட்டளைகளை மீறுவது பாவம் ஆகும். மேலும் அது மனிதனை நரகத்திற்கு இட்டுச் செல்லும் என்பது தீர்மானிக்கப்பட்டதும் வெளிப்படையான உண்மையுமாகும். இறைவன் தனக்குக் கட்டுப்படுவதற்குக் கட்டளையிடுவது போல, நபிக்குக் கட்டுப்படுவற்கும் கட்டளையிடுகிறான். எனவே, எவர் அவனுடைய கட்டளையை புறக்கணிக்கிறாரோ, அவர் ஒரு குற்றத்தைச் செய்த குற்றவாளி ஆவார். அதற்கான தண்டனை நரகமாகும். தனது சொந்த வெற்று தவ்ஹீதை மட்டுமே நம்பி இருக்கும் எவரும் (உண்மையில், இது தவ்ஹீது அல்ல.) தூதருக்குக் கீழ்ப்படிவதிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டதாகக் கருதி, தூதருடனான தனது உறவுகளைத் துண்டித்து, அவரிடமிருந்து தன்னை முழுமையாகப் பிரித்துக் கொண்டு, அநாகரீகமாக மீறி நடந்தால் அவர் இறைவனுக்குக் கீழ்ப்படியாதவரும் இரட்சிப்பு கிடைக்கப் பெறாதவரும் ஆவார். இறைவன் தனது இருப்பில் உள்ள நம்பிக்கையை அவனது தூதர்கள் மீதான நம்பிக்கையுடன் இணைத்துள்ளான். இதில் உள்ள இரகசியம் என்னவென்றால், ஒரு கல்லுக்குள் நெருப்பு மறைந்திருக்கும் விதத்தில் தவ்ஹீதை நம்பும் திறன் மனிதனிடத்தில் வைக்கப்பட்டுள்ளது. ஓர் இறைத் தூதர் கல்லின் மீது தனது கவனத்தைச் செலுத்தி, அந்தக் கல்லில் உள்ள மறைந்த நெருப்பை வெளியே கொண்டு வரும் ஒரு தீக்கல் போன்றவர். ஆகவே, ஒரு நபியின் தீக்கல் இல்லாமல் எந்த இதயத்திலும் தவ்ஹீதின் தீப்பொறியைப் பற்ற வைக்க முடியாது. தவ்ஹீதை பூமியில் நிலைநிறுத்துவது ஒரு நபி மட்டுமே ஆவார். அது அவரால் மட்டுமே அடையப்படுகிறது. இறைவன் மறைவானவனாவான். அவன் ஒரு நபியின் மூலமே தனது முகத்தை வெளிப்படுத்துகிறான்.”

மேலும் அன்னார் கூறினார்கள்: “இறைவனால் நியமிக்கப்பட்ட நபருக்கு கீழ்ப்படிதல் எந்த அளவு இருக்க வேண்டுமென்றால், ஒரு கட்டளை பிறப்பிக்கப்படும்போது, எதிரிகளின் தரப்பிலிருந்து வெளிப்படும் மயக்கங்கள் அல்லது தூண்டுதல்களைப் பொருட்படுத்தாமல் அல்லது அவர்கள் பயன்படுத்தக்கூடிய பணிவு, சுயமரியாதை அல்லது முகஸ்துதி போன்றவற்றிற்கு அவரது கட்டளைக்கு எதிராக முன்னுரிமை தராமல், அவற்றின் பக்கமே கவனத்தை திருப்பாமல் இருக்க வேண்டும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களால் தரப்பட்ட ஒரு குறிப்பிற்கு மாற்றமாக வெளியிலிருந்து எந்த அளவு ஆற்றல் மிகுந்த அழுத்தம் தரப்பட்டிருந்த போதிலும் அந்த அறிகுறி அல்லது குறிப்பைத் தவிர வேறு எதற்கும் சஹாபிகள் செவிசாய்த்ததாக ஒரு சம்பவத்தைக் கூட சஹாபிகளின் வாழ்வில் நீங்கள் காண




முடியாது. முழுமையான கீழ்ப்படிதல் முழுமையான வழிகாட்டுதலுக்கு வழிவகுக்கிறது. நமது ஜமாஅத்தைச் சேர்ந்தவர்கள் நன்கு செவிசாய்த்து, கிளர்ச்சியான நடத்தையில் ஈடுபடாமல் இருக்க, துஆ செய்தவாறு இறைவனிடம் பலத்தைத் தேட வேண்டும்.”

(மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 100, 2016)

எனவே, ஒரு நபிக்குக் கீழ்ப்படிவது ஈமானின் இன்றியமையாத பகுதியாகும், இது இல்லாமல் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் ஏகத்துவத்தைப் புரிந்து கொள்ளவோ அல்லது உண்மையான இரட்சிப்பை அடையவோ முடியாது.

நபிமார்களின் வாரிசுகளான கலீஃபாக்களுக்குக் கீழ்ப்படுவதைப் பொறுத்த வரை மார்க்க விஷயங்களில் நபிமார்களுக்குக் கீழ்ப்படிவது போன்றே கலீஃபாக்களுக்கு கீழ்ப்படிவதும் அவசியம் ஆகும். அதனால்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த தெளிவான சொற்களில் தம் உம்மத்திற்கு வலியுறுத்தினார்கள்:

“எனது நடைமுறையையும் சுன்னா மற்றும் நேர்வழி பெற்ற குலஃபாவின் நடைமுறையையும் பின்பற்றுங்கள். உறுதியுடனும், மிகுந்த விடாமுயற்சியுடனும் அவற்றைப் பற்றிக் கொள்ளுங்கள்.”

(சுனன் இப்னு மாஜா கிதாப் அல்-முகதிமா)

இதே முறையில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

“ஓர் இமாம் பின்பற்றப்படுவதற்காக நியமிக்கப்படுகிறார். எனவே, அவர் தக்பீர் அல்லாஹு அக்பர் சொல்லும் போது, நீங்களும் தக்பீர சொல்லுங்கள். அவர் ருகூஉவிற்காக குனியும் போது நீங்களும் குனியுங்கள். மேலும் அவர் ஸஜ்தாவில் சிரம் பணியும்போது நீங்களும் சிரம் பணிய வேண்டும்.” (சஹீஹ் அல் புகாரி கிதாப் அஸ்ஸலாஹ்)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இந்த அறிவுரைகள் தொழுகையை நடத்துவதற்கு மக்கள் தேர்ந்தெடுக்கின்ற இமாமைப் பற்றியது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறிருக்க எல்லாம் வல்ல அல்லாஹ் தனது நபிமார்களுக்குப் பிறகு மக்களின் இமாமாக நியமிக்கும் நபருக்கு (கலீஃபாவிற்கு) எந்த அளவிற்கு கீழ்ப்படிதல் வழங்கப்பட வேண்டும்? நேர்வழி காட்டப்பட்ட குலாஃபாவிற்கு

கட்டுப்படுவதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டி, ஹஸ்ரத் முதலாவது கலீ·ஃபத்துல் மஸீஹ் (ரலி) கூறுகிறார்கள்:

“உங்கள் நிலை அதைக் குளிப்பாட்டுபவர் கையில் இருக்கும் மையத்தைப் போல இருக்க வேண்டும். உங்கள் ஆசைகள் மற்றும் நோக்கங்கள் அனைத்தும் இறந்து விட்டன. மேலும் பெட்டிகள் எஞ்சினுடன் இணைக்கப்படுவதைப் போன்று, உங்கள் இமாமுடன் உங்களை நீங்கள் இணைத்துக் கொள்ள வேண்டும். பிறகு, ஒவ்வொருநாளும், நீங்கள் இருளில் இருந்து வெளிப்படுகிறீர்களா இல்லையா என்பதைக் கவனியுங்கள்.” (குத்பாத்தே நூர் பக்கம் 131)




இந்த விஷயத்தில் மற்றோர் அம்சம் என்னவென்றால் ஒரு நபியின் வாரிசான கலீ·ஃபாவுடன் ஒருவர் கருத்து வேறுபாடு கொள்ள முடியுமா என்பதாகும். இதற்கு பதில் கலீ·ஃபாவும் ஒரு மனிதரே ஆவார். ஒவ்வொரு மார்க்க மற்றும் உலக விஷயங்களிலும் அவரது ஒவ்வொரு கருத்தும் முற்றிலும் பிழையற்றதாக இருக்க வேண்டும் என்பது கட்டாயமில்லை. ஏற்கனவே மேலே தெளிவுபடுத்தப்பட்டபடி, நபிகள் நாயகம் அவர்கள் தம் தோழர்களிடம் அவர்களே அவர்களது உலக விவகாரங்களை நன்கு அறிந்தவர்கள் என்று கூறினார்கள்.

அதே போல், மற்றோர் இடத்தில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) கூறினாரகள்: “நானும் உங்களைப் போன்ற ஒரு மனிதன்தான். நீங்கள் மறப்பது போல் நானும் மறந்து விடுகிறேன். நான் மறந்து விட்டால், எனக்கு நினைவூட்டுங்கள்.” (புகாரி கிதாபுஸ் ஸலாத்)

அதே போல், ஒருவருக்கு ஒரு விஷயத்தில் கலீ·ஃபாவிடம் இருந்து மாறுபட்ட கருத்து இருந்தால், அந்த விஷயத்தை முதலில் கலீ·ஃபாவிடம் முன் வைத்து, அவர் அந்த கருத்து வேறுபாட்டைத் தெளிவுபடுத்தி தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பது நம்பிக்கை மற்றும் நேர்மையின் எதிர்பார்ப்பாகும். எவ்வாறாயினும், இந்த கருத்து வேறுபாட்டை மக்கள் மத்தியில் விளம்பரப்படுத்த அவருக்கு அனுமதியில்லை. ஏனெனில் இது ஜமாஅத்தின் ஒற்றுமைக்கு தீங்கு விளைவிக்கும். இதைப் போன்ற ஒரு கேள்விக்கு பதிலளிக்கும்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

‘எனக்கு வேறொரு எண்ணம் தெரிவிக்கப்பட்டது. அதாவது கலீ·ஃபாவுடன் கருத்து வேறுபாடு கொள்வது அனுமதிக்கப்படுகிறது. எனவே, அவருடன் எங்களுக்கு சில கருத்து வேறுபாடுகள் உள்ளன என்று சிலர் கூறுகிறார்கள். இந்த விஷயத்தை நான்தான் முதலில் முன் வைத்தேன். மேலும் கலீ·ஃபாவுடன் கருத்து வேறுபாடு கொள்வது உண்மையில் அனுமதிக்கப்படுகிறது என்பதை இப்போதும் உறுதிப்படுத்துகிறேன். இருப்பினும், ஒவ்வொரு கூற்றிற்கும் அதன் அசல் பின்னணி உள்ளது. அதற்கு அப்பால் செல்வது ஞானத்தின் அல்லது புத்திசாலித்தனத்தின் அடையாளம் அல்ல. கவனியுங்கள்! ஒரு மருத்துவரின் கருத்து எப்போதும் சரியாகவே இருக்கும் என்று யாராவது வலியுறுத்த முடியுமா? நிச்சயமாக இல்லை. மருத்துவர்கள் பலமுறை தவறு செய்கிறார்கள். இருந்த போதிலும், மருத்துவரின் கருத்து தவறாக இருக்கக்கூடும் என்பதால், நாங்கள் எங்கள் சொந்த சிகிச்சையைப் பரிந்துரைப்போம் என்று எவரும் கூறுவதில்லை. ஏன்? ஏனென்றால், ஒரு மருத்துவர் தொழிலை முறையாகக் கற்றுக் கொள்கின்றார். அவருடைய கருத்து நம்முடையதை விட உயர்ந்தது. இதே போல், வழக்கறிஞர்கள் பல தவறுகளைச் செய்கிறார்கள். ஆனால் சட்ட வழக்குகளில், அவர்களின் கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. மேலும் ஒரு துறையில் அதிக அறிவு உள்ளவர், அவர்களின் கருத்து மதிக்கப்படுகிறது. எனவே, கருத்து வேறுபாடுகளுக்கு ஓர் எல்லையும் வரம்பும் இருக்க வேண்டும்.

ஒரு கலீ·ஃபாவிடம் பைஅத் செய்பவர், இறைவனே குல·ஃபாவை நியமிக்கிறான் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். மேலும் ஒரு கலீ·ஃபாவின் பணி இரவும் பகலும் மக்களை வழிநடத்துவதும் மார்க்க விஷயங்களைச் சிந்திப்பதும் ஆகும். மார்க்க விஷயங்களில் அவரது கருத்துக்கு மதிப்பளிக்க வேண்டும். கலீ·ஃபாவிடம் கொள்ளும் கருத்து வேறுபாட்டில் தனது கருத்தே சரியானது என்பதில் ஒன்றுடன் ஒன்றைக் கூட்டினால் இரண்டு வரும் என்பதில் உள்ள உறுதி இருக்க வேண்டும். இந்த அளவு ஒருவர் தனது கருத்தில் உறுதியாக இருக்கும்போது மட்டுமே கலீ·ஃபாவுடன் கருத்து வேறுபாடு கொள்ள அனுமதிக்கப்படுகிறது. மேலும் ஒரு நிபந்தனை என்னவென்றால் அவர்கள் முதலில் இந்தக் கருத்து வேறுபாட்டை கலீ·ஃபாவின் முன் வைத்து குறிப்பிட்ட விஷயத்தில் தங்கள் சந்தேகங்களை விளக்கினால் கலீ·ஃபா அவரது அந்தசந்தேகங்களை நீக்க முடியும். இது ஒரு நோயாளி தனது அசௌகரியத்தைப் பற்றி மருத்துவரிடம் கூறுவது போலவும், நோயை மேலும் பரிசீலிக்குமாறு மருத்துவரிடம் கேட்பது போலவும் ஆகும். எனவே, கருத்து வேறுபாடு கொண்டவரின் கடமை, அவர்கள் தங்கள் கருத்து வேறுபாடுகளை கலீ·ஃபாவிடம் முன் வைக்க வேண்டும். அதை அவர்கள் பிரச்சாரம் செய்யக் கூடாது. இல்லையெனில், ஒவ்வொருவரும் தங்கள் மனதில் தோன்றுவதை வெளிப்படுத்தத் தொடங்குவது அனுமதிக்கப்பட்டதாகக் கருதப்பட்டால், இஸ்லாத்தில் எதுவும் எஞ்சியிருக்காது.

ஏனென்றால் ஒவ்வொரு நபருக்கும் சரியான முடிவை எடுக்கும் திறன் இல்லை. இல்லையெனில், நீங்கள் அமைதி அல்லது பயம் பற்றிய எந்தவொரு விஷயத்தையும் கேட்டால், அதை உங்களில் அதிகாரம் உள்ளவர்களிடம் உடனே எடுத்துச் செல்லுங்கள் என்று திருக்குர்ஆனில் கூறப்பட்டிருக்காது. அதிகாரத்தில் இருப்பவர்கள் தவறிழைப்பதில்லையா? அவர்கள் தவறிழைக்கிறார்கள்தான். ஆனால் அவர்களின் கருத்து மதிக்கப்படுகிறது. மேலும் அவர்களின் கருத்து மதிக்கப்படும்போது, குலா∴பாவின் கருத்துகளும் மதிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு நபரும் ஒவ்வொரு விஷயத்திலும் சரியான முடிவுக்கு வர முடியாது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு சம்பவத்தில் இவ்வாறு கூறியிருந்தார்கள்: "ஒருவர் இறையச்சத்திற்காக நூறு மனைவிகளை மணந்தால் அது அவருக்கு அனுமதிக்கப் -படும்." ஒருவர் இதைக் கேள்விப்பட்டு மற்றவர்களிடம் சென்று, இப்போது நான்கு மனைவிகள் என்ற எல்லை இல்லை. ஒரு நபருக்கு நூறு வரை இருக்கலாம் என்று வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள் என்று கூறலானார். இது குறித்துக் கேட்டபோது, ஒருவருடைய மனைவி இறந்து விட்டால், அவர் தனது வயதைப் பொருட்படுத்தாமல், இறையச்சத்திற்காக மீண்டும் திருமணம் செய்து கொள்ளலாம் என்று அன்னார் விளக்கினார்கள்.

எனவே, ஒவ்வொரு நபரும் ஒவ்வொரு விஷயத்தையும் சரியாகப் புரிந்து கொள்ள முடியாது. மேலும் ஜமாஅத்தின் ஒற்றுமைக்கு, ஒருவருக்கு எந்த விஷயத்திலும் கருத்து வேறுபாடு இருந்தால், அவர் கலீ∴பாவிடம் அதனை முன் வைக்க வேண்டியது அவசியம் ஆகும். ஒரு நபர் அவ்வாறு செய்யாமல், கருத்து வேறுபாடுகளை தனது இதயத்தில் வளர்த்து, அதை மக்களிடையே பரப்பினால், அவர் கிளர்ச்சியில் ஈடுபடுகிறார் என்பது வேறு பொருளாகும். அத்தகைய நபர் தம்மைத் தாமே சீர்திருத்திக் கொள்ள முற்பட வேண்டும்.' (மின்ஹாஜுத் தாலிபீன். அன்வாருல் உலூம் தொகுதி 9 பக்கம் 162-163)

ஜின்களின் விஷயத்தைப் பொறுத்தவரை, இஸ்லாமிய போதனைகளின் ஒளியில் எனது விரிவான பதில் ஏற்கனவே அல் ∴பஸ்ல் இன்டர்நேஷனல் மற்றும் வீக்லி அல் ஹகம் ஆகியவற்றில் வெளியிடப்பட்டுள்ளது. அதன் அரபி மொழிபெயர்ப்பை உங்களுக்கு அனுப்புகிறேன். தயவுசெய்து அதைப் பாருங்கள்."

(அல்ஹகம் - ஜனுவரி 12, 2024)

## கிலாஃபத்தையும் உலகத் தலைவர்களையும் ஒப்பிடவே முடியாது!

ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகின்றார்கள்:

"நோயாளிகளுக்காக துஆ செய்கின்ற உலகத் தலைவர் யார் இருக்கின்றார்? தனது சமுதாயத்தின் பெண் பிள்ளைகளின் திருமணத்திற்காக நிம்மதி இழந்தவாறு துஆ செய்கின்ற உலகத் தலைவர் யார் இருக்கின்றார்? குழந்தைகளின் கல்விக்காக கவலை கொள்ளும் தலைவர் யார் இருக்கின்றார்? அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உறுப்பினர்கள்தாம் நற்பேறு பெற்றவர்கள். அவர்கள் கல்வி கற்க வேண்டும் என்ற கவலை காலத்தின் கலீ∴பாவிற்கு இருக்கின்றது. அவர்களின் உடல் நலம் பற்றிய கவலை கலீ∴பாவுக்கு இருக்கிறது. சுருக்கமாக, உலகத்தில் பரந்து விரிந்துள்ள அஹ்மதிகளின் எந்தவொரு பிரச்சினை பற்றியும் காலத்தின் கலீ∴பாவின் பார்வையில் இல்லாமல் இல்லை. (அதாவது ஒவ்வொரு பிரச்சினை பற்றியும் காலத்தின் கலீ∴பாவின் பார்வையில் இருக்கிறது.) மேலும் அதனைத் தீர்ப்பதற்காக (கலீ∴பாவாகிய) அவர் செயல்ரீதியான முயற்சியுடன் அல்லாஹ்விடம் குனிகின்றார். அவனிடம் துஆ கேட்கின்றார். நானும் அதைத்தான் செய்து கொண்டிருக்கின்றேன். எனக்கு முன்னுள்ள கலீ∴பாக்களும் அதைத்தான் செய்து கொண்டிருந்தனர். இரவு தூங்குவதற்கு முன்னர் என் சிந்தனைக் கண் முன் வராத எந்த ஒரு நாடும் இல்லை. நான் தூங்கும்போதும் விழித்திருக்கும்போதும் துஆ செய்கின்றேன். ஏதோ நான் நன்மை செய்கிறேன் என்பதை பறைசாற்றுவதற்காக நான் இதைக் கூறவில்லை. இது எனது கடமையாகும். இதை விட அதிகமாக இந்த கடமையை நிறைவேற்றுபவனாக அல்லாஹ் என்னை ஆக்குவானாக! நான் சொல்ல வந்த கருத்து கிலா∴பத்தையும் உலகத் தலைவர்களையும் ஒப்பிட்டுப் பார்க்கவே முடியாது. அது பொதுவாகவே தவறானதாகும். சில நேரத்தில் நான் உலகத் தலைவர்களுடன் பேசும் போது எனக்கு வரும் கடிதங்(களின் எண்ணிக்கை)களைப் பற்றிக் கூறும்போதே அவர்கள் இது எப்படி முடியும் என வியப்படைகின்றனர். எனவே கலீ∴பாவிற்கும் உலகத் தலைவர்களுக்கும் உள்ள ஒப்பீடு என்ற கேள்விக்கே இடமில்லை ஜமாஅத் அதிகமாகும்போது நயவஞ்சகர்களும் தமது வேலையைச் செய்ய விரும்புகின்றனர் பொறாமைக்காரர்களும் தமது வேலையைச் செய்ய விரும்புகின்றனர். அவர்களின் சதித்திட்டங்களை எல்லா வகையிலும் தோல்வி உடையதாக ஆக்குவதே கிலா∴பத்துடன் நீங்கள் கொண்டிருக்கும் உண்மையான நன்றி உணர்வாகும். மேலும் கிலா∴பத்தின் மீது தவறான எண்ணங்களை ஏற்படுத்த சிலர் முயற்சி செய்கின்றனர். அவர்களை உங்களை நெருங்கவும் விடாதீர்கள்."

(ஜுமுஆ உரை 06.06.2014)

## கேள்வி மற்றும் பதில்

# கலீஃபாவும் முஜத்தித்தும் சம காலத்தில் இருக்க முடியுமா?



முதலாவதாக முஜத்தித் என்ற சொல் என்றால் என்ன என்பதையும் அதற்கு கலீ.ஃபாவுடன் என்ன தொடர்பு என்பதையும் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். இவை இரண்டும் இஸ்லாத்தில் பயன்படுத்தப்படுகின்ற இரண்டு வெவ்வேறு வார்த்தைகளாகும். கலீ.ஃபா என்ற சொல் திருக்குர்ஆனில் காணப்படுகின்றது. திருக்குர்ஆனில் கிலா.ஃபத் அமைப்பு பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் திருக்குர்ஆனில் எங்கேயுமே முஜத்தித்தியத் பற்றி கூறப்படவில்லை. அதிலிருந்து நாம் எதனை விளங்கிக் கொள்ள முடியும் என்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஜத்தித்தியத்தைப் பற்றிக் கூறும் பொழுது எந்தவொரு கிலா.ஃபத்தை அவர்கள் விட்டுச் சென்றார்களோ அந்தக் கிலா.ஃபத் இல்லாதிருக்கும் பொழுது கிலா.ஃபத்தின் நிலை எவ்வாறிருக்கும் என்பதைப் பற்றியே அதில் கூறுகின்றார்கள். அவர்கள் முஜத்தித்தியத்தைப் பற்றிக் கூறும்போது நான் கருதுவது என்னவென்றால், அவர்கள் கூற வருவது அடுத்து நூற்றாண்டு வரைக்கும் கிலா.ஃபத் தொடராது. எனவே, கிலா.ஃபத் அங்கு முடிவுக்கு வர வேண்டியதிருக்கின்றது. எனவே ஒரு வகையான பிரதிநிதி கிலா.ஃபத்திற்கு தேவைப்படுகின்றது. அது கிலா.ஃபத் என்ற பொதுவான சொல்லின் அடிப்படையில் இருக்கும். ஆனால் எந்தக் கிலா.ஃபத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விட்டுச் சென்றார்களோ அந்தக் கிலா.ஃபத் போன்றதல்ல. அந்தப் பிரதிநிதித்துவமே முஜத்தித்தியத் ஆகும். எனவே, எப்போது அசல் விஷயம் இருக்கின்றதோ அப்போது அதற்கு பிரதிநிதி தேவை இல்லை. உங்களுக்கு உளு செய்வதற்கு தண்ணீர் இருக்கும் பொழுது நீங்கள் தயம்மம் செய்வதில்லை. எனவே, கிலா.ஃபத்தே ராஷிதா நேர்வழி பெற்ற கிலா.ஃபத் அமைப்பு இருக்கும்போது முஜத்தித்தியத் என்ற அமைப்பு துவங்குவதற்கு எந்தவொரு சாத்தியக்கூறும் இல்லை.



எப்போது ஒரு கலீ.ஃபாவை முஜத்தித் என்று கூறலாம் என்பதைப் பற்றிய விஷயத்தை நான் பின்னர் கூறுகின்றேன். இது இவ்விஷயத்தை ஒரு கோணத்தில் பார்ப்பதாகும். இந்தக் கோணத்திற்கு ஆதரவாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய ஒரு ஹதீஸ் இருக்கின்றது. அவர்கள் ஒவ்வொரு நூற்றாண்டிலும் முஜத்தித்துகள் தோன்றுவதை முன்னறிவித்துள்ளார்கள். ஆனால் எப்போது மஸீஹ் மவ்வூது தோன்றுவார் என்று நமக்கு கூறினார்களோ அப்போது அவர்கள் கூறுகின்றார்கள்: ஸும்ம தகூனு கிலா.ஃபத்துன் அலா மின்ஹாஜின் நுபுவ்வத்தின். அதில் அவர்கள் முஜத்தித்தியத்தைப் பற்றிய குறிப்பை எங்கேயுமே கூறவில்லை. அவர்கள் முன்னறிவித்ததது என்னவென்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்குப் பிறகு கிலா.ஃபத் அலா மின்ஹாஜின் நுபுவ்வத் - நுபுவ்வத்தின் அடிச்சுவட்டில் வருகின்ற கிலா.ஃபத்தைப் பற்றி மட்டுமே அவர்கள் கூறுகின்றார்கள். நபிமார்கள் விட்டுச் செல்கின்ற கிலா.ஃபத் அமைப்பையே அவர்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள். அதுவே மீண்டும் தொடரும் என்று கூறுகின்றார்கள். எனவே இதிலிருந்து நான் கருதுவது என்னவென்றால், முஜத்தித்தியத் என்பது கிலா.ஃபத் இல்லாமல் இருக்கும் பொழுது கிலா.ஃபத்தின் ஒரு பிரதிநிதியே ஆகும். ஏனென்றால் இந்த ஹதீஸ் என்னுடைய இந்தக் கருத்திற்கு சான்று பகர்கின்றது. ஆனால் முஜத்தித்தியத் பற்றி பார்ப்பதற்கு மற்றொரு கோணமும் உள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அந்தப் பொருளையும் கையாண்டுள்ளார்கள்.

அவர்கள் கூறினார்கள்: முஜத்தித்தே அ.ஃஸம் முஜத்தித்களிலேயே மிகப் பெரியவர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்த.ஃபா (ஸல்) அவர்களே ஆவார்கள். எனவே அந்த அடிப்படையில் முதலாவது நூற்றாண்டில் அவர்களே முஜத்தித்தும் எல்லா முஜத்தித்களையும் விட எல்லாக் காலத்திலும் மிகப் பெரியவரும் ஆவார்கள். இதன் பொருள் என்னவாகின்றது என்றால், ஒருவர் எந்தவொரு குறிப்பிட்ட சீர்திருத்தத்திற்காக நியமிக்கப் -படுகின்றாரோ அல்லது பரந்த ஒரு சீர்திருத்தத்திற்காக

அல்லது ஓர் எல்லையற்ற சீர்திருத்தத்திற்காக இந்தப் பொருள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மட்டுமே பொருந்துகிறது. அவர்கள் ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு திசையிலும் எல்லாக் காலத்திற்கும் அல்லாஹ்வால் ஓர் எல்லையற்ற சீர்திருத்தத்திற்காக அனுப்பப்பட்டார்கள். அவர்கள் முஜத்தித்தினுடைய முழு நிறைவுத் தன்மையைப் பெற்றவர்களாக இருந்ததினால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அன்னாரை முஜத்தித்தே ஆ.ஃஸம் என்று கூறுகின்றார்கள். இந்த வகையில் இவ்வாறு நிகழலாம்; பல சமயங்களில் கிலா.ஃபத் அமைப்பின்போதே சில விஷயங்கள் தோன்றும். அவற்றை குறிப்பாக கவனிக்க வேண்டியது வரும். சில தவறுகள் பிழைகள் தோன்றும். கொள்கைகளில் பிழைகள் தோன்றலாம்; குறைபாடுகள் தோன்றலாம். அப்போது அல்லாஹ் ஒரு குறிப்பிட்ட கலீ.ஃபாவுக்கு இந்த வாய்ப்பைத் தந்தால் இந்த தீங்குகளுக்கு எதிராக போரிடுவதற்கு அந்தச் சொல்லின் அடிப்படையில் அவர் ஒரு முஜத்தித் ஆவார். ஆனால் கிலா.ஃபத் அமைப்பு மேலானதும் நிரந்தரமானதும் ஆகும். அது மிகவும் அடிப்படையானதும் ஆகும். கிலா.ஃபத் அமைப்பு இல்லாமல் இருக்கும்போது தோன்றுகின்ற அந்த முஜத்தித்தியத் அமைப்பு நிச்சயமாக கிலா.ஃபத் அமைப்பிற்குக் கீழ் உள்ளதாகும். நீங்கள் இதனைப் புரிந்து கொள்வீர்கள் என்று நினைக்கின்றேன்.

**தமிழில்: அபூ அப்துல்லாஹ்**

# கிலாஃபத்

உங்களுடைய நிலை இமாமின் கையில், மையத் அதனை குளிப்பாட்டு -பவரின் கையில் இருப்பதைப் போன்று இருக்க வேண்டும். உங்களுடைய அனைத்து எண்ணங்களும் விருப்பங்களும் மரணித்தவைகளாக இருக்க வேண்டும். மேலும் எவ்வாறு வண்டிகள் இஞ்சினோடு இணைந்திருக்குமோ அதே போல் நீங்கள் உங்களை இமாமுடன் இணைத்துக் கொள்ள வேண்டும். பிறகு நீங்கள் ஒவ்வொரு நாளும் இருள்களிலிருந்து வெளியேறுகிறீர்களா இல்லையா என்று பாருங்கள்.

- ஹஸ்ரத் முதலாவது கலீ.ஃபத்துல் மஸீஹ் (ரழி)

நீங்கள் நன்கு நினைவில் கொள்ளுங்கள். உங்களுடைய முன்னேற்றங்கள் கிலா.ஃபத்தைச் சார்ந்தே உள்ளன. எப்போது நீங்கள் இதை உணர மாட்டீர்களோ அதை நிலைத்திருக்கச் செய்ய மாட்டீர்களோ அந்த நாள் தான் உங்களுடைய அழிவின் நாளாகும். ஆனால் நீங்கள் இந்த உண்மையை புரிந்து கொண்டால் அதை நிலைத்திருக்க செய்வீர்கள் என்றால் பிறகு முழு உலகமும் ஒன்று சேர்ந்து உங்களை அழிக்க நினைத்தாலும் அழிக்க முடியாது.

- ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரழி)

கிலா.ஃபத்திற்கு எதிராக கண்ணியக் குறைவுடன் நடந்து கொள்பவர்களுக்கு நல்ல முடிவு கிடைத்து நான் ஒருபோதும் கண்டதில்லை.அவர்களும் அழிந்தனர். அவர்களின் சந்ததிகளும் அழிந்து போயினர். எனவே எப்போதும் முழுமையான அடி பணிதலுடன்

கிலா.ஃபத்துக்கு கட்டுப்படுவதற்கான உறுதி ஏற்க வேண்டும். மேலும் அதில் நிலைத்திருக்க வேண்டும்.

- ஹஸ்ரத் நான்காவது கலீ.ஃபத்துல் மஸீஹ் (ரஹி)

உங்களுடைய அனைத்து இறை வணக்கங்கள், உங்களது அனைத்து நன்மைகள் மற்றும் உங்களுடைய அனைத்துப் பணிகளையும் அருளுக்குரிய முடிவை எட்டச் செய்ய விரும்புகிறீர்கள் என்றால் கிலா.ஃபத்தின் மீதான அன்பு மற்றும் கண்ணியத்தை உங்களுடைய ஈமானின் அங்கமாக ஆக்கிக் கொள்ளுங்கள். இந்த விஷயத்தை நன்கு நினைவில் கொள்ளுங்கள். மேலும் உங்களுடைய சந்ததிகளின் ரத்த நாளங்களிலும் இதைப் போடுங்கள். உங்களுடைய அனைத்து முன்னேற்றங்கள் இப்போது கிலா.ஃபத்துடன் மட்டுமே இணைந்துள்ளன. அவருக்கு பின்னாலேயே செல்லுங்கள். அவருடைய சைகைகளை கட்டளைகளாக கருதுங்கள். வெற்றிகள் மற்றும் முன்னேற்றங்களின் இலக்குகள் உங்கள் பாதங்களை முத்தமிடுவதை நீங்கள் பார்ப்பீர்கள் - இன்ஷா அல்லாஹ்.

- ஹஸ்ரத் அமீருல் மு.ஃமினீன் (அய்யதஹுல்லாஹ்...)

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M.B. Tahir Ahmad | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam